Registered as a News Paper

# ஈழநாதம்

விலை: 15.00
பக்கம் : 20

வெள்ளிநாதம் Weekly

நாதம் – 14 | வெள்ளி – 37 | 07 – 13 – நவம்பர் – 2003



ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 07.11.2003
மின் அஞ்சல : Ehatham@sltnet.lk

# சமாதானம் பாடை ஏறுகிறதா?

சனாதிபதி சந்திரிகாவின் அதிரடி அரசியல் நடவடிக்கையைத் தொடர்ந்து தமிழர் வாழும் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் பதட்டமான நிலைமை ஒன்று உருவாகிவருகின்றது.

சந்திரிகா என்னதான் தான் புலிகளுடன் பேசப்போவதாகக் கூறினாலும் கதிர்காமர் புரிந்துணர்வு உடன்பாடு செல்லுபடியானதாக நடைமுறையில் தொடர்ந்து இருக்கும் என்று பத்திரிகையாளர்களுக்குப் பேட்டி கொடுத்தாலும் உருவாகிவரும் பதட்டத்தை இவைகளால் தணிக்க முடியவில்லை.

சந்திரிகா சமாதானத்தைத் தன்னால் தொடர முடியுமென்றோ, அடையமுடியுமென்றோ மக்களை நம்பவைக்க முயற்சிகள் எடுத்தால், அப்படி நம்புவிக்கமுடியுமென்று அவர் எதிர்பார்த்தால் அது ஒரு குருட்டுத்தனமான கணிப்பாகவே இருக்கும்.

ஏனெனில் 1994இல் ஏகமனதான ஆணையாகத் தெற்கில் சமாதானம் கனிந்துவந்தபோது இனப்பிரச்சினை வரலாற்றில் ஏனைய தலைவர்களோடு ஒப்பிடுகையில் சமாதானத்திற்கான காலம் அவருக்கு வாய்த்திருந்தது. மேலும் சனாதிபதித் தேர்தலில் அவர் வெற்றியீட்டியபோது பேச்சுத் தொடங்கப்பட்டிருந்த சூழலில் கிடைத்த இவ்வெற்றி சமாதானத்தை அடைவதற்கான வலிமையை அவர் கைகளுக்குக் கொடுத்திருந்தது.

ஆனால் அவர் ஒரு முதிர்ச்சியான வடிவத்தில் கூட அந்த சமாதானத்தைத் தொடங்காதது அவர் பற்றிய மதிப்பீட்டுக்கணியமாக அதுவே மாறியது, தீர்மானமெடுக்கும் அதிகாரமற்ற அரச அதிகாரிகளையே அவர் பேச்சுக்கு அனுப்பினாரே தவிர அமைச்சர்கள் மட்டத்தில்கூட அதை அணுகுவதற்கு முனையவில்லை. அதுவே அவரைக் காட்டிக்கொடுத்தது.

அதிகாரத்திற்குப் புதியவராக, புதிய வேசத்துடன், புதிய கோசத்துடன் மேடையேறிய அவர் பற்றிய மிகையான எதிர்பார்ப்புக்களை அதுவே தகர்த்தெறிந்து விட்டது.

தமிழ்மக்களால் பண்டாரநாயக்கா வாரிசாகவே பின்னர் விளங்கப்பட்டார். அவரது செயல்கள் அதனை வலுவாக நிரூபித்திருந்தன. யுத்தம் செய்து தோற்றுப்போய், களைத்துப்போய், கட்டிவளர்க்கப்பட்ட மாயைகள் தகர்ந்துபோய் இருந்தபோது புதிய மிலேனியத்தில் ஒரு மூன்றாந்தரப்பு அனுசரணையுடன் மீண்டும் ஒரு வாய்ப்பு கைக்கு வந்தது.

யதார்த்தத்தை சரிவரப் புரிந்துகொள்ளத் தவறிய அவரது மமதை மீண்டுமொரு இராணுவ முயற்சித்தலுக்குத் தூண்டி தீச்சுவாலைத் தோல்வியைச் சந்தித்துப் போரில் தனது கவசத்தையும் இழந்தவரானார். யதார்த்தத்தில் இராணுவ வலுச்சமநிலை எங்கிருக்கென்பதை இது அதிகம் நிரூபணமாக்கிற்று.

இன்று ரணில் விக்கிரமசிங்க அதிகப்படியாகச் செல்கிறார் என்று சிங்கள மக்களுக்கு விளக்கமளிக்க முனைந்தால் அதற்கான முழுக்காரணங்களையும் ஏன் நிர்ப்பந்தங்களையும் கூட உருவாக்கியவர் என்று சந்திரிகாவையும் அவரது யுத்தத் தோல்வியையும் தான் சொல்லவேண்டும்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை சந்திரிகா தனக்குக் கிடைத்த வாய்ப்பைச் சரிவரப் பயன்படுத்தவில்லை என்பது மட்டுமல்ல வரலாற்றில் மிகக் கோரமான யுத்த அனர்த்தத்தைப் பொதுமக்கள் மீது மோசமாகத் திணித்தவர். ஈழத்தமிழர்களின் வரலாறு இவரது காலத்தைப்போல் வேறு எக்காலத்திலும் இத்தனை அவலத்திற்குள்ளாகியதில்லை.

ஒப்பீட்டு ரீதியில் அதிக நம்பகத்தை வளர்த்த இம்முறைப்பேச்சிலுமிருந்த மிகப்பெரிய கரும்புள்ளி சந்திரிகா என்ற நபரும் அவரிடமிருந்த பதவியும் தான். அவர் இந்த இரண்டுவருட அமைதிக்காலத்தில் ஒவ்வொரு நகர்வின்போதும் அமைதியை அச்சுறுத்துபவராகவே இருந்துவந்தார். இன்னும் வெளிப்படையாகச் சொன்னால் இந்த இரண்டுவருடம் சமாதானம் நீளமுடிந்ததே அச்சுறுத்தும் சந்திரிகாமீது சர்வதேச சமூகத்தின் சக்திமிக்க நாடுகள் அழுத்தத்தைப் பிரயோகித்து வந்ததுதான்.

ஆனால் அவர் அவற்றையும் உதாசீனம் செய்யவேண்டிய நிலையில் பொறுமை இழந்தவராகத் தனது அதிகாரத்தின் மூலம் அதிரடி ஆட்டங்களைத் தொடங்கிவிட்டார்.

மேற்கின் கருணைக்கரங்களின் கைகொடுப்பு இல்லாமல் ஆட்சி நடத்தமுடியாது என்றிருக்கும் சூழலில் அவர்களது அழுத்தங்களையும் மீறி சந்திரிகா அடாவடி அரசியலில் இறங்கி விட்டு இராஜதந்திர வார்த்தைப் பிரயோகத்தினால் மேற்கின் கோபத்தைத் தணிக்கலாம் என்று நம்பியோ, நம்பாமலோ இதற்குத் துணிந்து விட்டாரென்றால் தமிழ் மக்கள் சமாதானம் குறித்து எதிர்பார்த்துக் காத்திருப்பதை இயல்பாயே கைவிட்டுவிடுவர்.

இப்படியிருக்க நிலைமை இவ்வாறுதான் தொடரப் போகின்றதென்றால் சந்திரிகா என்ற இந்த நபரை நம்பி புலிகள் பேச்சைத் தொடருவர் என்று நம்ப எந்த வாய்ப்புமில்லை.

## தூரனின் பார்வையில்

# 'ஹிந்து' பத்திரிகையின் விஷமப் பிரச்சாரங்கள்

**ஹிந்துத்துவம், பார்ப்பனத்துவம், இந்தியத்து வம், என்ற கோட்பாடுகளையே தனது அரசியல் சித்தாந்தத்தின் மூலதத்துவமாகக் கொண்டு இயங்கி வரும் ஹிந்து பத்திரிகையின் காங்கிரஸ் பாரம்பரிய மென்பது அனைத்து விடயங்களையும் இந்திய அபிலாஹை என்ற எல்லை வரையறைக்குள் வைத்தே மதிப்பீடு செய்யும் என்பதும் தெரிந்த விடயமே.**

இலங்கையின வடக்கையும் கிழக்கையும் ஐந்து வருடங்களுக்கு தானே ஆளுவதற்கு பிரபாகரன் முயற்சிப்பதாகவும், இலங்கையின் அரசியல் சாசனத்திற்கு முற்றிலும் ஒவ்வாத விடயங்களை விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ளதால் மீண்டும் போரை ஆரம்பிப்பதற்கு அவர்கள் மறைமுகமான அழைப்பினை விடுத்துள்ளதாகவும் இந்தியாவின் 'ஹிந்து' பத்திரிகை கருத்து வெளியிட்டுள்ளது.

இலங்கைஇனப்பிரச்சனையில் இந்த 'ஹிந்து' பத்திரிகையானது கடந்த காலங்களில் எத்தகைய கருத்தியல் நோக்கினைக் கொண்டதாகச் செயற்பட்டது என்பது விபரிக்க வேண்டிய ஒன்றல்ல.

ஹிந்துத்துவம், பார்ப்பனத்துவம், இந்தியத்துவம் என்ற கோட்பாடுகளையே தனது அரசியல் சித்தாந்தத்தின் மூலதத்துவமாகக் கொண்டு இயங்கிவரும் ஹிந்து பத்திரிகையின் காங்கிரஸ் பாரம்பரியமென்பது அனைத்து விடயங்களையும் இந்திய அபிலாஷை என்ற எல்லை வரையறைக்குள் வைத்தே மதிப்பீடு செய்யும் என்பதும் தெரிந்த விடயமே.

ஒரு பிரச்சனையின் ஆதிமூலத்தை, அதுவும் நியாயபூர்வமாக முழுமையாகப் புரிந்துகொண்டு, நடுநிலை நோக்கில் மதிப்பீடு செய்து தனது கருத்துக்களை வெளியிடும் இதழியல் பண்பாடு என்பது செய்தி பத்திரிகைகளின் மூலபலமாக இருக்கும்வரை மட்டுமே அது மக்களுக்கான உண்மைகளை வெளியிடும் பத்திரிகைகளாக அவை விளங்கமுடியும்.

சர்வதேசப்பிரச்சினைகளை அல்லது மற்றொரு நாட்டின் உள்ளகப்பிரச்சினையை குறுகிய தேசியவாத நோக்கில், நடுநிலை தவறி, உண்மைகளை மறைத்து, பொய்களை நியாயப்படுத்தும் நோக்கில், செய்திகளையோ, கருத்துக்களையோ முன்வைக்கும் ஊடகங்கள் உலகச் சமூகத்தின் பார்வையை நீதியினின்றும் விலக்கி, உண்மையைத்தவிர்த்தவிட்டு தவறான கணிப்பீட்டை மேற்கொள்ளத் தூண்டுவதாகவே அமையும்

அதுவும் மக்களிடம் நீண்டகால நம்பிக்கையையும், ஆதரவையும் பெற்ற பத்திரிகைகள், தவறான கருத்து நிலைப்பாட்டிற்கு மக்களை வழி நடத்திச் செல்லக் கூடியதாக, ஒரு சமூகத்தின், இனத்தின் ,தேசத்தினது உரிமை - விடுதலை மற்றும் போராட்டம் தொடர்பான விடயங்களில் ஒருபக்கச்சார்பான அல்லது நியாயத்திற்கு முரணான, தனிப்பட்ட அரசியல் அபிலாஷைகளுககேற்ப செய்திகளையும், ஆய்வுகளை யும் திரித்து வெளியிடுவதென் பது ஊடகவியல் சுதந்திரத்தை துஷ்பிரயோகம்செய்யும் செயற்பாடுகளேயாகும்

சிறிலங்காவின் இனப்பிரச்சினை தொடர்பான விடயங்களில் இந்தியாவின் பிரபலமான 'ஹிந்து' பத்திரிகையானது கடந்த ஒன்றரை தசாப்த காலத்திற்கும் மேலாக, அதாவது இந்திய அமைதிப்படையின் வருகையின் பின்னர்- இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினையை- அவர்களின் விடுதலைப் போராட்டத்தை- இந்திய அபிலாஷைகளுக்கேற்பவே கண்ணோட்டமிடத் தொடங்கியது

இந்திய-புலிகள் போரின் போது அது தீவிரம் கொண்டது. இந்தியப்படையின் வெளியேற்றத்தின்பின் அது 'ஹிந்து'வின் கடும்விமர்சனத்திற்கும் கண்டனத்திற்குமுரிய விடயமாயிற்று. இன்று வரை அந்த நிலையே தொடரவும் செய்கிறது. விடுதலைப் புலிகளை எதிர்ப்பது, விமர்சிப்பது என்ற ஹிந்துவின் கருத்து நிலைப்பாடானது ஒட்டுமொத்தமாக ஈழத்தமிழ் மக்களுக்கு எதிரானதாக அமைந்துள்ளதை குறிப்பிட்டேயாக வேண்டும்.

தென்பகுதியில் திவயின -ஐலண்ட் எந்த மாதிரியிலான அணுகுமுறையைக்கையாண்டு குட்டையை குழப்பி குதூகலிக்க முயல்கின்றது. அதேபோன்றதோர் அணுகுமுறையையே ஹிந்துவும் கையாண்டு இலங்கை விவகாரம் தொடர்பாக தவறான -பொய்யான - காழ்ப்புணர்வுடன்கூடிய பிரச்சாரங்களை மேற்கொண்டு இந்தியமக்களுக்கு உண்மையை திரிபுபடுத்தி வருகிறது. இடைக்கால நிர்வாக கட்டமைப்பு தொடர்பான விடுதலைப் புலிகளின் திட்டவரைபு தொடர்பாகவும் இதே குழறுபடியையே 'ஹிந்து' செய்யமுயன்றுள்ளது.


விடுதலைப்புலிகள் இடைக்கால நிர்வாக திட்டவரைபில் போரில் பாதிக்கப்பட்ட அப்பாவிப் பொதுமக்களின் இழப்புகள் உறுதி செய்யப்படும் பட்சத்தில் அவர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டுமென்று கோரப்பட்டுள்ளதை நியாயமற்ற கோரிக்கை என்று வர்ணித்துள்ள ஹிந்து வடக்கு- கிழக்கு நிர்வாக அமைப்பில்தமிழர்கள் பெரும்பான்மையாக அமைய வேண்டுமென்பதை அநீதி என்றும் குறிப்பிட்டுள்ளது.

இனவாத கட்சிகளுக்கு ஆதரவாககருத்துக்களை வெளியிட்டுள்ளதுடன் இந்திய விரோத கொள்கைகளையும் அந்த வரைபு கொண்டுள்ளதாக எழுதி இந்திய மக்களுக்கு தமிழ் மக்கள் மீது வெறுப்பை வலிந்து ஏற்படுத்த முயன்றுள்ளது.

தமிழ்மக்களின் பிரச்சினையை சர்வதேச சமூகம் நியாயபூர்வமாக புரிந்துகொள்ள முயன்றுவரும் சூழ்நிலையில் இடைக்கால நிர்வாக சபைக்கான திட்டவரைபினை சர்வதேசம் வரவேற்றுள்ள நிலையில் ஹிந்துவின் மேற்குறிப்பிட்ட கருத்து அர்த்தமிழந்ததாகி விட்டாலும், ஹிந்து மேற்கொண்டுவரும் பொய்ப் பிரச்சாரம் தமிழ் மக்களுக்கு மேலும் அதிக துன்பத்தை தரும் என்பதே உண்மையாகும்.

அதுவே 'ஹிந்து'வின் விருப்பமும் போலும்...!

# கொழும்பில் சிகல உறுமய புறமுதுகிட்ட முதல் நிகழ்ச்சி



சனாதிபதி சந்திரிகா ஒரு குண்டுத் தாக்குதலிலிருந்து மயிரிழையில் உயிர்தப்பிய இடத்துக்குக் கிட்டவாகத்தான் புதிய நகரசபை மண்டபம் அமைந்திருக்கிறது.

இதில் நிகழவிருந்த தமிழ் - சிங்கள கலைக்கூடல் பற்றி ஏற்கனவே சில கொழும்புப் பத்திரிகைகள் புரளிகளைக் கிளப்பிவிட்டிருந்தன.

இந்தக் கலைக்கூடலை ஒழுங்கு செய்திருந்த ஹிரு குழுவில் முன்பு ஜே.வி.பி.யிலிருந்து விலகியவர்களே அதிகமிருந்தனர்.

எனவே ஜே.வி.பி.யிடமிருந்தும் சிகல உறுமய போன்ற அமைப்புக்களிடமிருந்தும் கடும் எதிர்ப்பு உருவாகியிருந்த ஒரு சூழலில்தான் மாநாடு ஆரம்பமாகியது.

எதிர்ப்பார்ப்பாட்டங்களுக்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருப்பதாக செய்திகள் வெளிவந்துகொண்டிருந்த ஒரு பின்னணியில் திட்டமிடப்பட்ட நேரத்துக்கு நிகழ்ச்சிகளைத் தொடங்க முடியவில்லை.

நிகழ்ச்சிகள் பிந்தித்தொடங்கியபோது மண்டபத்துள் அமர்ந்திருந்த பார்வையாளர் மத்தியில் சுமார் ஏழு சிகல உறுமயக்காரர் ஊடுருவியிருப்பது தெரியவந்தது.

இதுகுறித்துக் கருத்துக்கூறிய ஹிரு ஏற்பாட்டாளர் லோகித பாஷன "மண்டபத்துக்குள் வரும் பிரச்சினைகளை நாம் சமாளிப்போம். மண்டபத்துக்கு வெளியே வீதியில் வரும் பிரச்சினைகளை பொலிஸ் பார்த்துக்கொண்டால் சரி" என்று கூறினார்.

நிகழ்ச்சிகள் தொடங்கிய சிறிது நேரத்தில் பிக்குகள் அமர்ந்திருந்த முன் வரிசையில் மேலும் இரு இளம் பிக்குகள் வந்தமர்ந்தார்கள். அவர்களில் ஒருவரிடம் ஒரு கையடக்கத் தொலைபேசி இருந்தது. அவர் அதில் அடிக்கடி கதைத்துக்கொண்டிருந்தார்.

முதலாவது அமர்வின் பிரதான பேச்சாளராகிய சுசரித்த கம்லத் பெருமளவுக்கு சமாதானத்தின் எதிரிகளைச் சாடிப் பேசினார். குறிப்பாக ஜே.வி.பி. கடுமையாகச் சாடப்பட்டது. மாநாட்டின் எதிரிகளை அதிகம் தனிமைப்படுத்திய. உணர்ச்சிவசப்படுத்திய அந்தப்பேச்சைத் தொடர்ந்து தமிழர் தரப்பில் செ.யோகநாதன் பேசினார்.

அவர் பேசிக்கொண்டிருந்தவேளை முன் சொன்ன இளம்பிக்கு அடிக்கடி தொலை பேசியில் யாருடனோ எதையோ கதைத்துக் கொண்டிருந்தார்.

யோகநாதனின் பேச்சில் புலிகளைச் சம்பந்தப்படுத்தும் பகுதிகள் வந்தபோது மண்டபத்தின் பின்புறத்தில் சலசலப்பு உண்டாகியது.

அங்கு ஏற்கனவே ஊடுருவியிருந்த சிகல உறுமயவினர் சத்தமிடத் தொடங்கினார்கள். அதேசமயம் வெளியே வீதியில் நின்றவர்கள் மண்டபத்துள் நுழைய எத்தனித்தார்கள்.

குழப்பம் உணடாகியதும் முன்சொன்ன இரு பிக்குகளும் திடீரென்று எழுந்து விறுவிறு என்று நடந்து மண்டபத்தின் பின் பகுதிக்குச் சென்றுவிட்டார்கள். அவர்களோடு அமர்ந்திருந்த ஒரு புரட்டஸ்தாந்து மதகுரு சொன்னார். அவர்கள் இருவரும் சிகல உறுமயவைச் சேர்ந்தவர்கள் என்று. அதாவது மாநாட்டைக் குழப்பும் திட்டத்தின் இணைப்பாளர்களா: அவர்கள் மண்டபத்தின் முன்வரிசையில் வந்தமர்ந்து அங்கிருந்து உடனுக்குடன் தகவல்களை வழங்கி. மாநாட்டின் எதிரிகளை ஒருங்கிணைத்துத் தாக்குதல்களை வழிநடத்தியுமிருக்கிறார்கள்.

மண்டபத்துக்கு வெளியே கட்டப்பட்டிருந்த பதாகைகளை அறுத்தெடுத்து ஓரிடத்தில் குவித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் வீதியால் போன ஒரு மோட்டார் சைக்கிளை மறித்து அதிலிருந்து பெற்றோலை எடுத்து ஊற்றி பதாகைகளை எரித்தார்கள். இதை அங்கேயிருந்த சிறிய எண்ணிக்கையிலான பொலிசார் பேசாமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அதை நேரில் பார்த்த கவிஞர் கருணாகரன் சொன்னார். முன்னைய கலவரங்களை அது ஞாபகப்படுத்தியது என்று.

ஆர்ப்பாட்டக்காரர்களில் திவயின பத்திரிகை நிறுவனத்தைச் சேர்ந்த சிலரும் காணப்பட்டதாக ஒரு சிங்களப் பத்திரிகையாளர் கூறினார்.

ஆனால் ஹிரு குழுவினர் இதையெல்லாம் ஏற்கனவே எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள்.அவர்களில் பலர் முன்னாள் ஜே.வி.பி.க்காரர்கள்.

எனவே ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்ட ஒரு தாக்குதல் என்பதால் அவர்கள் மிகவும் முன் ஆயத்தத்துடன் மிகவும் நிதானமாக நிலமைகளைச் சமாளித்தார்கள்.

சிகல உறுமய இப்படியொரு எதிர்த் தாக்குதலை எதிர்பார்த்திருக்கவில்லை. சமாதானத்தின் பலம் குறித்து அவர்கள் மிகக் குறைவாகவும் தமது பலம் குறித்து மிகையாகவும் மதிப்பிட்டிருந்தார்கள் போலும். திருப்பி அடி விழத்தொடங்கியதும் அவர்கள் கலைந்து ஓடினார்கள். குறிப்பாக சிகல உறுமயவின் உதவிச் செயலாளர் நிசந்த சிறிவர்ண சிங்க அடிவேகம் தாங்காது தோற்றோடினார்.

கொழும்பில் சிகல உறுமய இப்படி அடிவாங்கிப் பின்வாங்கியது இதுதான் முதற் தடவையாம். அதுவும் காயங்களுடன் புறமுது கிட்டது என்பது இதுதான் முதற்தடவையாம்.

சமாதானத்தின் எதிரிகளாய் இருப்பதாலேயே கதாநாயக அந்தஸ்தை அனுபவித்து வந்த அவர்கள் விகாரமாதேவி பூங்காவுக்கு முன்பு வைத்து திருப்பி அடிக்கப்பட்டுத் தோற்றோடிய நிகழ்ச்சி எனப்படுவது சமாதான கால அரசியல் அரங்கில் ஒரு மிக நூதனமான சம்பவம் என்று வர்ணிக்கப்பட்டது.

அடுத்த நாள் மாநாட்டைத் தொடர்வதா? இல்லையா? என்று சிறிது தயக்கம் நிலவியது.

ஆனால் சில விசயங்களை முன்னிறுத்தி மாநாட்டைத் தொடர்ந்து நடாத்துவது என்று சில தரப்பினரால் வற்புறுத்தப்பட்டது.

இதில் முதலாவதாக. மாநாட்டை இடையில் கைவிட்டால் பிறகு கொழும்பில் தமிழர்கள் எந்த ஒரு நிகழ்வையும் செய்யமுடியாத ஒருநிலை வந்துவிடும் என்பது சுட்டிக்காட்டப்பட்டது.

இரண்டாவதாக. மாநாடு தானாகக் குழம்பாமல் அதை யாராவது குழப்பி அது நிறுத்தப்படும்வரை அதைத்தொடர்வதே சமாதானத்தைப் பலப்படுத்துவதாயிருக்கும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

ஆனால் இது மற்றொரு பெரிய அளவிலான ரத்தம் சிந்தலுக்கு இட்டுச்சென்றுவிடாதா என்றொரு அச்சமும் நிலவியது.

மற்றது.பொலிஸ் பாதுகாப்பை எவ்வளவுதூரம் நம்புவது என்றும் ஐயம் தெரிவிக்கப்பட்டது.

மறுநாள். பிக்குகள் தலைமையில் ஊர்வலம் ஒன்றைச் செய்ய ஏற்பாடுகள் நடப்பதாகத் தகவல்கள் வந்துகொண்டிருந்தன.

இதுதவிர. முக்கியமாக. பாதாள உலகக் கும்பல்களை ஏவிப் பழிவாங்க முற்படலாம் என்றொரு ஊகமும் முன்வைக்கப்பட்டது.

எனினும் முடிவில் எல்லாவற்றையும் எதிர்கொள்வது என்று முடிவெடுக்கப்பட்டது.

மூடிய கதவுகளுக்குள் மாநாடு நடந்தது. ஹிரு குழுவினர் பார்வையாளர்களை நன்கு சோதித்த பின்பே உள்ளே வரவிட்டார்கள்.

மாநாட்டில் கலந்துகொண்ட தமிழர்களின் வாகனங்களுக்குப் பொலிஸ் பாதுகாப்புத் தரப்பட்டது. தமிழர்களின் வாகனங்கள் வரும்போதும் போகும் போதும் பொலிஸ் வழித்துணை வழங்கப்பட்டது.

மாநாட்டுக்கு வந்து ஒரு கைதி போலிருந்தேன் என்று ஒரு தமிழர் சொன்னார்.

அடுத்தநாள் மாநாடு நேரத்துக்குத் தொடங்கியது. பெருமளவு பொலிசார் குவிக்கப்பட்டிருந்தார்கள். பிக்குகள் தலைமையில் ஊர்வலம் நடந்தது. ஆனால் பொலிசார் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தார்கள். ஊர்வலத்தில் போனவர்கள் ஒன்று கூடியபோது அதில் பேசிய சிகல உறுமயவினர் மாநாட்டின் ஏற்பாட்டாளர்களில் ஒருவரான லோகித பாஷனவைத் தாம் பழிவாங்கப்போவதாக பகிரங்கமாகச் சூளுரைத்தார்கள்.

இரண்டாம்நாள் தொடக்கத்தில் ஒரு ஏற்பாட்டாளர் கூறியது போல அந்தப் பிரதேசம் ஒரு உயர் பாதுகாப்பு வலயம் போல இருந்தது.

வீதிகள் மூடப்பட்டிருந்தன. இதனால் மாநாட்டில் கலந்து கொண்டவர்களுக்கு குடிபானம். சாப்பாடு எதையும் நேரகாலத்துக்குக் கொண்டு வரமுடியவில்லை.

இலங்கைத்தீவில் அதுவரையிலுமிருந்த எல்லா உயர் பாதுகாப்பு வலயங்களும் யுத்த நோக்கிலானவை. படையினரைப் பாதுகாப்பதற்கானவை. ஆனால் சமாதானத்தைப் பாதுகாப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட முதலாவது உயர்பாதுகாப்பு வலயமாக அதுதான் இருக்கமுடியும்.

இரண்டாம் நாள் பகல் மாநாட்டு மண்டபம் பாதியளவே நிரம்பியிருந்தது. ஆனால் பிற்பகல் அளவில் மண்டபம் நிரம்பத் தொடங்கியது. இனி ஆபத்து இல்லை என்ற ஒருவித இறுக்கம் கலைந்த சூழல் தோன்றியதும் அந்த இடம் களைகட்டத் தொடங்கியது.

ஒரு தமிழ்ப்பத்திரிகையாளர் சொன்னார், "சிகல உறுமய இதை குழப்ப முற்பட்டிரா விட்டால் இது கொழும்பு ராமகிருஷ்ண மண்டபத்தில் நடக்கும் வழமையான ஒருநிகழ்ச்சிபோலவே சுரத்தில்லாமல் அதிகம் பரபரப்பின்றி முடிந்திருக்கும" என்று. உண்மைதான். இந்தக் கலைக்கூடலுக்குக் கிடைத்த பிரசித்தம் ஒரு விதத்தில் எதிர்மறையானது. இது சிகல உறுமய கற்பனை செய்திருக்க முடியாத ஒரு விசயம்.

அவர்களுடைய ஆர்ப்பாட்டம் மாநாட்டை பிரசித்தப் படுத்தியதுடன் தடங்கல்களைத் தாண்டி மாநாடு வெற்றிகரமாக முடித்து வைக்கப்பட்டபோது அந்த வெற்றியின் பெறுமதியும். பொலிவும் அசாதாரணமாக அதிகரித்து விட்டிருந்தன.

மாநாடு முடிந்தபின் லோகித பாஷன சொன்னார்.... "தமிழர்களைப் பாதுகாப்பதற்காகச் சிங்களவர்கள் ரத்தம் சிந்திய முதல் நிகழ்ச்சி இது" என்று. மேலும் அவர் சொன்னார்.... "இவ்வளவு காலமும் புலிகள் என்றால் தமிழர்கள் என்றுதான் கூறப்பட்டு வந்தது. இந்த மாநாட்டோடு சிங்களப் புலிகளும் இருக்கமுடியும் என்று தெரிந்து விட்டது. மாநாட்டின் எதிரிகள் எம்மைச் சிங்களப் புலிகள் என்றே முத்திரை குத்தியிருக்கிறார்கள்...ஆனால் சிங்களப் புலிகள் சமாதானத்துக்குரியவர்களே..." என்று...

மாநாட்டின் முடிவில் உரைநிகழ்த்திய பேராசிரியர் கம்லத் சொன்னார். தமிழர்களைப் பாதுகாப்பதற்காக நாங்கள் மனிதக்குண்டுகளாக மாறவும் தயார் என்று நாடகக்கலைஞர் தர்மசிறி பண்டாரநாயக்க கூறியதையே தாமும் திருப்பக் கூறுவதாக....

யுத்த வியாபாரிகள் மிகப் பலத்தோடும் பாதுகாப்போடுமிருக்கும் ஒரு தலைநகரில்

**நிலாந்தன்**

வைத்து நீதிமான்களான சில சிங்களவர்கள் சொன்னவையும். இரண்டுநாள் மாநாட்டில் நடந்து முடிந்த சம்பவங்களும் இரண்டு விசயங்களை நிரூபிப்பதாயிருந்தன.

முதலாவது. ரத்தம் சிந்தாமல் சமாதானம் இல்லை என்பது.

அதாவது. யுத்தத்துக்காகவே அதிகமதிகம் ரத்தம் சிந்திய இந்நாடு சமாதானத்துக்காகவும் ரத்தத்தைக் கேட்கிறது என்ற பயங்கரமான ஒரு செய்தி இதில் வெளிப்பட்டிருக்கிறது.

இரண்டாவது. சமாதானம் எவ்வளவு பலமாயிருக்கிறது என்பது.

இதைச் சற்று விரிவாகப்பார்க்க வேண்டும்.

மாநாட்டை இரண்டாம் நாள் தொடர்வதா? இல்லையா? என்ற கேள்வி எழுந்தபோது ஒரு கருத்து முன்வைக்கப்பட்டது. அதன்படி அரசாங்கம் இந்த மாநாட்டைக் குழப்பவிடாது என்பதே அது.

ஏனெனில் தனது தலைநகரில் சமாதானத்துக்கான ஒரு மாநாட்டைப் பாதுகாக்க முடியாத ஒரு அரசாங்கம் பிறகு எதையுமே பாதுகாக்க முடியாததாயிருக்கும். குறிப்பாக இந்த மாநாட்டில் கலந்துகொள்ள வந்த தமிழர்களுக்கு பாதுகாப்பு இல்லையென்றான பின். இந்த அரசாங்கத்தை நம்பி புலிகளோ அல்லது சமாதானத்தின் நண்பர்களோ யாருமே கொழும்புக்குப் போகத் துணியமுடியாது.

தவிர. இந்த மாநாட்டைப் பாதுகாக்கும் பொறுப்பை முழுக்க முழுக்க ஹிரு அமைப்பிடம் விட்டுவிடுவது என்பது ஒரு விதத்தில் சமாதானத்தை அரசாங்கம் அனாதையாகக் கைவிட்டது போலிருக்கும்.

எனவே. சமாதானத்துக்கான தனது விசுவாசத்தையும் கடப்பாட்டையும் நிரூபிக்க வேண்டிய ஒரு கட்டாயத்தில் அரசாங்கம் இருந்தது. உண்மையில் சிகல உறுமய கொண்டுவந்த சவால் ஹிரு ஏற்பாட்டாளர்களுக்கு மட்டும் எதிரானது அல்ல. இப்போதுள்ள அரசியல் யதார்த்தத்தின்படி அது அரசாங்கத்துக்கும் எதிரானதே. ஏனெனில் சமாதானம்தான் ரணில் அரசாங்கத்தின் பலம். எனவே அரசாங்கம் துரிதமாக முடிவெடுத்து நிலமைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டிய ஒரு களயதார்த்தம் இப்போது கொழும்பிலிருக்கிறது.

அதாவது சமாதானத்தைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு மற்றெவரையும் விட இப்பொழுது அரசாங்கத்துக்கே அதிகம் என்பது. அதுவும் சிகல உறுமய அடிவாங்கித் தோற்றோடிய ஒரு சூழலில் அடுத்நாள் பழிவாங்கல்களுக்கான ஏதுநிலைகள் அதிகம் காணப்பட்ட ஒரு பின்னணியில் மாநாட்டின் பாதுகாப்பை அரசாங்கம் கையிலெடுப்பது தவிர்க்க முடியாததாயிருந்தது.

இதெல்லாம் மாநாட்டை வெற்றியை நோக்கி இட்டுச் சென்றன.

இலங்கைத்தீவின் நவீன வரலாற்றில் குறிப்பாக ஈழப்போர் தீவிரமடைந்துவிட்ட பிறகு இப்படியொரு தமிழ் - சிங்கள சந்திப்பு பெருமெடுப்பில் நிகழ்ந்திருக்கவில்லை.

மானுடத்தின் ஒன்றுகூடல்களால் அருட்டிவிடப்பட்ட சில சிங்கள நீதிமான்களே இதை முன்னின்று நடாத்தினார்கள்.

சமாதானத்துக்காக ரத்தம் சிந்தத் தயார் என்பதை அவர்கள் செயலிலும் நிரூபித்துக் காட்டினார்கள்.

இது தமிழர்களின் இதயங்களில் எத்தகைய ரசாயன மாற்றங்களை ஏற்படுத்தியது என்பது ஒருபுறமிருக்க. சிங்கள மத்தியதர வர்க்கத்தைப் பொறுத்தவரை இது ஒருமகத்தான தொடக்கமாக மாறமுடியும்

எப்படியென்றால் ஜே.வி.பி.யின் இரண்டாவது கிளர்ச்சியின் பின் சிங்கள மத்திய தர வர்க்கம் பெருமளவிற்கு மௌனமாகி விட்டது என்று கூறப்படுகிறது.

ஜே.வி.பியா? அரசாங்கமா? என்று முடிவெடுக்க வேண்டி வந்த மிக பயங்கரமான ஒரு காலகட்டத்தில் இரண்டையுமே தெரிவு செய்ய முடியாதிருந்த சிங்கள நீதிமான்கள் சாப்பிடுவதற்கு மட்டுமே வாயைத் திறந்தார்கள்.

ஜே.வி.பி. நசுக்கப்பட்ட பின் சந்திரிகா ஆட்சிக்கு வரும் ஏதுநிலைகள் தோன்றியபோது இந்த நீதிமான்களில் ஒரு பகுதியினரும் சிங்கள மத்தியதர வர்க்கத்தின் ஒருபகுதியும் மிகுந்த எதிர்பார்ப்புக்களுடன் சந்திரிகாவை ஆதரித்தார்கள். சந்திரிக்காவுக்குச் சார்பாகத் தமது மௌனத்தை கலைத்த இவர்கள் அவருடைய வெற்றிக்காக பகிரங்கமாக பாடுபட்டார்கள்.

ஆனால் சந்திரிகாவின் முகமூடிகள் ஒவ்வொன்றாக கழன்று விழத்தொடங்கியபோது அவரை ஆதரித்த இவர்களுடைய பெயர்களும் கெடும் ஒரு நிலை தோன்றியபோது விரக்தி வசப்பட்டு மறுபடியும் உறங்குநிலைக்கு போவதைத் தவிர இவர்களுக்கு வேறு தெரிவுகள் இருக்கவில்லை. சந்திரிகா இவர்களை மிகவும் சமயோசிதமாகப் பாவித்துவிட்டு ஒருகட்டத்தில் இவர்களை நலமெடுத்துவிட்டார் என்று ஒரு சிங்கள புத்திஜீவி சொன்னார். இப்படி மறுபடியும் மத்தியவர்க்கம் மௌனமாகிவிட்ட ஒருசூழலில்தான் தென்னிலங்கையில் பாடசாலைகள். பல்கழைக்கழகங்களில் என்றுமில்லாதவாறு குழப்பங்கள் அதிகரித்து செவ்வதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

இத்தகைய ஒரு பின்னணியில் தான் கலைக் கூடல் நிகழ்ந்திருக்கிறது. இது உறங்கு நிலையிலிருந்த சிங்கள மத்தியதர வர்க்கத்தை குறிப்பாக நீதிமான்களை உசுப்பி விட்டிருப்பதுடன் அவர்களை ஓரளவிற்கு இயங்குநிலைக்கு கொண்டுவர உதவக்கூடும்.

மத்தியதர வர்க்கம் மௌனமாகிவிடும் ஒரு சமூகம். அதன் அரசியல் மற்றும் கலாச்சார அர்த்தத்தில் அழுகத் தொடங்கிவிடும்.

அப்பொழுதெல்லாம் சில நீதிமான்கள் துணிச்சலோடு ரத்தம் சிந்த முன்வரும்போது அந்த மத்தியதரவர்க்கம் தயங்கித் தயங்கி உறங்கு நிலையிலிருந்து இயங்கு நிலைக்கு வருகிறது. ஹிரு குழுவினரின் இந்தக் கலைக் கூடல் அப்படி எதையாவது செய்யுமாயிருந்தால் அது சமாதானத்தை மக்கள் மயப்படுத்துவதற்கான ஒரு மகத்தான தொடக்க அடிவைப்பாயிருக்கும். ●

தற்பெருமை,ஒருவனை ஊதச் செய்யும் ஆனால், அவனை உயர்த்தாது. - ஜான் ரஸ்கின்

# நறுக்கென....

## சந்திரிகா -ரணில் திக் விஜயங்கள்



விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக சபைக்கான திட்ட வரைபு அரசிடம் கையளிக்க முன்னரே.... பிரதமர் ரணில் அமெரிக்காவிற்குப் புறப்பட்டு விட்டார். திட்டவரைபு கையளிக்கப்பட்ட பின்னர் ஜனாதிபதி இந்தியாவிற்கு புறப்படப் போகிறார்.

இருவரின் நோக்கமும் ஒன்றுதான். இத்திட்ட வரைபு குறித்து அமெரிக்காவினதும் இந்தியாவினதும் ஆலோசனைகளைக் கேட்பது என்று நினைக்கிறீர்களா? தவறு அவர்களது விருப்பத்தைக் கேட்க.... அவர்களின் முடிவைக் கேட்க..... அவ்வளவுதான் தேசிய பிரச்சினைகளில் பரஸ்பரம் கலந்தாலோசித்து தேசிய நலனுக்குகந்ததாக தொலைநோக்குச் சிந்தனையுடன் தீர்க்கமான முடிவொன்றை எட்டும் ஆத்ம உறுதி அற்ற சுயமுரண்பாடுகளின் மூட்டைகளாகவே சிறிலங்காவின் பிரதமரும் ஜனாதிபதியும் இருக்கிறார்கள் என்பதுதான் சிறிலங்காவின் பரிதாப நிலைக்குக் காரணம்.

அமெரிக்காவும் சமாதானத்தை வலியுறுத்துகிறது, இந்தியாவும் அதனையே ஆதரிப்பதாக கூறுகிறது. அமெரிக்கா தனது அரசியல் இராணுவ அபிலாஷைகளுக்கேற்ப இலங்கையில் ஒரு சமாதானத்தை ஏற்படுத்த நினைக்கிறது. இந்தியா தனது அபிலாஷைக்கும் விருப்பத்திற்குமேற்ப ஒரு சமாதானத்தை வலியுறுத்த நினைக்கிறது. ரணில் அமெரிக்கா போனால் சந்திரிக்கா இந்தியா பறப்பார். சந்திரிக்கா அமெரிக்கா பறந்தால் ரணில் இந்தியாவிற்கு நழுவுவார்.... சுய சிந்தனையில் செயற்பட இவர்களும் துணிந்ததில்லை. அவர்களும் அனுமதித்ததில்லை.

இரட்டை ஆட்சியில் இரட்டை சமாதான அணுகுமுறைகள் ஒரு நிறுவன நீதியான தீர்வொன்றை எட்ட வழிவகுக்குமா என்பது கேள்விக் குறியே. இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அரசியல் மற்றும் இராணுவ ரீதியில் கேந்திர முக்கியத்துவமிக்க அமைவிடமொன்றில் உள்ள சிறிலங்கா இப்போது தென்னாசிய மற்றும் மேற்குலக வல்லாதிக்க சக்திகளின் கிடுக்கிப் பிடியில் சிக்கிக் கொண்டுள்ளது. அமெரிக்காவின் உலக மயமாதல் கொள்கையானது சிறிலங்காவை அதன் பொருளாதார மற்றும் வர்த்தக கொள்கைகளின் மூலம் மெல்ல மெல்ல முற்றுகையிடத் தொடங்கியுள்ள வேளையில் இந்தியா தனது சிறிலங்கா மீதான மேலாதிக்க உரிமையை மீண்டும் வலுப்படுத்தவே முனைகின்றது.

எனவே ஜனாதிபதியும் பிரதமரும் மாறி மாறி அமெரிக்கா இந்தியா என்று ஆளுக்காள் பறந்து கொண்டேயிருக்கின்றனர். எங்கெங்கு பறந்து எவர் சொல்லுக்கு கட்டுப்பட்டு இவர்கள் இங்குள்ள பிரச்சனைக்கு முடிவெடுக்கப்போகிறார்கள்.

இவர்கள் இருவருமே இலங்கையின் இறைமை, உரிமை பற்றி உள்ளூரில் வாய்கிழியப் பேசுவதில் வல்லவர்களாக இருக்கிறார்களேயொழிய வெளிநாடுகளுக்கு அவற்றை தாரைவார்த்து கொடுத்துவிடவும் தயாராக இருப்பதுதான் கோமாளித்தனமானது.

சந்திரிகா ரணில் அதிகாரப் போர் இன்னொருவகையில் இலங்கை விவகாரத்தில் அமெரிக்க - இந்திய பனிப்போர் ஒன்றிற்கு வழிவகுக்கும் போல் தெரிகிறது.

---

## இது சங்கரியார் புராணம்



தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் குழப்பம் கூடிக்கொண்டே போகிறது. உள்வீட்டுச் சண்டை தெருவீதிவரை வருமளவிற்கு நிலைமை முற்றிவிட்டதுபோல் உள்ளது.

கூட்டணியின் தலைமை அதிகாரத்தை எந்த வகையிலேனும் தக்கவைத்துக் கொள்வதில் சங்கரியார் காட்டும் தீவிரம் குழப்பத்தை நீக்கி சுமுகநிலையை ஏற்படுத்தும் செயற்பாடுகளில் காட்டுவதில்லை.

கூட்டணியின் தலைமையிலிருந்து ஆனந்த சங்கரியார் விலக்கப்பட வேண்டுமென்ற தீர்மானம் யாழ் கூட்டணி காரியாலயத்தில் எடுக்கப்பட்டதையடுத்து சங்கரியாருக்கும் ரவிராஜீக்கும் இடையே கடுமையான வாக்கு வாதம் ஏற்பட்டது.

இங்கு சுவையான விடயம் அமைதிப் பிரார்த்தனை குழப்பம் கூச்சலில் முடிந்த கூட்டமாக ஆனதேயாகும்.

விரும்பாத கதிரையில் வில்லங்கமாக இருந்தேதான் தீருவேன் என்னை யாரும் அசைக்கவே முடியாது என சங்கரியார் வீம்புத்தனம் காட்டுவதுதான் விபரீதமாகியுள்ளது.

ரவிராஜின் பின்னணியில் ஒரு சக்தி இயங்குவதாகவும் அதன் தூண்டுதலின் பேரிலேயே அவர் செயற்படுவதாகவும் சங்கரியார் கூறியுள்ளார். எனினும் அந்த சக்தி என்ன என்பதை அவர் வெளிப்படையாகத் தெரிவிக்கவில்லை.

கூட்டம் முடிந்த பின் வெளியே நின்ற சிலர் சங்கரியார் மட்டுமென்ன பின்னணிகள் எதுவுமின்றி முன்னணியில் செயற்படுகிறார் என்று சினத்துடன் கூறியபின் அவரின் பின்னணி என்னவென்று சொன்னால் அசிங்கம் என்றாராம்.

அவரின் பின்னாலும் ஏதோ ஒரு வலுவான சக்தி இருக்கிறதென்றுதானே அர்த்தம்! அதனால்தான் அந்த சக்தி ஆட்டிவைக்க அவர் ஆடுகிறார் போலும்.

ஒருசக்தி அவரை இருக்காதே போ என்கிறது. இன்னொரு சக்தி எழும்பாதே இரு என்கிறது.முதல்சக்தி கூட்டணிக்குள்ளேயே இருக்கிறது. மற்றையது கூட்டணிக்கு வெளியே சங்கரியாருக்கு பின்பலமாக இருக்கிறது. என்னவானாலும் சங்கரியாரின் நிலை சங்கடமான நிலமைதான்.

அடுக்காத வீட்டில் அடுப்படியே சரணம் என குந்தி விடலாமா?எடுத்தது தான் தான் கூட்டணியை உருவாக்கியவன் என்றும் உரிமை கோரிய ஆனந்த சங்கரியார் அதிலிருந்து தன்னை அகற்ற ஒருவராலும் முடியாதென்றும் கூறினாராம்.

என்னடா இந்த கூட்டணிக்கு வந்த சோதனை என்று எண்ணத் தோன்றுகிறதல்லவா?. தந்தை செல்வா இப்போதிருந்தால் இந்த திருநடத்தையெல்லாம் பார்த்து விட்டு "கூட்டணியை கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்" என்றுதான் கூறியிருப்பார்....

## ஜே.வி.பியினரின் குத்துக்கரணங்கள்



விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாக கட்டமைப்பு தொடர்பான திட்டவரைபில் உள்ள யோசனைகள் அரசு கூறியது போன்று சமஷ்டி அமைப்பு முறையிலோ, சனாதிபதி கூறுவது போன்று அதிகார பரவலாக்கல் திட்டத்தின் அடிப்படையிலோ அமையவில்லை என்று ஜே.வி.பி.யின் டில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

இந்த யோசனைகள் முற்றும் முழுதாக தனி நாடொன்றை அமைக்கும் நோக்கத்தையே அடித்தளமாக கொண்டுள்ளதாகவும். இந்த யோசனைகளின் அடிப்படையில் அரசுபேச்சு வார்த்தையை நடத்துவதென்பது அண்மையில் இந்தியாவுடன் இணைந்து இலங்கை மேற்கொண்டால் அது இந்தியாவை அவமதிக்கும் செயலாகுமென்றும் அவர் கூறியுள்ளார்.

அது சரி திருவாளர் சில்வா அவர்களே, முன்னர் அரசு விடுதலைப் புலிகளிடம் கையளித்த யோசனைகள் அடங்கிய வரைவு எந்த வரையறைக்குட்பட்டதென ஆய்வு செய்தீர்களா?. சமஷ்டி வரையறைக்குள்ளா? அதிகாரபரவலாக்கல் வரையறைக்குள்ளா?.

இரண்டும் கெட்டான் ஒன்றைத்தானே அரசு யோசனைகளாக முன்வைத்தது. அதனால் தானே விடுதலைப்புலிகள் ஆக்கபூர்வமான மாற்று யோசனைகளை உருவாக்கி கையளிக்க வேண்டிய தேவையேற்பட்டது.

அதுசரி சமஷ்டி அடிப்படையிலோ அதிகார பரவலாக்கல் அடிப்படையிலோ விடுதலைப் புலிகள் யோசனைகளை முன் வைத்திருந்தால் ஜே.வி.பியினர் ஏற்றுக்கொள்வார்களா என்பது அடுத்த கேள்வி.

சமஷ்டி என்ற சொல்லே அவர்களுக்கு பிடிக்காது. அதிகாரபரவலாக்கலை கை விட்டால் தான் பொ.ஜ. முன்னணியுடன் கூட்டணி வைக்க முடியும் என்றும் அவர்கள் தானே கூறியவர்கள்.

அப்படி இருக்க இப்போது அவ்விரண்டு விடயங்களையும் புலிகளின் வரைபு அடிப்படையாகக் கொள்ளவில்லை என ஏன் இவர்கள் கவலைப்படவேண்டும்.

சரி அதுதான் கிடக்கட்டும் 1980களின் இறுதியில் மேற்கொள்ளப்பட்ட இலங்கை இந்திய உடன்படிக்கையை மூர்க்கத்தனமாக எதிர்த்தவர்களும் இதே ஜே.வி.பி.யினர் தான். இப்போது மேற்கொள்ளப்பட்ட புதிய இந்திய இலங்கை உடன்பாட்டுக்கு (புலிகளின் திட்டவரைபை அரசு ஏற்றால்). அது துரோகமிழைத்தாகிவிடும். என உருகுவது ஏன்? ஏன் இந்த திடீர் இந்திய விசுவாசம்?. இப்படி இவர்கள் கொள்கை புரள்வது அவர்களின் தலைவரான ரோகண விஜேவீரவின் ஆத்மாவை அவமதித்ததாகாதா?.

இதெல்லாம் புரட்சிகர சோஷலிஸ நடவடிக்கைகளின் அம்சங்களே என்று அர்த்தம் கூறவும் ஜே.வி.பியினர் யோசிக்கப்போவதில்லை.


பதவியென்று வந்துவிட்டால் கொள்கையென்ன?கோட்பாடென்ன?

சிறிலங்காவின் பேரினவாத ஜனநாயக சோஷலிஸ நீரோட்டத்தில் இணைந்து விட்டபின் கொள்கையென்ன, கோட்பாடென்ன என்று சொல்கிறீர்களா?

அதுவும் சரிதான்.

---

## சுப்பிரமணிய ஆசாமி புராணம்....



விடுதலைப் புலிகளின் பெயரைக் கேட்டாலே ஒவ்வாமை ஏற்பட்டு கன்னா பின்னாவென்று உளறி அறிக்கை விடும் பேர்வழி ஒருவர் இந்தியாவில் இருக்கின்றார் என்றால் அது சுப்பிரமணிய சுவாமியை விட யாராக இருக்க முடியும்?

அறிக்கைகளை அச்சுறுத்தலாக அதே சமயம் அப்த்தமாக விடுவதில் அவருக்கு நிகர் அவரேதான். அணுகுண்டு போடுகிறேன் என அபாயசங்கு ஊதிவிட்டு புஸ்வாணம் விட்டு புல்லரிக்க வைக்கிறவரும் அவர்தான்.

சிறிலங்காவில் அநுரா மாதிரி இந்தியாவில் சுப்பிரமணிய சுவாமியும் ஒரு அரசியல் கோமாளியேதான்

ஒருகாலத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் பேராதரவாளர் என தன்னை இனங்காட்ட முயன்று ஈழத்தமிழ் மக்களிடையே அவருடைய அரசியல் பருப்பு அவியாததால் இந்திய அரசியல் தனத்துடன் இப்போது விடுதலைப் புலிகளை கொச்சைப்படுத்தி அறிக்கை விடுவதையே இலட்சியமாகக் கொண்டவர்.

சரி, இந்த ஆசாமியின் இயல்பே இதுதான் என வைத்துக் கொள்வோம். இப்போது இவர் இடைக்கால நிர்வாக சபை தொடர்பான விடுதலைப் புலிகளின் திட்ட வரைபு குறித்தும் அது வெளியான சூட்டுடன் திருவாய்மலர்ந்தருளியுள்ளார்.

அதாவது இத்திட்ட வரைபு ஆபத்தானதாம்! இந்த திட்டவரைபினை சிறிலங்கா அரசு ஏற்றுக்கொள்ளக் கூடாதாம். அப்படி அவர்கள் ஏற்றுக்கொண்டு அதனை நடைமுறைப்படுத்த முயன்றால் அதனால் இந்தியாவினதும் குறிப்பாக தமிழ் நாட்டினதும் பாதுகாப்புக்கு ஆபத்தானதாகி விடுமாம்.... இந்திய மத்திய அரசு இது விடயத்தில் எச்சரிக்கையாக இருக்கவேண்டுமாம்.எப்படி இருக்கிறது ஆசாமியின் அபத்த அறிக்கை பார்த்தீர்களா?

பிரச்சினை இலங்கை அரசுக்கும் ஈழத்தமிழர்களுக்கும் தான். பேச வேண்டியவர்களும் கருத்துப் பரிமாற வேண்டியவர்களும் மட்டுமல்ல ஒரு தீர்வுக்கு வர வேண்டியவர்களும் அவர்கள் தான். சர்வதேச சமூகமும் அதைத்தான் விரும்புகிறது. ஆனால் ஆசாமிக்கு மட்டும் அதில் இஷ்டமில்லை.

ஆசாமியின் ஆலாபனைக்கு கைதட்டவும் ஆட்கள் இருக்கவே செய்கிறார்கள்.அவரைப் போன்றவர்கள் எங்கும் இருப்பார்கள் தானே....! அவரைப் பொறுத்தவரை இந்தியா மீண்டும் தனது படையை சிறிலங்காவிற்கு அனுப்பவேண்டும்.... விடுதலைப் புலிகளை அழிக்கவேண்டும், பிரபாகரனை கைதுசெய்ய வேண்டும், இந்தியா தனது பொம்மையாட்சியை வடக்கு - கிழக்கில் நிறுவ வேண்டும்,...... அவ்வளவு தான்...

சாத்தியமற்றவற்றை சாத்தியமாக்க வேண்டும் என்று அறிக்கை விடுவதில் மட்டும் சாதனையாளரான சுவாமி, இந்திய அரசியலில் விலாசமிழந்து வரும் ஒருவர் என்பதே உண்மை.

சரி இப்படி இலங்கைப்பிரச்சனைக்குள் மூக்கை நுழைப்பதால் இவருக்கென்ன லாபம் என்று கேட்கிறீர்களா?

யார் யாருக்கு இவர் முகவராக இருக்கின்றார்களோ அவர்கள் இதற்காக அவரைக் கவனிக்காமலா இருக்கப் போகிறார்கள்.

-செங்குட்டுவன்-

உலக வளங்களின் மிகுதியால் வருவதல்ல செல்வம்; நிறைவு கொண்ட மனமே, செல்வம். - முகம்மது நபிகள்

# சமாதானத்திற்கான யுத்தம்

சந்திரிகா தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணி அரசு 1994 இல் ஆட்சிப்பீடமேறியபோது புலிகளுடன் நடத்திய பேச்சுக்கள் தோல்வியைத் தழுவி மூன்றாம் கட்ட ஈழப்போர் தொடங்கியபோது சந்திரிகா அரசு மூன்றாம் கட்ட ஈழப்போருக்கு சூட்டிய மகுடம் சமாதானத்திற்கான யுத்தம் என்பதாகவே இருந்தது.

ஆனால் உண்மையில் சந்திரிகா மூன்றாம் கட்ட ஈழப்போரில் சூட்டிய சமாதானத்துக்கான யுத்தம் என்பது அதுவல்ல.

புலிகளால் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான (ISGA) திட்ட வரைபினை ஐக்கிய தேசிய முன்னணி அரசிடம் சமர்ப்பித்திருக்கும் பின்னணியில் தமிழர் தரப்பு எதிர்கொள்ளப்போவதே சமாதானத்துக்கான யுத்தம். அதாவது இலங்கையின் சனாதிபதி பிரகடனப்படுத்தியிருப்பது சமாதானத்துக்கான எதிர்யுத்தம்

இது இப்போது உத்தியோக பூர்வமாக பிரகடனப்படுத்தப்படாமல் நடைமுறைக்கு வரத் தொடங்கிவிட்டது. இனி தமிழர் தரப்பு மேற்கொள்ளப்போகும் எல்லா நடவடிக்கை களுமே சமாதானத்திற்கான யுத்தமாகவே இருக்கப் போகிறது.

ஏனென்றால் தமிழர்கள் சமாதானத்துக் காகவும் போராட வேண்டியிருக்கிறது.இது ஒரு வகையான குருதி சிந்தியும், சிந்தாமலும் எதிர்கொள்ளப்போகும் சனநாயகப்போர்.

இந்த நிலையில் புலிகள் ஏறத்தாள மூன்று வருடங்களாக சர்வதேச அனுசரணை நாடொன்றின் உதவியோடு அரசோடு பேச்சுக்களை நடத்திவருகின்றனர். ஆனால் தற்போது ஐக்கிய தேசிய முன்னணி அரசின் பலம் பொருந்திய தூண்களாக கருதக்கூடிய மூன்று முக்கிய அமைச்சுக்களான திலக் மாரப்பனவிடம் இருந்த பாதுகாப்பு அமைச்சும், ஜோண் அமரதுங்காவிடமிருந்த உள்துறை அமைச்சும், இம்தியாஸ் பார்க்கிர் மாக் காரிடமிருந்த மக்கள் தொடர்பாடல் அமைச்சு என்பன சனாதிபதி சந்திரிகாவினால் பறிக் கப்பட்டுவிட்டன.

இந்தப் பின்னணியில் ரணில் விக்கிரம சிங்கவின் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசு மிகவும் பலவீனப்பட்டு விட்டது.

இதன்மூலம் இதுவரைகாலமும் இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக் குழு வின் மேற்பார்வையில் கட்டிக்காக்கப்பட்ட யுத்தநிறுத்தத்திற்கும் அபாயம் சூழ்ந்து விட்டதா கவே கருத இடமுண்டு.

சனாதிபதி சந்திரிகா ஆரம்பத்தி லிருந்தே திட்டமிட்ட ரீதியில் சமாதானத்துக் கான எதிர் வியூகத்தையும் ரணில் விக்கிரம சிங்க அரசுக்கு எதிரான நடவடிக்கைகளையும் முடுக்கிவிட்டிருந்தார்.

இதன் படிகளாகத்தான் நோர்வே சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மை ஓரங் கட்ட முயன்றதும், இலங்கைக்கான நோர்வே தூதுவராக இருந்த ஜோண்வெஸ்பேர்க்கை வெளியேற்றியமையும் பின்னர் இறுதியாக கண்காணிப்புக் குழுத்தலைவர் ரிக்வே ரெலிவ்சனை வெளியேற்றுமாறும், அவர் புலிகளுக்கு உளவு வேலை பார்ப்பதாக பொய்யான பிரச்சாரத்தை மேற்கொண்டிருந் தமையும் நோக்க வேண்டும்.

இதன் மூலம் நோர்வே நாட்டிற்கு சர்வதேச ரீதியில் இருக்கின்ற நற்பெயருக்கு பங்கத்தை ஏற்படுத்துவதன் மூலம் அந்த நாட்டை சமாதான முயற்சிகளிலிருந்து பின்வாங்கச் செய்வதன் மூலம் அரசை பல வீனமாக்குவதற்கான முயற்சி.

இன்னொரு புறத்தில் அமைச்சு பொறுப்புக்களை சனாதிபதிக்கு இருக்கின்ற நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி பறிப்பதன் மூலம் ரணிலின் அரசை பலவீனமாக்கு கின்ற முயற்சி.










இவ்வாறு தென்னி லங்கையில் சமாதானத்திற்கு எதிரான பாரிய சூழ்ச்சிவலை பின்னத்தொடங்கப்பட்டு விட்டது. இந்த நிலையை பொதுவாகவே எதிர்பார்க்கப் பட்டதுதான்.

ஆனால் ரணிலின் அரசிற்கும் சந்திரிகாவிற்கும் இடையிலான இழுபறி முறுகு நிலையின் இடையில் தமிழ் மக்களிற்கான தீர்வு நசிவுண்டு கிடக்கிறது.

உண்மை யதார்த்தத்தின் படி தமிழர் தரப்பிற்கான எத்தகைய தீர்வுகள் முன்வைக் கப்பட்டாலும் அவை ஒன்றின் பாதயாத்திரை கள் மூலமாகவோ அல்லது இடைநடுவில் இனவாத கூச்சல்களினாலோ கிழித்தெறியப் படுவதே வரலாறு.

இந்த நிலையில் புலிகளால் முதல் முதலில் வரலாற்றில் திட்டவரைபொன்று இடைக்கால தன்னாட்சி அதிகார சபையின் வரைவு சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் சூழ்நிலையில் தென்னிலங்கை மைய அரசியலில் கூச்சலும் குழப்பமும் தொடங்கிவிட்டது.

எப்போதும் புலிகள் தென்னிலங்கை மைய அரசியலில் தொடரும் குழப்பங்களை சட்டை செய்வதில்லை ஏனென்றால் தமிழ் மக்களிற்கான எத்தகைய தீர்வுகளும் தென்னி லங்கையிலிருக்கும் எத்தரப்பும் தயார் இல்லை என்பதை தெளிவாகவே புரிந்து வைத்திருக் கிறார்கள்.

ஆனால் இதனை சர்வதேசம் தமிழர்களின் அரைநூற்றாண்டு காலத்திற்கு மேற்பட்ட அவலங்களைத் தெரிந்துகொண்ட பின்னும் புரிந்து கொண்டுள்ளதா? என்பது தெரியவில்லை.

இந்த நிலையில் தென்னிலங்கை மைய அரசியல் குழப்பம் தொடர்பாக வன்னியிலிருக்கும் புலிகளின் தலைமைப் பீடம் எந்தவிதமான எதிர் விளைவுகளையும் வெளிப்படுத்தும் என எதிர்பார்க்கமுடி யாது.

ஆனால் தொடரும் சமாதான முயற்சியில் இது பாரிய பங்கத்தை எற்படுத்தவே செய்யும் என்று எதிர்பார்க்கலாம்.

இந்த வகையில் சனாதிபதி சந்திரிகா மேற்கொண்டிருக்கும் நடவடிக்கை தொடர்பாக இந்தக்கட்டுரை எழுதப்படும்வரை அமைச்சு மாற்றங்கள் தொடர்பான தகவல் மட்டுமே வெளியாகியுள்ளது.

**சிறி. இந்திரகுமார்**

இனி அமெரிக்காவிலிருந்து வரும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பிய வுடன் மேற்கொள்ளப்போகும் நடவடிக்கைகள் இலங்கையில் புதிய ஆட்சிமாற்றத்திற்கா அல்லது புதிய தேர்தல் ஒன்றிற்கா வழிவகுக்கப் போகிறது என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

இதற்கிடையில் எதிர்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ விரைவில் ஆட்சிமாற்றம் ஒன்று நடைபெறவுள்ளதென சனாதிபதியின் நடவடிக்கையின் பின்னர் தெரிவித்துள்ளார்.

எது எப்படியோ பாதுகாப்பு அமைச்சை பொறுப்பேற்கும் சனாதிபதி சந்திரிகா, யுத்த நிறுத்த உடன்படிக்கையினை எந்தளவுக்கு மதித்து நடக்கப் போகிறார் என்பதே இப்பொழுது சமாதான விரும்பிகள் எழுப்பும் பெரும் கேள்வி.

ஏனென்றால் அரசிற்கும் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை யில் கையெழுத்திடுவதற்கு இறுதி நேரத்தில் சனாதிபதி சந்திரிகா மறுத்து பின்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே கையெழுத்திட்டார்.

அதன்பின்னரும் புரிந்துணர்வு ஒப்பந் தத்தை மீறும் வகையிலாக கட்டளைகளை யும் புலிகளை ஒருதலைப்பட்சமாக யுத்தத் திற்கு தூண்டும் வகையிலான செயற்பாடுகளை யுமே அவர் மேற்கொண்டார்.

இந்த வகையில் இந்த ஒப்பந்தத் திற்கு அவர் எவ்வாறு மதிப்பளிப்பார் என எதிர் பார்க்க முடியும்.

அதுவும் நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் என தெரிவித்திருக்கும் சனாதிபதி புலிகளோடு வலுச்சண்டைக்கு முப்படைகளை தூண்டமாட்டார் என்பது என்ன உத்தரவாதம்.

எல்லாமாக சனாதிபதி சந்திரிகா புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு சோதனையையும், நோர்வே அனுசரணையாளர்களுக்கு வேதனை யையும் ஏற்படுத்தி சமாதானத்திற்கு சங்கடங் களை தோற்றுவிக்கப்போகிறார்.

இதன் மூலம் சனாதிபதி சர்வதேச சமூகத்தையும் மோதுவதற்கு தயாராகி விட்டார் போலவே தெரிகிறது.

இந்த வகையில் புலிகள் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான திட்ட வரைபை சமர்ப்பித்திருக்கும் நிலையில் சர்வதேச சக்திகளின் கவனத்தை மேலும் ஈர்க்கும் வகையில் சமாதானத்திற்கான யுத்தத்தை எப்படி கையாளப் போகி றார்கள் என்பது விரைவிலேயே தெரிந்துவிடும்.

ஆனால் ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசு தனது வரவு -செலவு திட்ட அறிக்கையை சமர்ப்பிக்கப் போராடப் போகிறதா? அல்லது பறிபோன தனது அமைச்சுப் பொறுப்புக்களையும், அடுத்த சனாதிபதி தேர்தல் வரை ஆட்சியை இழுத்துச் செல்லுதற்கும் போராடப்போகிறதா?

எல்லாமாக சர்வதேச சமூகம் இதற்கு வெளியில் சர்வதேச சமூகத்தின் பார்வைக்காக நிற்கும் தமிழர் பிரச்சனைக்கான தீர்வாக சர்வ தேச சமூகம் எதனை அழுத்தப்போகிறது என்ற கேள்வியுடன் நிற்கும்போது ரணிலின் அரசை காப்பாற்றும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளப்போகிறதா?

இந்தநிலையில் இத்தனைகால சமாதான அறுவடையின் பயனாக பெறப்பட்ட நிதி பெட்டகம் மூலம் ரணில் இந்த வரவு-செலவுத்திட்டத்தில் பல கவர்ச்சிகர சலுகை களை அறிவித்துவிட்டால் ரணிலின் ஆட்சி ஆயுள் அதிகரித்துவிடுமெனக்கருதி சந்திரிகா இந்த முயற்சியை மேற்கொண்டாரா என்பதெல்லாம் மிக விரைவிலேயே தெரிந்து விடும்.

ஆயினும் தமிழர் தரப்பு சமாதானத்துக் கான யுத்தத்திற்கு தயாராக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. ●

## மதவடி மயிலர்



**செய்தி :-** *கூட்டணியின் தலைமைப் பதவியிலிருந்து ஆனந்த சங்கரி உடனடியாக விலகவேண்டும் - மட்டக் களப்பு கூட்டணிக்கிளை தீர்மானம்.*

**மயிலர் :-** சங்கரியாருக்கு இது ஆனந்தம் தரும் சங்கதி இல்லை பாருங்கோ கூட்டணி போ போ என்கிறது, மாற்றணிகள் நில் நில் என்கின்றன. எதற்கும் டில்லி போய் யோசனை கேட்பது நல்லது என்று சங்கரியார் நினைக்கலாம். யாழ் மாவட்ட பிரதிநிதி கொழும் பில் இருந்து கொண்டு டில்லியின் சொற்படி நடக்கிறார் என்றெல்லே எல்லோரும் பகிரங்கமாகக் கதைக்கினம் பாருங்கோ......! அயலகக் கூட்டு ஐயா பதவிக்கே வேட்டு... என்ன சொல்லுறீங்க.

**செய்தி :-** *இயல்பு நிலையினைக்கொண்டு வருவதே இடைக்கால நிர்வாக சபையின் நோக்கம்..... சந்திரசேகரன் தெரிவிப்பு.*

**மயிலர் :-** அதை எப்படியாவது தடுப்பதும் குழப்புவதும் தான் சிங்கள இனவாத அரசியல் வாதிகளின் நோக்கம் என்றும் அவர் சொல்லியிருக்க வேண்டும் பாருங்கோ.... அவர்களின் இயல்பே இப்படியிருக்கையில் இயல்பு நிலையை எப்படிக் கொண்டுவர முடியுமாம்.

**செய்தி :-** *அரசாங்க எதிர்ப்பு பேரணியில் கதிர்காமரின் பாதுகாப்பு அதிகரிப்பு...*

**மயிலர் :-** அரசாங்கத்தை பாதுகாப்புடன் எதிர்க்க புறப்பட்டிருக்கிறார் கதிர்காமர் பாருங்கோ.... பாவம் தள்ளாத வயதிலை பொல்லாத வேலைக்கெல்லாம் புறப்பட்டிருக்கிறார் பாருங்கோ..... நன்றியும் விசுவாசமும் வேணும் தான் ஆனா அதற்காக இப்படி அஞ்சி அஞ்சி வாலாட்டக் கூடாது பாருங்கோ..... அதிக பாதுகாப்பு என்பது அதிக பயத்தின் எதிரொலி பாருங்கோ.

**செய்தி :-** *சிறிலங்கா பொலிஸ் அதிகாரிகளுக்குப் பயிற்சியளிக்க மூன்று நாடுகளின் நிபுணர்கள் வருகை.*

**மயிலர் :-** எந்த நாட்டிலிருந்து எத்தகைய நிபுணர்கள் வந்து பயிற்சி அளித்தாலும்... மன்னார் பாலியல் வல்லுறவு சம்பவங்களைப் போல் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது பாருங்கோ... யார் என்ன செய்தாலும் நாய் வாலை நிமிர்த்த முடியாது பாருங்கோ.....

**செய்தி :-** *பச்சோந்தி அரசாங்கத்தை அமைக்க ஜே.வி.பி. ஒருபோதும் ஆதரவளிக்காது என்கிறார் ரில்வின் சில்வா.*

**மயிலர் :-** பச்சோந்தி அரசாங்கத்தை அமைக்க உதவாமல் செஞ்சோந்தி அரசை அமைக்க உதவப்போயினமாமே... தனியாக அரசமைக்கும் திராணியற்று கூட்டணியமைக்க கூட்டாளிகளை தேடிக்கொண்டு அலைஞ்சு மந்திரி பதவிகளுக்கு பேரம் பேசி தோத்தவைக்கு கொள்கை வேறு இருக்கே... பேச்சுப்பல்லக்கு தோழர் கால்நடை எண்ட கதைதான் பாருங்கோ.



**செய்தி :-** *விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாக கட்டமைப்பு குறித்த திட்ட வரைபு மாற்றுத்திட்ட யோசனைகளை ரவூப் ஹக்கீமிடம் கோருகிறார் ரணில்.*

**மயிலர் :-** இப்ப ஹக்கீமிடம் கேட்கிறார் அடுத்து ஜே.வி.பி. யிடம் கேட்பார், பிறகு சிஹல உறுமய, பிக்குகள் முன்னணி, என அனைவரிடமும் கேட்பார்....கடைசியாக இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன் என எல்லாரிடமும் கூட கேட்பார்... இப்படியே ஒரு மாதிரி காலத்தை கடத்த நினைக்கிறார் போல கிடக்கு பாருங்கோ....

☞ தவிர்க்க முடியாத தீங்கைத் துணிவுடன் தாங்குவதன் மூலம் தான், வெல்ல முடியும். - பழமொழி

நேர்நோக்கு

# தென்பகுதி ஊடகங்களின் கேள்வி

தமிழ் மக்கள் மீதான ஒடுக்கு முறைக்கு எதிராக 25 வருடங்களுக்கும் மேலாக ஆயுதம் ஏந்திப் போராடிவந்த விடுதலைப் புலிகள் இப்போது சமாதான வழியில் அரசியல் ரீதியாக தமிழ் மக்களின் உரிமைகளைப் பெறும் முயற்சியில் முக்கிய ஒரு நடவடிக்கையாக இடைக்காலத் தன்னாட்சிக் கட்டமைப்புத் திட்ட வரைவொன்றை முன் வைத்திருக்கிறார்கள்.

இது சமாதான முயற்சிகளின் மற்றொரு தரப்பான ஐக்கிய தேசியக் கட்சியிடம் உத்தியோக பூர்வமாகக் கையளிக்கப் பட்டுள்ள போதிலும், இது ஓர் இரகசிய ஆவணமாக வைக்கப் பட்டிருக்கவில்லை. மறுதினம் உள்ளூர், அனைத்துலக ஊடகவியலாளர்கள்அழைக்கப்பட்டு, இலங்கைக்கும் அனைத்துலகத்துக்கும் பகிரங்கப்படுத்தப்படும் வகையில் விடுதலைப்புலிகளால் வெளியிடப்பட்டிருக்கிறது.

இதன் மூலம் விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் உடனடி மனிதாபிமான நடவடிக்கைகளுக்குத்தேவையான அதிகாரங்கள் எவை? என்பதை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.


இதுதொடர்பாக நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில், தென்பகுதி அரசியலில் நிலவுகின்ற அதிகாரப்போட்டி-சனாதிபதிக்கும் பாராளுமன்றத்துக்கும் இடையே நிலவுகின்ற கடுமையான முரண்பாடு இந்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைத் திட்டவரைவின் நிறைவேற்றத்தை அனுமதிக்குமா? இவ்வரைவானது அரசியல் யாப்புக்கு முரண்படுகிறதா? சிறிலங்காவின் அரசியல் யாப்பை வேண்டுமென்றே மீறுகின்ற வகையில் இந்தத் திட்டவரைவுகள் தயாரிக்கப்பட்டனவா? போன்ற பல கேள்விகள் எழுப்பப்பட்டன.

பெரும்பான்மையான கேள்விகளின் அடி நாதமாக தென்னிலங்கையிலுள்ள அதிகாரப் போட்டி சமாதான முயற்சிகள் தொடர இடமளிக்குமா? என்பதாகவே இருந்தது.

தென்னிலங்கையின் அதிகாரப்போட்டி என்பது இலங்கையின் இனப்பிரச்சினை கொழுந்துவிட்டு எரிந்து பெரும் யுத்தத்தில் இலங்கை சிக்கிக் கொள்ள எவ்வளவு தூரம் காரணமாக இருந்தது என்பதை விபரிக்கத் தேவையில்லை. அதேவேளை கடந்த ஐம்பது வருடங்களாக இலங்கையில் நடைமுறையில் இருந்த அரசிலமைப்புகளும் அவற்றைச் செயற்படுத்தி வந்த அரசாங்கங்கள் நடந்துகொண்ட முறையும் வெளிப்படையானவிடயங்களே. இதனை அன்றைய ஊடகவியலாளர் சந்திப்பில் அரசியல் துறைப் பொறுப்பாளர் விரிவாக விளக்கினார்.

இப்பொழுது இந்த சமாதான நடவடிக்கையில் ஊடகவியலாளர்கள் எத்தகைய பங்கு வகிக்கப்போகிறார்கள்? குறிப்பாக தென்பகுதி மக்களிடையே சமாதான முயற்சிகளை எவ்வகையில் முன்னெடுக்கப் போகிறார்கள் என்ற கேள்வி எழுகின்றது.

தற்போது மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகள் ஒரு முக்கியமான கட்டத்தை வந்தடைந்திருப்பதை எவராலும் மறுக்கமுடியாது. அதாவது தமிழ்மக்களின் சார்பில் விடுதலைப் புலிகள் சமாதான முயற்சிகளுக்கு ஒரு முக்கிய நகர்வை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.



இந்நகர்வுக்குக் கிடைக்கப்போகின்ற பிரதிபலிப்பு எதிர்கால நகர்வுகளுக்கும் இறுதிக்கட்ட தீர்வுக்கும் முக்கியமான ஒன்றாக அமையப் போகின்றது. இந்நகர்விற்கு கிடைக்கின்ற வெற்றியானது தமிழ்மக்களுக்கு மட்டுமல்ல இலங்கை முழுவதிலும் வாழும் மக்களுக்குக் கிடைக்கின்ற வெற்றியாகவே அமையப் போகின்றது.

விடுதலைப் புலிகள் தாம் சமர்ப்பித்திருக்கின்ற வரைவு குறித்து தெளிவின்மைகள், சந்தேகங்களை தெளிவுபடுத்த நேரடிப்பேச்சு வார்த்தைக்கு தயாராகவுள்ளதாகவும் அறிவித்திருக்கிறார்கள்.

ஆனால் சிறிலங்காவின் பிரதான எதிர்கட்சிகளான சிறிலங்கா சுதந்திர கட்சியும் ஜே.வி.பி.யும் சிகல உறுமய போன்ற இனவாத சக்திகளும் இந்த நகர்வை எதிர்த்து தீவிர நடவடிக்கைகளில் இறங்குவதற்கான அறிகுறிகளே காணப்படுகின்றன. இது எதிர்பாராததுமல்ல.

இந்நிலையில் தென்பகுதி ஊடகங்கள் தென்பகுதி மக்களுக்கு எத்தகைய கருத்தை வழங்கப்போகின்றன? அம்மக்கள் மத்தியிலே எத்தகைய கருத்துருவாக்கத்தை ஏற்படுத்தப்போகின்றன என்பது முக்கியமானதாகும்.

சிறிலங்காவில் இன்று நடைமுறையிலுள்ள அரசியல் யாப்பு முதலாவது யாப்பு அல்ல, குடியரசாகிய பின்பு கூட இது இரண்டாவது யாப்பாகும். அதேவேளை இந்த அரசியல் யாப்புக்கு அது உருவாக்கப்பட்டு 26வருடங்களில் இதுவரை 17திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. அதாவது யாப்புக்கு முரணாக 17சட்ட மூலங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளன. இவற்றிலே தமிழ் மக்களின் போராட்டத்தை ஒடுக்குவதற்கான ஆறாவது திருத்தச்சட்டத்தின் மூலமும் ஜே. ஆர்-ராஜீவ் ஒப்பந்தத்தின் கீழான 13வது திருத்தச்சட்டமும் அடங்குகின்றன. இப் 17திருத்தச் சட்டங்களில் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சிகளும் இணைந்து நிறைவேற்றிய திருத்தங்களும் உள்ளன.

இவ்வாறான நிலையில், புலிகள் தமிழ் மக்களின் சார்பில் முன்வைத்துள்ள திட்டவரைவுக்காக அரசியல் அமைப்பில் ஏன் திருத்தங்களை முன்வைக்க முடியாது?.

இதற்கு எதிர்க்கட்சிகளும் இனவாதிகளும் தான் எதிர்ப்பாயின் அவர்களுக்கெதிரான கருத்துருவாக்கத்தை மக்கள் மத்தியிலே உருவாக்கவேண்டிய சமாதானம் விரும்பும் அமைப்புக்களினதும், ஊடகங்களினதும் பொறுப்பாகும்.

இப்பொழுது தென்னிலங்கையில் சில சமாதானம் விரும்பும் அமைப்புகளும், ஊடகங்களும் தமிழ்மக்களின் போராட்டத்தின் நியாயத் தன்மையைப் புரிந்துகொண்டு ஆதரவுக்குரலெழுப்ப முன்வந்திருக்கின்றன. இந்தச்சக்திகள் பலப்படுவதும் பலப்படுத்தப்படுவதுமே இலங்கையில் அமைதி நிலவவும். இறையாண்மை பாதுகாக்கப்படவும் இலங்கையின் பாதுகாப்புப் பலப்படவும் உதவுவதாக அமையும்.

**வேலவன்**

# கடற்தொழிலாளர்களின் இன்னல்கள் எப்போது தீரும்?

**மீனவர்கள்** கடலில் மீன் பிடிக்க பாஸ் அனுமதி வேண்டும். குறிப்பிட்ட கடல் எல்லைக்குள் தான் மீன் பிடிக்கவேண்டும், இரவு நேரங்களில் மீன்பிடிக்கு செல்ல முடியாது, பாஸை தெளிவாக தொங்கவிடவேண்டும் என மீனவர் மீதான கெடுபிடி அளவிட முடியாதவை.

இவற்றை விட வடக்கு கிழக்கு கடற்பிரதேசத்தில் இந்திய மீனவர்களின் அத்துமீறல் இன்னொரு புறம் என துயரம் நீண்டுகொண்டே செல்கிறது.

ஆனால் இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்துகொள்வதற்கும், பொருளாதார ஒப்பந்தம் செய்து கொள்வதற்கும் கூடிய கவனம் செலுத்தும் அரசு, மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைக்கு தீர்வுகாண கவனம் செலுத்துவதாக இல்லை.

இந்த நிலையில் போர், கெடுபிடிக்குள் இருந்து இந்த சமாதான காலத்திலாவது பொருளாதார ரீதியான நன்மைகளை பெற ஏதாவது வழிகிடைக்குமா! என்று தமது தொழிலில் ஈடுபட முயலும் மீனவர்களுக்கு எந்த வழியும் கிடைப்பதாய் இல்லை.

அண்மையில் மீண்டும் இந்திய மீனவர்கள் அத்துமீறி கடற்தொழிலில் ஈடுபடும் நடவடிக்கைகள் அதிகரிக்கத் தொடங்கியுள்ளதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பாக மீனவர்கள் வழக்கு தொடர்ந்துள்ளனர்.

இந்த மீனவர்களின் நெருக்கடிகளுக்கு நீதி மன்றமோ அரசோ தீர்வு எதனையும் வழங்குமென எதிர்பார்க்க முடியாது.

ஏனென்றால் எப்பொழுதுமே தமிழ் மீனவர்களின் துயரங்களிற்கு தீர்வு எதனையும் வழங்குவதற்கு அவர்கள் அக்கறை செலுத்தியதாக இல்லை.

ஆனால் மீனவர்கள் தமது துயரங்களிற்கு உரிய தீர்வு எதையாவது பெற்றுவிடவேண்டும் என்ற நோக்கில் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் தீர்வுகள் எவையும் கிடைக்காத இந்த மீனவர்களின் நெருக்கடிகள் தீர்க்கப்பட வேண்டுமானால், தமிழர் பிரதேசங்களிலிருந்து இராணுவ நெருக்குவாரங்கள் களையப்பட்டு, மீனவர்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதிக்கப் படவேண்டும்.

அத்தோடு இந்திய மீனவர்கள் பெருமெடுப்பிலான அத்துமீறல்களால் அழிக்கப்படும் கடல் வளங்களும் காப்பாற்றப்பட வேண்டும்.

ஏனென்றால் பாரிய ரோலர்கள் மூலம் பெரும்தொகையில் உள்நுளையும் இந்திய மீனவர்களின் பிரவேசத்தால் இங்கு காணப்படும் அரிய கடல்வளம் அழிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலை தொடர்ந்து செல்லுமாயின் நீண்ட கால அடிப்படையில் எமது கடல் வளம் அழிக்கப்பட்டுவிடும்.

அத்தோடு எமது மீனவர்களின் வாழ்க்கைத்தரம் மிக நீளமாக பாதிக்கப்பட்டு தமது ஜீவனோபாயத்திற்கே அல்லாட வேண்டிய நிலை ஏற்பட்டாலும் ஏற்படும்.

யுத்தம் ஒழிந்து சமாதான சூழல் நிலவும் இன்றைய காலப்பகுதியில் புனர்வாழ்வு நிவாரணம் என இந்த மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

பதிலாக இந்த மீனவர்களின் தொழில் செய்யும் உரிமைகளை பாதிப்பதோடு அவர்களின் வாழ்விடங்களிலிருந்து வெளியேற்றி அந்த இடங்களில் படையினர் முகாம் அமைத்துக் கொண்டு மீனவர்களுக்கு துன்பங்களை விளைவித்து



வருகின்றனர்.

இந்நிலையில் மீனவர்களின் வளமான வாழ்விற்கு அரசும் அரச படைகளும் ஏற்படுத்தியுள்ள நெருக்குவாரங்களை களைய முன்வருமா?

தென்னிலங்கையில் சமாதானத்தின் பலாபலன்களை எல்லா மக்களும் அனுபவித்துக்கொண்டிருக்க அதன் மூலம் ஏற்பட்டுள்ள அனுகூலங்களை பெற்றுக்கொள்ள இங்குள்ள மக்களின் நிலையோ இன்னும் போராட்டங்களுக்குள்ளேயே இருக்கின்றது.

ஆனால் அரசோ பல்வேறு கவர்ச்சிகரமான திட்டங்களை தீட்டுவதும் உயர் பாதுகாப்பு வலயம் எனவும் அவை இராணுவப்பாதுகாப்பு சம்பந்தமான விவகாரங்கள் என உள்ளடக்கியும் தமது ஆட்சிக்காலத்தை ஓட்டினால் போதும் என செயற்பட்டு வருகிறது.

இந்த நிலையில் பாதிக்கப்பட்டுள்ள மீனவர்களின் அவலநிலை உடனடியாக முடிவுக்கு வரக்கூடியதாக ஏதாவது உருப்படியான திட்டங்களை முன்வைக்க வேண்டிய பாரிய பொறுப்பு அரசுக்கு உண்டு.

பதிலாக அரசு இன்னமும் கண்மூடித்தனமாக செயற்பட முனையுமாயின் மீனவர்களின் வெகுஜனப் போராட்டங்கள் வன்முறைகளாக மாறினாலும் அதற்கு அரசே பொறுப்பேற்கவேண்டும்.

அதற்கு எந்தவகையிலும் மீனவர்கள் பொறுப்பாளிகளாக இருக்க முடியாது.

நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் சமமாக மதிக்கப்படவேண்டியதும் அவர்களுக்கே உரித்தான உரிமைகளை பெற்றுக்கொள்ள ஆவணசெய்யவேண்டியதும் அரசினது கடமையாகும்.


ஆனால் இலங்கையில் தொடரும் இனப்பூசல்களுக்கு அரசினுடைய பாகுபாடான அரசாட்சியும் ஓரவஞ்சனைகளுமே இருக்கின்றன.

இந்த நிலையில் மீனவர்களின் வளம்பொருந்திய வாழ்க்கைக்கு அரசு உருப்படியாக எந்தத் தீர்வை எப்போது கொண்டுவரப் போகிறது இதுவே விடைதெரியாத கேள்வியாக உள்ளது.

இந்த நிலையில் மீனவர்களின் எதிர்காலம் பெரும் நெருக்கடியை எதிர்கொள்ளத் தக்க வகையிலேயே தொடர்ச்சியான சம்பவங்கள் நடந்து வருகின்றன.

இந்த நிலையில் தமிழ் மீனவர்கள் எல்லாத் தளைகளிலிருந்தும் விடுபட்டு அவர்களின் துன்பங்கள் எப்போது களையப்படும் என்பது தெளிவாகவில்லை.

**சீலன்**



# இந்துசமுத்திரத்தின் சின்னஞ்சிறிய தீவு சுயாட்சியால் பெருமை கொள்கிறது...!

றொட்றிகஸ் தீவு இதுவரை அறியப்படாதிருப்பது போலவே மாசுபடுத்தப்படாமலும் இருந்து வருகிறது.

மொரிஷியஸின் ஒரு பகுதியாக இருக்கும் இந்த (இந்து சமுத்திரத்து)சின்னஞ் சிறிய தீவின் வாழ்க்கைமுறை பல தசாப்தங்களாக மாற்றமடையாமலே இருக்கிறது.

மீனவர்கள் தங்கள் வலைகளை நீலக்கடலில் வீசுகிறார்கள். ஆடுகளும் மாடுகளும் கடல்வரை பரந்திருக்கும் செழுமையான பச்சை நிற மலைச்சாரல்களில் மேய்கின்றன. தங்களிடமுள்ள சிறந்த ஆடைகளை அணிந்து ஞாயிற்றுக்கிழமைகளில் ஆலயம் செல்வது பெரிய விடயமாக இன்னமும் கருதப்படுகிறது. சேவல் கூவுவதோடு உள்ளூர் மக்கள் விழித்துக்கொள்கிறார்கள். 1958ம் ஆண்டு வரை அங்கு கார் அறிமுகமாகவில்லை. இதனால் இங்கு ஒரே ஒரு பதிவு செய்யப்பட்ட வாடகைக் கார்தான் இருக்கிறதென்பது உங்களுக்கு வியப்பூட்டப்போவதில்லை.

மொறிஷியஸில் இருந்து வட கிழக்காக 560கி.மீ (350 மைல்கள்) தூரத்தில் இந்து சமுத்திரத்தில் அமைந்திருக்கும் றொட்றிகஸ் தீவானது, அநேகமான சந்தர்ப்பங்களில் மொறிஷியஸின் "மறக்கப்பட்டு விட்ட இளைய சகோதரி" என்று குறிப்பிடப்படுகிறது.

சீனி, புடவை உற்பத்திகள் மற்றும் சுற்றுலாத் துறைகள் உதவியால் கடந்த 30 வருடங்களாக செழித்தோங்கும் பொருண்மியத்தை மொறிஷியஸ் அனுபவித்து வந்தாலும், குண்டும்குழியுமான வீதிகள், மோசமான நீர் வழங்கல், அடிக்கடி நிகழும் மின் தடைகள் ஆகியவற்றோடு அல்லாட றொட்றிகஸ் நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தது.

தொலைக்காட்சி ஒளிபரப்புகள் கூட மொறிஷியஸ்சிற்கு 24மணிநேரத்திற்கு தாமதித்தே அங்கு வருகின்றன. மொறிஷியஸில் ஒளிபரப்பு முடிந்து அடுத்த நாள்தான் அந்த வீடியோ நாடாக்கள் றொட்றிகஸ்சிற்கு விமானத்தில் எடுத்துச்செல்லப்பட்டு ஒளிபரப்பப் படுகின்றன.

ஆனால் கடந்த எட்டு மாதங்களாக றொட்றிகஸ்சுக்கு புதிய வாழ்வு ஒன்று கொடுக்கப்பட்டிருக்கிறது. வீதிகளும், வீடுகளும் நிர்ணயிக்கப்படுகின்றன. புதிய வர்த்தகங்கள் தோன்ற தொடங்கியிருக்கின்றன. 18கி.மீ (12மைல்கள்) நீளமும் அதனுடைய ஆக அகலமான இடத்தில் 8கி.மீ (5மைல்கள்) அகலமும் கொண்ட இத் தீவுக்கு சர்வதேச விமான போக்குவரத்துகளை மேற்கொள்ள திட்டங்கள் தீட்டப்படுகின்றன.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதத்திலே தனது தலை விதியை தானே நிர்ணயிக்கும் வாய்ப்பை றொட்றிகஸ்சுக்கு வழங்க மொறிஷியஸ் அரசு தீர்மானித்தது தான் இந்த மாற்றத்தை ஆரம்பித்து வைத்தது என்று அந்த தீவு வாசிகள் சொல்கிறார்கள்.

மொறிஷியஸின் சனத்தொகையான 1.2 மில்லியனின் 3 விழுக்காடு அளவினரான (45,000)மக்களை மட்டும் கொண்ட றொட்றிகஸ்சுக்கு விவசாயம், மீன்பிடி, சுற்றுலாத்துறைகளை விருத்திசெய்யப் பயன்படுத்தவென அது கோரிய நிறைவேற்று மற்றும் சட்டவாக்க அதிகாரம் கொண்ட பிராந்திய அவையொன்று வழங்கப்பட்டுள்ளது.

18 உறுப்பினர்கள் கொண்ட இந்த அவைக்கு, முன்னாள் மதகுருவும் றொட்றிகஸ் மக்கள் அமைப்பு (OPR)என்ற அரசியல் கட்சியின் தலைவருமான சேர்ஜ்கிளெயர்(Serge Clair) பிரதம ஆணையாளராக தெரிவுசெய்யப் பட்டுள்ளார்.

"சுயாட்சியை பெறுவதென்பது றொட்றிகஸ்சைப் பொறுத்தவரை ஒரு வரலாற்றுப்புகழ் பெற்ற நிகழ்வாகும். இறுதியாக இப்போதுதான், எமது தீவை எவ்வாறு நிர்வகிக்க வேண்டும் என்பதையும் இங்கு எந்த விதிகளும் சட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதையும் நிர்ணயிக்கும் சுதந்திரம் எமக்கு கிட்டியுள்ளது." என்று கிளெயர் கூறினார்.

எமது தீவின் அமைதியைக் குலைக்க "இங்கு மேற்கொள்ளப்படும் அபிவிருத்திகள் எமது தீவின் அமைதியைக் குலைக்க இடம் கொடுக்காமலும் எமது வாழ்க்கை முறையின் அழகை விட்டுக்கொடுக்காமலும் எமது மக்கள் சௌகரியமாக வாழவேண்டும் என்று நாம் நின்னைக்கின்றோம்" என்று அவர் மேலும் கூறினார்.

பொருண்மிய மற்றும் சமூக மேம்பாட்டு அதிகாரங்கள் இன்னமும் மொறிஷியஸ் வசமே இருக்கின்றன. றொட்றிகஸ்சின் வருடாந்த பாதீட்டுத் தொகையான 1.1 மில்லியன் ரூபாய்கள் (37.74மில்லியன் டொலர்கள்) போட்லூயியில் இருக்கும் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்படவேண்டும்.

மொறிஷியஸ்சும் அதன் வெளி எல்லைத் தீவுகளும் பிரித்தானியா விடமிருந்து சுதந்திரம் பெற்ற 1968ம் ஆண்டிலிருந்து, மொறிஷியஸ்சுக்கு சொந்தமான மூன்று மஸ்கறீன் தீவுகளில் ஆகச்சிறியதான றொட்றிகஸ், மொறி ஷியஸ்சின் உள்ள பாராளுமன்றத்தால் நிறைவேற்றப் பட்ட சட்டங்களையே பின்பற்றிவந்தது.

மொறிஷியஸ்சுக்கும் றொட்றிகஸ்சுக்கு மிடையேயான வேறுபாடென்று சொல்வதால், றொட்றிகஸ்சைவிட அதிக தொழிற்றுறை மயப்பட்ட மொறிஷியஸின் தொழில் சட்டங்கள் பெரும்பாலும் விவசாயிகளையும், மீனவர்களையும் கொண்ட தூங்கு மூஞ்சி றொட்றிகஸ்சிற்கு பொருத்தமாக இல்லாததைக் குறிப்பிடலாம்.

ஆபிரிக்க அடிமைகளின் வாரிசுகளை 93 விழுக்காட்டு அளவில் கொண்ட றொட்றிகஸ்சின் கலாச்சாரமும் பெரும்பாலும் ஒப்பந்த வேலையாட்களாக வந்த இந்தியர்களின் வாரிசுகளைக்கொண்ட மொறிஷியஸ்சின் கலாச்சாரத்திலிருந்து வேறுபட்டதாகும்.

நன்றி: றோய்ட்டர்ஸ்

மொழியாக்கம் :- அனபாயன்

# அபிவிருத்திக்காக ஏங்கும் மடுக்கரைக் கிராமம்

*மன்னாரில்* மடுக்கரை என்று ஒரு கிராமம். நானாட்டான் உதவி அரச அதிபர் பிரிவில் மன்னாரிலுள்ள பாரிய குளமான கட்டுக்கரை குளத்திற்கு நீரைச்சேர்க்கும் அருவியாற்றின் கரையில் அமைந்துள்ளதுதான் இந்தக்கிராமம்.

மிகப்பெரிய கிராமமாக உருவாக்கப்பட்டுள்ள போதிலும் உருவாக்கப்பட்டபின் இக்கிராமம் சம்பந்தப்பட்டவர்களால் முழுமையான அபிவிருத்தி உள்வாங்கப்படாததுதான் இந்தக்கட்டுரையை எழுதத்தூண்டியதற்கான காரணம்.

காட்டுப்பிரதேசமொன்றை குடியிருப்புக்கென அழித்து உருவாக்கப் பட்டதுதான் இந்த கிராம வரலாற்றின் ஆரம்பம். காட்டு வாசிகள் எனக் கூறப்படுகின்ற ஓரிரண்டு குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் இந்தக்கிராமத்தின் வாசிகளாகியுள்ளனர்.இவர்கள் இந்தக் கிராமத்தின் ஆரம்பக்குடிகள்.

இதன் பின்பு படிப்படியாக அப்பகுதியில் காணியற்றவர்களாக இருந்த மக்களும் உள்வாங்கப்பட்டு குடியேற்றப் பட்டதோடு இக்காட்டுப்பகுதி ஒரு கிராமம் என்ற தோற்றம் உருவாகியது உண்மைதான்.

அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று இந்தக்கிராமத்தில் செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. வாழ்விழந்த வாழ்க்கையில் முன்னேறுவதற்கு படிக்கல் அகப்படாத மக்களுக்கு வாழ்வளிக்கும் நோக்கினை தாரக மந்திரமாகக் கொண்டுதான் அரச சார்பற்ற நிறுவனங்கள் தாம் உதவி புரிய முன் வந்துள்ளோம் என்ற தொனியில்பணியாற்ற முற்பட்டுள்ளன என்பதற்கு இந்த நிறுவனம் நல்ல உதாரணம்.

உண்மை என்னவென்றால் ஒவ்வொரு அரச சார்பற்ற நிறுவனமும் தனது இலக்கைக் குறியாகக்கொண்டு மக்களுக்கு சேவை செய்கிறோம் என்ற போர்வையில் களமிறங்கியுள்ளதை அனைவரும் அறிந்திருக்க வாய்ப்பில்லை.இந்த அடிப்படையிலேயே இந்தக் கிராமத்தை தனது இலக்குக் கிராமமாக தெரிவு செய்துள்ள குறிப்பிட்ட அரசசார்பற்ற நிறுவனம் தனது இலக்கைபூர்த்தி செய்வதில் மட்டும் ஆர்வம் காட்டுவதாக குடியமர்ந்துள்ள மக்கள் பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர்.

ஆரம்பத்தில் ஒரு சில குடும்பங்கள் குடியேற்றப்பட்டபின்பு இக்கிராம மக்களுக்கு வீட்டுத்திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டது. வீடுகள் கட்டி ஆறு மாதங்களில் மழையில் நனைந்து நீரில் கரைந்து "குட்டிச்சுவர்களாக" காட்சியளிக்கின்றன. ஒரு குடும்பத்திற்கு ஒன்றரை ஏக்கர் வீதம் காணிகள் வழங்கப்பட்டு ஏறத்தாள நூற்றியிருபது குடும்பங்கள் ஆரம்பக்கட்டத்திலேயே குடியமர்த் தப்பட்டுள்ளன.


இதன் பின்பு வவுனியாவிலுள்ள சிதம்பரபுரம் நலன்புரி நிலையத்தில் இருந்து 75ற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இந்தக்கிராமத்தில் குடியமர்த்தப் பட்டுள்ளனர். இதனை E.P.D.P தனது அப்போதைய அரசியல் இலாபம் கருதி தேர்தல்செல்வாக்கு பெறுவதற்காக மேற் கொண்டிருந்ததாக குடியேற்றவாசிகள் கூறுகின்றனர். இவர்களுக்கும் ஒரு ஏக்கர் வீதம் காணிகள் அக்கிராமத்தில் வழங்கப் பட்டுள்ளன.

E.P.D.P. யினரின் அரசியல் தோல்வியின் பின்னர் இந்த மக்களும் கைவிடப்பட்டுவிட்டனர். தற்போது மிகப்பெரிய கிராமமாக காட்சியளிக்கும் இக்கிராமத்திற்கு சுயதொழில் கடன் ஏனைய சுயதொழில் ஊக்குவிப்பு மேலும் வீட்டுத்திட்டம் என்பன குறிப்பிட்ட அரச சார்பற்று வழங்கப்படும் என உறுதி யளிக்கபட்டிருந்த போதிலும் அதுவும் கைவிடப்பட்டுள்ளது. தற்போது இக்கிராம மக்களின் நிலை"அதோ கதி" என்ற நிலையில் மக்கள் தமது உள்ளக் குமுறல்களை வெளிப்படுத்த வழிதெரியாது தவிக்கின்றனர்.

மக்களின் குடியேற்றத்தின் பின் அங்கு வேறொரு நிறுவனத்தால் அரச உதவியுடன் அமைக்கப்பட்ட பாடசாலை சீமெந்து கட்டடமொன்றில் இயங்கினாலும் கூட அது அங்குள்ள மாணவர்களின் இடத்தேவையை பூர்த்திசெய்யும் வகையில் இல்லை. வேலிகள் அற்ற நிலையில். குடிநீர் வசதிகள் செய்து கொடுக்கப்படாத நிலையில். மலசல கூட வசதிகள் செய்துகொடுக்கப்படாத நிலையில் எவ்வாறு மாணவர்கள் மகிழ்ச்சிகரமான கற்றலில் ஈடுபடுவது. எவ்வாறு ஆசிரியர்கள் தமது கற்பித்தல் செயற்பாட்டை முழுமையாக மேற் கொள்வது.

இதனால் இக்கிராமத்திற்கு வெளியிலிருந்து இப்பாடசாலையில் கற்பிக்க ஆசிரிய குழாம் தயக்கம் காட்டி வருகின்றது. இது ஒருவகையில் ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயமும் கூட. ஆசிரியர்கள் விடுதி, அதிபர் விடுதி என்பன இதுவரை அங்கு இல்லை. ஏழு ஆசிரியர்கள் கற்பிக்கும் இப்பாடசாலையில் நான்கு பேர் தொண்டர் ஆசிரியர்கள். தொண்டர் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவும் உரியமுறையில் வழங்கப்படுவதில்லை. (இது தொண்டர் ஆசிரியை ஒருவரின் கருத்து) அதிலும் ஒருவர் பகுதி நேர ஆங்கில ஆசிரியர். இவர்கள் அனைவரும் இக்கிராமத்துக்கு வெளியில் இருந்தே கற்பித்தலுக்கு வருகின்றனர்.

மாணவர்கள்தொகை அதிகரித்துள்ளதால் மேலதிக கட்டட வசதிகள் இங்கில்லை. வானம் தெரியும் ஓலைக் கொட்டில் ஒன்று இதனை ஈடுசெய்கின்றது. பள்ளி மாணவர்கள் விளையாட்டுத் துறையில் ஆர்வம் காட்டுவதில்லை, காரணம், விளையாட்டு உபகரண மின்மை, ஆசிரியர் பற்றாக்குறை என அதிபர் ஜேசுதாசன் பீரிஸ் குறைபாடுகளை அடுக்கிக்கொண்டேயிருந்தார்.



சுற்றுலா சென்ற போது மடுக்கரை மாணவர்கள் (இடம் மிகிந்தலை)

இந்தக்கிராமத்திற்கு மன்னார் நகரிலிருந்து பேருந்து சேவை ஒன்று இருந்தது. அதுவும் தற்போது இல்லை. மக்களின் அன்றாட தேவைகளுக்கு உயர்பள்ளி மாணவர்களின் போக்கு வரவு. நோயாளர்கள். கர்ப்பிணித்தாய்மார்கள் போன்றோர் பெரும் சிரமத்திற்கு உள்ளாகி வருவதாக கற்பிணித்தாயொருவர் கண்ணீர்மல்க கூறினார்.

இலக்குக்கிராமமாக இக்கிராமத்தை தெரிவுசெய்த நிறுவனம் தனது இலக்கை மட்டும் பூர்த்திசெய்து வருவதாக விசயம் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

விவசாய உற்பத்தியை ஊக்குவிக்க நீர் இறைக்கும் இயந்திரங்கள் பெற்றுத்தருவதாக உறுதியளித்துள்ள இந்த நிறுவனம் அந்த உறுதி நீரில் கரைந்து விட்ட நிலையில் மக்கள் விவசாய முயற்சியினை மேற்கொள்ளமுடியாதுள்ளனர். அவ்வாறு ஆர்வமுள்ள விவசாயிகள் சுயமுயற்சியால் விவசாய உற்பத்தியில் ஈடுபட்டாலும் அதனை சந்தைப் படுத்த போக்குவரவு வசதியின்றி இருக்கின்றனர். கிணற்றுத் தவளைகளாக இருக்கும் இம் மக்கள் அடுத்த கட்ட நடவடிக்கையினை மேற்கொள்ளமுடியாதுள்ளனர்.

அதிபரின் முயற்சியால் இக் கிராம பாடசாலை மாணவர்கள் ஒருநாள் சுற்றுலா ஒன்றுக்கு அழைத்துச் செல்வதற்கு குறிப்பிட்ட நிறுவனம் நிதிவசதி தருவதாகக் கூறி பின்பு செலவீனத்தின் ஒரு பகுதியைமட்டும் தந்ததாக பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினரும் பாடசாலை சமூகத்தினரும் விசனத்துடன் கூறினார்கள். இந்தக்கிராமத்தின் பக்கம் இப்பொழுது சிலரின் பார்வை திரும்பியிருக்கலாம்.

மக்களின் தேவைகளை உண்மையாக நேசிக்கும் நிறுவனங்களின் பார்வை இதன்பால் திரும்பவேண்டும். அல்லது சம்மந்தப்பட்ட அரச அதிகாரிகள் இக்கிராமத்தின் தேவைகளை பகுப்பாய்வுசெய்து துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் இல்லையேல் அரச சார்பற்ற நிறுவனங்கள் இந்தக் கிராமத்துக்கு துரோகம் இழைப்பதான ஒரு பார்வையையே தோற்றுவிக்கும்- மடுக்கரைக்கு மறுவாழ்வு எப்போது கிடைக்கும்

எஸ்.வி.ஆர்.கஜன்.

ஒருநாள் சினம், நூறாண்டுச் சிறப்பை மறைத்து விடுகிறது. - திபெத் நாட்டுப் பழமொழி

# விகாரங்களை அழகியலாக்கும் ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை முறை

**ஆங்கிலத்தில்** பிளாஸ் ரிக் சேர் ஜரி (PLASTIC SURGERY)எனப்படும் சத்திர சிகிச்சை முறை தமிழில் ஒட்டு உறுப்பு, அறுவை சிகிச்சை என்று அழைக்கப்படுகிறது. உலக மருத்துவத்தில் இது முக்கிய இடம் வகிக்கின்றது.பெருமளவு நிபுணர்கள் இந்த வகை சிகிச்சைமுறை மூலம் மக்களுக்குச் சேவையாற்றுவதோடு தமது பேரையும் செல்வத்தையும் வளர்க்கின்றனர்.

பிளாஸ்ரிக் சேர்ஜரி எனப்படும் உடலின் வெளிப்புறத்தில் செய்யப்படும் திருத்துமுறைகள் இந்தியாவில் பிறந்ததாக வரலாற்றாய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். வேத காலத்தில் வாழ்ந்த சத்திர சிகிச்சை பிதாமகர் சுசுருதர் வெளிப்புற திருத்தத்தைக் குறியாக கொண்ட பிளாஸ்ரிக் சேர்ஜரியையும் தோற்றுவித்தார் என்று நம்பப்படுகிறது. பிளாஸ்ரிக் என்ற ஆங்கில சொல்லிற்கு உருவாக்குதல் என்று பொருள்கொள்ளலாம்.

பிளாஸ்ரிக் சேர்ஜரியின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் மனிதகுலத்தின் அழகு உணர்ச்சியும் அழகாக உடலை வைத்திருக்கவேண்டும் என்ற வேணவாவும் முக்கிய காரணங்களாக அமைகின்றன. அது மாத்திரமல்ல பிளாஸ்ரிக் சேர்ஜரி செய்யவேண்டிய அத்தியாவசிய தேவைகளும் இருக்கின்றன. சுசுருதர் இத்துறையில் பிரவேசிப்பதற்கு ஒரு வரலாற்று நிகழ்ச்சி உதாரணமாக கூறப்படுகின்றது.

புராதன இந்தியாவின் வடக்கில் வாழ்ந்த பெண்களை தண்டிக்கும் ஒரு குரூரமுறை முன்னொரு காலத்தில் இருந்தது. தண்டனைக்கு இலக்காகும் பெண்களின் மூக்கு நுனியை கூரிய கத்தியால் ஆண்கள் வெட்டி எடுத்து விடுவார்கள். இதனால் அப்பெண்கள நிரந்தர அவமானம் அடைவார்கள். இதைப் பொறுக்க முடியாத பாதிக்கப்பட்ட பெண்கள் தமக்கு உதவும்படி சத்திர சிகிச்சை நிபுணர் சுசுருதரைக் கூட்டாக வேண்டினர். நெற்றி, கன்னம் போன்றவற்றில் இருந்து பாதிக்கப்பட்ட பெண்ணின் சிறிது தோல் தசையை எடுத்து அவர் மூக்கு நுனியில் திரட்டி ஒட்டினார். அதன்பின் அந்த மூக்கு பழைய உருவத்தை மீண்டும் பெற்றது.

இன்றும் பிளாஸ்ரிக் சேர்ஜரி மூக்குத் திருத்தத்தில் கவனம் செலுத்துகின்றது. இந்திய திரைப்பட நடிகை சிறிதேவி நியூயோர்க் நகரில் தொழிலாற்றும் பிளாஸ்ரிக் நிபுணர் சண்முகத்தின் உதவியுடன் தனது சற்றுப் பருத்த மூக்கை சரி செய்துள்ளார். மூக்கு சம்பந்தமான சத்திர சிகிச்சையை இத்துறைசார் நிபுணர்கள் ஆங்கிலத்தில் (NOSE JOB) மூக்கு வேலை என்று அழைக்கிறார்கள். கெம்பீரமான மூக்கு ஆண்,பெண் இருபாலாருக்கும் ஒரு கொடையாக அமையும்.

முகத்தின் அழகு மூக்கில் தெரியும். ஒருபெண்ணைப் பார்த்து மூக்கும் முழியுமாக இருக்கிறாள் என்று,அதாவது அழகாக இருக்கிறாள் என்று சொல்வார்கள். அவ்வளவு முக்கியத்துவம் மூக்கிற்கு. மேற்குநாட்டு பெண்களின் மூக்கு நேராக நிமிர்ந்து, நுனி சற்று தூக்கலாக இருக்கும். நாசித்துவாரம் இரண்டும் வெளிப்படையாகத் தெரியும். மூக்கு நுனி சரிந்துள்ள பெண்கள் நிபுணர்களை நாடித் திருத்தம் செய்விப்பார்கள். சப்பை மூக்கு உள்ள பெண்களும் கூரிய மூக்கை பெற்றுக்கொள்கிறார்கள் நிபுணர் உதவியுடன்.


பிறஇனங்களுடன்கலவாத கிரேக்க நாட்டுப் பெண்களின் மூக்கு மிகவும் வித்தியாசமானது. அவர்களுடைய மூக்கு நெற்றிப் பொட்டின் கீழ் ஆரம்பித்து கீழ் நோக்கி வரும்.கண்கள் இரண்டிற்கும் இடையில் மூக்கின் அடிப்பாகத்திற்கு மேலுள்ள வழமையான பதிவு அவர்களுக்கு கிட்டத்தட்ட இருப்பதில்லை. இது வேறுவிதமான அழகு பார்த்து மெய்மறந்து இருக்கலாம்.

பெண்கள் தான் தமது மூக்குப் பற்றி கவலைப்படுகிறார்கள் என்றில்லை. பிரபல பொப் இசைப் பாடகர் மைக்கேல் ஜாக்சன் தனது மூக்கை பலமுறை விதம் விதமாக திருத்தியமைத்துள்ளார். ஈற்றில் அவருடைய மூக்கின் தசை தனது பிடிப்பை இழந்து வீழ்ந்து விட்டதாகவும் செய்திகள் கூறுகின்றன. பெண்களுக்கு நிகராக ஆண்களும் உடல் அழகில் கவனம் செலுத்துகிறார்கள் என்பதில் ஐயமில்லை.

பரந்த சத்திர சிகிச்சைத் துறையின் ஒரு முக்கிய அங்கமாக பிளாஸ்ரிக் சேர்ஜரி எனப்படும் வெளி உடல் திருத்தமுறை இடம்பெறுவதுபோல் பிளாஸ்ரிக் சேர்ஜரி யிலும் பல்வேறு உட்பிரிவுகள் உள்ளன. அவை பற்றி இப்போது பார்ப்போம். இந்த ஆய்வில் உடலின் உட்புற உறுப்புக்கள் சம்பந்த மான சத்திர சிகிச்சைகள் பற்றிய விபரம் சேர்க்கப்படவில்லை.

குழந்தைகள் பிறந்தவுடன் உடற் குறைபாடுகள் நீக்குதல், உதட்டுப் பிளவு சிகிச்சை இதில் பிளவுபட்ட மேல் உதட்டின் பாகங்களை தையல் மூலம் ஒன்றிணைத்தல் மிகவும் முக்கியமான சிகிச்சை முறை. சிறுநீர் மற்றும் மலவாசல் அடைப்புக்களை நீக்குதல் இன்னுமோர்வகைச்சிகிச்சை குழந்தையின் கால், கை விரல்களுக்கிடையில் சவ்வு வளர்ந்து ஒட்டிக்கொண்டிருந்தால் அதை சத்திர சிகிச்சை மூலம் அகற்றுதல் இன்னுமோர் வகை நிவாரணம்.

ஜப்பானில் குழந்தை பிறந்தவுடனேயே அதனுடைய பெருங்குடல் வால் சத்திர சிகிச்சை மூலம் அகற்றப்படுகின்றது. பிற நாடுகளில் அப்படியான வழக்கம் இல்லை.




தீப் புண் வடு அகற்றுதல் பிளாஸ்ரிக் சேர்ஜரியின் மிகவும் பயனுள்ள செயற்பாடாக கருதப்படுகிறது. தீப்புண் ஆறிய பின் சருமத்தில் விகாரமான வடுக்கள் தோன்றும். உடலின் மறைவான பாகங்களில் இருந்து அகற்றப்பட்ட தோலை ஒட்டவைத்து வடுக்களை அகற்றுகிறார்கள். செயற்கைத் தோல் சில மேற்கு நாடுகளில் கிடைக்கின்றது. செயற்கைத்தோலை ஒட்ட வைக்கும் சிகிச்சை எளிதல்ல. உடல் அதை நிராகரிக்கும் வாய்ப்பு நிறைய உண்டு. தனக்கு இசைவான தோலை மாத்திரம் உடல் ஏற்றுக்கொள்ளும். இப்படியான சொந்தத் தேவைக்கு சொந்த தோல் தான்சிறந்தது.

எதிரிகள் அமிலத்தை முகத்தில் அடித்து தாக்குதல் நடத்துகிறார்கள். பாகிஸ்தான் வங்களாதேஷ் போன்ற நாடுகளில் பெண்கள் மீது அமிலத்தாக்குதல் நடத்தும் அடாவடித்தனம் அதிகமாக நடைபெறுகின்றது. ஆணாதிக்கத்தைக் காட்டும் கணவர்கள் தம் மனைவியர் மீது அமிலத்தை வீசி முகம், உடல் போன்றவற்றை எரிக்கின்றார்கள். பெண்களுக்கு எதிரான வன்முறைகளில் ஒன்றாக அமில வீச்சு சர்வதேச சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. புண் ஆறிய பின் பிளாஸ்ரிக் சேர்ஜரியின் மூலம் நிவாரணம் அளிக்கும் முயற்சிகள் தொடங்கியுள்ளன. பெரும்பாலான இத்தாக்குதலுக்கு உட்பட்ட பெண்கள் தமது முகத்தை கண்ணாடியில் பார்க்க அஞ்சுகின்றனர்.

போரில் காயப்பட்ட வீரர்களுக்கும் பிளாஸ்ரிக் சேர்ஜரி உதவுகின்றன. புண்மாறிய பின்பும் வடுக்கள் காணப்படும்போது இவ்வகை சிகிச்சைமூலம் அவை அகற்றப்படுகின்றன. நவீன உலகில் அழகியல் நோக்கில் செய்யப்படும் பிளாஸ்ரிக் சேர்ஜரியை கொஸ்மெற்றிக் சேர்ஜரி (COSMETIC SURGERY)என்று அழைக்கிறார்கள். உடல் வெளிப்புறத் திருத்தம் பெரும்பாலும் அழகியல் நோக்கில் செய்யப்படுவதால் கொஸ்மெற்றிக் சேர்ஜரிக்கு அதியுச்ச முக்கியத்துவம் உண்டு. மூப்பின் அறிகுறியாகத் தோன்றும் சுருக்கங்களை அகற்றும் பணியை இத்துறைசார் நிபுணர்கள் மேற்கொள்கின்றார்கள்.முகத் தசையை விஞ்ஞான பூர்வமாக தடவிக் கொடுத்து சுருக்கங்களை தற்காலிகமாக நீக்குவார்கள். இதை FACIAL MASSAGE என்று அழைக்கிறார்கள, முகத்திற்கு வழங்கும் மசாஜ் என்பது பொருள். கொழும்பில் பல நிறுவனங்கள் BEAUTY PARLOUR என்ற பெயருடன் இயங்குகின்றன. இவை தலைமயிர் வாரிவிடுதல், முகத் திருத்தம் செய்தல், மணப் பெண்ணுக்கு ஆடை அணிவித்தல் போன்ற சேவைகளை வழங்குகின்றன. றம்சி என்ற பெயர் பூண்ட முஸ்லிம் இளைஞர் இத்துறைகளில் மிகவும் பிரபலமானவர். இவருடைய வாடிக்கையாளர்களில் ஜனாதிபதி சந்திரிக்கா மிகவும் முக்கியமானவர்.

முகத்தின் சுருக்கங்களை சத்திர சிகிச்சை மூலம் அகற்றுதல்(FACE LIFTING) அதாவது முகத்தை தூக்கி விடுதல் என்று தொழில்ரீதியாக அழைக்கப் படுகிறது. முகத்தோலை கண்ணின் கீழ்புறம்வரை மேல்நோக்கி உருட்டிச்சென்று கண்ணின் கீழ் வெட்டுப்போட்டு தொய்யும் தோலை நீக்கிவிடுவார்கள். வெட்டு அடையாளம் தெரிவதில்லை. இதேமுறை யில் நெற்றித்தோலையும் மேல்நோக்கி உருட்டிச்சென்று மேலதிகத் தோலை நீக்கிவிடுவார்கள். கழுத்தில் தொங்கும் ஆடு தசைகளையும் இதே விதமாக அகற்றுவார்கள் . இளமைத் தோற்றத்தை விரும்பும் முதியவர்கள் பெரும் பொருட்செலவில் இவற்றைச் செய்கிறார்கள். அரசியல் தலைவர்கள் திரைப்பட நடிகர்கள் போன்றோர் மூப்பை இவ்வாறு வெல்கின்றனர்.



**அன்பரசு**

உடற் கொழுப்பை உறிஞ்சி வெளியேற்றும் எந்திர சாதனம் (SUCTION MACHINE) தயாரிப்பில் உள்ளது. வயிறு, இடுப்பு, குண்டி, தொடை, மார்பு போன்ற எப்பகுதியிலுமுள்ள கொழுப்பை இதன்மூலம் அகற்றலாம். ஒரு ஊசி மூலம் கொழுப்புள்ள பகுதியில் சிறு துவாரம் செய்து கொழுப்பை இழுத்து எடுப்பார்கள். பானை வயிற்றை பலகை வயிறாக்க முடியும் என்று விளம்பரம் செய்யப்படுகிறது. இரண்டு தொடக்கம் ஐந்து கிலோ வரையிலான கொழுப்பை ஒரே தடவையில் அகற்றமுடியும். உடற்கொழுப்பு ஆண், பெண் இருபாலாரையும் பீடிக்கும் பிரச்சினைகளில் முதலிடம் வகிக்கின்றது. எந்திர சாதனம் மூலம் கொழுப்பகற்றும் சிகிச்சையை லிப்போசக்ஷன் (LIPPO SUCTION) என்று அழைக்கிறார்கள்.

சில ஆண்களுக்கும் பெண்களுக்கும முகத்தின் ஒரு பகுதி ஒரு நிறத்திலும் வேறு பகுதி பிறிதோர் நிறத்திலும் காணப் படுகின்றது. முகம் முழுவதையும் ஒரேவகை நிறமாக்கும் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இதற்கு ஒரு வகை மையை ஊசிமூலம் முகத்தில் ஏற்றி நிரந்தரமாக முகத்தில் நிறமாற்றம் செய்கிறார்கள். சிலருக்கு உதடுகள் வெள்ளை நிறத்தில் விகாரமாக இருக்கின்றன. இதற்கும் இதே சிகிச்சை வழங்கப்படுகிறது.

மேற்குலக நாகரிகத்தில் பெண்களின் மார்புக்கு அளவுக்கு மிஞ்சிய முக்கியத்துவம் அளிக்கப் படுகின்றது. பெரிய நிமிர்ந்த மார்பு உள்ள பெண்கள் அதிர்ஷ்ட சாலிகளாக கருதப்படுகின்றனர். திரைப்பட உலகில் இவர்களுக்கு நன்மதிப்பு உண்டு. மார்பு சம்பந்த மான விசேட ஆடைகள் தயாரிப்பில் உள்ளன. மார்பைப் பெரிதாக்கும் அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் பெரும் பொருள் சம்பாதிக்கின்றனர். மார்பின்கீழ் புறத்தில் மேலிருந்து கீழாக ஆழமான வெட்டுப் போட்டு நன்னீர் அல்லது உப்பு நீர் நிரம்பிய கசிவு இல்லாத பைகளை வைத்துத் தைத்து விடுவார்கள். விரும்பும் பருமனுக்கு இந்த முறையில் மார்பை செப்பனிடலாம். தொழில்சார் நிபுணர்கள் இந்த மார்புச் சிகிச்சை முறையை (BRGAST INPNANT) “மார்பில் புதைத்தல்” என்று அழைக்கிறார்கள்.

உலகப் பொருளாதாரத்தில் அழகுசாதன தயாரிப்புக்கள் பலகோடி மில்லியன் டாலர் பெறுமதி உடையவையாக அமைகின்றன. அழகு நிலையங்கள், உடல் குறைபாடுகளைத் திருத்தும் நிலையங்கள் என்பனவும் இதில் அடங்கும். பெண்கள் தான் அழகில் கூடுதல் கவனம் செலுத்துகின்றார்கள் என்பது மிகவும் தவறான கணிப்பீடு. சந்தை மதிப்பீடுகளின் படி பெண்களுக்கு நிகராக அல்லது மேலாக ஆண்கள் தான் அழகு சாதனங்களைக் கூடுதலாக கொள்வனவு செய்கின்றனர். பால் வித்தியாசம் அருகி வருவதை இது எடுத்துகாட்டுகின்றது. அழகு சாதனத்தை நாடாத ஆணையோ பெண்ணையோ இன்று காண்பது அரிது.

# தொடர்கதை

## பகுதி — 03

# தாமரைச்செல்வியின் பச்சைவயல் கனவு

## அத்தியாயம்-01

**சாய்வு** நாற்காலியில் படுத்தபடி மேல் முகட்டை வெறித்துப்பார்த்துக்கொண்டு இருந்தார் சிவம்.

மனம் அமைதியை இழந்திருந்தது.

பரந்தன் சந்தியில் வெடித்த துப்பாக்கிச்சத்தங்களில் அந்த பிரதேசமே அதிர்ச்சியில் உறைந்து போயிருந்தது. ஆறுபேரின் ரத்தம் நடு வீதியில் சிந்தியிருந்தது.

சிவம் தலையை உள்ளங் கைகளால் அழுத்திப் பிடித்துக் கொண்டார். அந்தக்கணத்தை நினைத்தாலே நெஞ்சு நடுங்கியது. அந்த வெடிச்சத்தங்கள் அதிர்ந்து அடங்கிய ஒரு மணி நேரத்தின் பின் இறந்துபோன ஆறு பேரில் ஒருவன் விநாசியின் செல்வம் என்று அறிய வந்தபோது சிவத்தின் நெஞ்சு தன் துடிப்பை ஒரு தடவை நிறுத்தி விட்டுத் தொடர்ந்தது. பதறிக் கொண்டே விநாசி வீட்டுக்கு ஓடினார். அங்கே எழுந்த ஓலம் அவர் நெஞ்சை அறுத்தது. விம்மி வெடித்துக்கொண்டு அழும் விநாசியை தேற்ற வழிதெரியாமல் நின்றார். ரத்தத்தில் தோய்ந்திருந்த செல்வத்தைப் பார்த்த போது கண்கள் முட்டி வழிந்தன.

அய்யோ... இது என்ன கொடுமை என்று நெஞ்சு தவித்தது. ஊரே திரண்டு வந்து கண்ணீர் விட்டது.

சுடலையில் செல்வத்தை எரித்து விட்டு வந்தபோது இரவாகி விட்டது. ஊரடங்குச் சட்டம் போடப் பட்டிருந்ததனால் பயந்து பயந்து வந்து சேர்ந்தார்கள்.

என்ன துடியாட்டமாய் இருந்த பிள்ளை.உழைப்பால் உயர்ந்து வருவான் என்று நினைத்த பிள்ளை ஒரு நிமிடத்தில் குண்டுக்கு பலியாகிவிட்ட கொடுமை...

மனம் ஆறமாட்டாமல் தவித்தது.

அடுத்தடுத்த நாட்களில் நடந்தவைகளைக் கேட்க கேட்க இன்னமும் தவிப்பு அதிகமானது. தேசமெங்கும் நெருப்பு பிடித்தது போல இன வன்முறை வெடித்தது. வெலிக்கடைச் சிறையில் இருந்த தமிழ்க் கைதிகள் கொடுமையான விதத்தில் கொல்லப்பட்ட செய்தி காதுகளில் தீயாய் வந்து எரித்தது. மூன்றாவது தடவையாக அடிவாங்கிய தமிழர்கள் வடபகுதிக்கு ஓடி வந்தார்கள். தேடிய சொத்துக்களை கைவிட்டு உடுத்த உடுப்புக்களுடன் கப்பலில் ஏறி வந்தார்கள். இந்தத் தடவை அடிகொஞ்சம் ஆழமாகவே விழுந்தது. அதனால் வலியும் அதிகமாகவே இருந்தது. "காரோட தமிழ் ஆட்களை வைச்சு பெட்ரோல் ஊத்தி உயிரோட கொழுத்தினாங்கள்."

"தாய்க்கு முன்னாலயே பிள்ளையை வாளால வெட்டினாங்கள்,"

"கடையை கொழுத்திப் போட்டு அதுக்குள்ள ஆட்களையும் தூக்கி எறிஞ்சாங்கள்."

எத்தனை கதைகள்... எத்தனை அவலங்கள்...

எந்தத் தவறும் செய்யாத தம்மீது விழுந்த அடியை தாங்கிக்கொள்ள முடியாமல் தமிழினம் சிலிர்த்துக்கொண்டது.


தெருத்தெருவாய் ரத்த வெள்ளத்தில் கிடந்த தமது உறவுகளைப் பார்த்தபோது திருப்பிக் கொடுக்கும் வேகம் வந்தது.

தமிழ் இளைஞர்கள் சிறிது சிறிதாய் காணாமல்போக ஆரம்பித்த தன் காரணம் இது என்றாகியது.

ஆனையிறவில் இப்போது இராணுவத்தினரே சோதனைச் சாவடியில் நின்றிருந்தார்கள். அமைதியாய் தழும்பிக்கொண்டிருந்த நீர்ப்பரப்பெங்கும் புதிதாய் முள்ளுக் கம்பிகள் முளைத்திருந்தன. பச்சைத் தகரங்கள் அடிக்கப்பட்ட முகாம்கள், கனரக வாகனங்கள், துப்பாக்கிகளை உயர்த்தியபடி இராணுவத்தினர் என்று அச்சம் தரும் விதமாய் அந்தச்சூழல் மாறியிருந்தது.

கிளிநொச்சி காவல் நிலையத்துடன் இராணுவமும் இணைந்து கொண்டு கூட்டாகச் செயற்பட்டது. நகர மத்தியில் உள்ள பொலிஸ் நிலையத்தின் உள்வளவில் இராணுவ நடமாட்டம் அனைவரையும் மிரள வைத்தது.

வெளியே ஏற்பட்ட மாறுதல்களுக்கு நடுவே அவர்களின் அன்றாட வாழ்க்கையும் இயல்பாய் நடந்தது. அந்த வருட மாரிகாலம்



அவர்களுக்கு சோதனைக்காலமாய் அமைந்தது. ஐப்பசியில் நெல் விதைத்த போதே மழை தூறிக் கொண்டுதான் இருந்தது. நூறு ஏக்கர் வரை சிவம் விதைத்து முடிய கிட்டத்தட்ட ஒரு மாதமாகியது. விதைப்பு முடிந்த கையுடன் மழை கொட்டத்தொடங்கிவிட்டது. ஒரு கிழமையாய் தொடர்ந்து பெய்ததில் வயல் எல்லாம் வெள்ளக்காடாகியது.

முன்விதைப்பு பயிராகி விட்டதனால் அவை தப்பிக் கொண்டன. பின்னர் விதைத்தவை வெள்ளத்துக்குள் மூழ்கி அழிந்து போயின. மழைவிட்டு வெள்ளம் வடிந்ததும் மறுபடி மாடுகள் பிடித்து சேற்று உழவுசெய்து பலகை அடித்து முளை கட்டிவிதைத்தார். வீட்டுக்கும் வயலுக்குமாய் கார் பறந்து திரிந்தது. நிம்மதியாய் நித்திரை கொள்ள முடியாமல் ஒழுங்காய்ச் சாப்பிட இயலாமல் அலைந்து திரிந்தார். மரியக்கண்டு கடவான் கட்டும்போது தானும் சாமம் வரை கூடவே நின்றார். நெல்முளைத்து பயிரானதைப் பார்த்த போது தான் கொஞ்சம் நிம்மதியாக இருந்தது. களைபிடுங்கும் ஆட்களை ஐம்பத்தைந்தாம் கட்டைப் பகுதியிலிருந்து உழவுயந்திரத்தில் ஏற்றி இறக்கினார்.

இப்போது செல்வத்திற்கு அடுத்தவனான மகேசனை உழவுயந்திரம் ஓடப்பழக்கி தன்னுடன் வைத்திருந்தார். செல்வம் அளவுக்கு வேகம் இல்லையெனினும் சொல்வதைக்கேட்டு மகேசன் நடந்து கொள்வது அவருக்கு ஆறுதலாக இருந்தது.

களை எடுத்து யூரியா போட்டதும் பயிர்கள் செழிப்பாய் வளர்ந்தன.நோயின் தாக்கம் சற்று குறைவாய் இருந்தது. அதற்காக ஆறுதல் பட்டுக்கொண்டிருக்க இரண்டரை மூன்று மாத பயிராகி குடலை வரும் பருவத்தில் மறுபடி பேய்மழை கொட்டத்தொடங்கியது.

"இதென்ன அநியாயத்துக்கு இந்த மழை பெய்யுதாக்கும்... பூஎல்லாம் கழுவிக்கொண்டு போகப் போகுது."

வானத்தையும் பூமியையும் பார்த்து பதறத்தான் முடிந்தது.

சிவம் சாய்வு நாற்காலியில் சரிந்து படுத்தபடி கொட்டும் மழையையே பார்த்துக் கொண்டிருந் தார். தலைக்குள் விண் விண் ணென்று வலித்தது. பெரும் இரைச் சலுடன் கொட்டிக் கொண்டிருக்கின்ற மழையை வெறுக்கின்ற தருணங்களும் எப்போதாவது ஏற்பட்டு விடுவதுண்டு. ஒரு விவசாயிக்கு நேருகின்ற அனுபவம் இது. வெள்ளிக்கம்பி கம்பியாய் குளிர் காற்றோடு கை கோர்த்துக்கொண்டு கொட்டும் இந்த மழை இப்போது அழகாய் தோன்ற வில்லை.

"வயல் எல்லாம் வரம்பை உடைச்சுக்கொண்டு தண்ணி பாயுது. அண்ணையின்ர வயலைப்பார்த்திட்டு வந்து தண்ணி கடத்திறதாய் மரியக்கண்டு சொன்னது. வந்திருக்கும். ஒரு சாப்பாடு கட்டித்தா குடுத்



திட்டு பார்த்து வாறன்."

மழையையே கவலையோடு பார்த்துக்கொண்டிருந்த பராசத்தி எழுந்துபோய் சாப்பாடு கட்டிக்கொண்டு வந்து கொடுத்தாள்.

"மழைகொஞ்சம் குறையுது போல கிடக்கு, போய் பார்த்திட்டு வாறன்."

காரை எடுத்துக்கொண்டு வயலுக்குப்போனார். பாம்புக்கமம் கோவிலை நெருங்கியபோது மழை நின்று விட்டது. கோவிலைப் பார்த்து மனதுக்குள் கும்பிட்டார். இந்தப்பிரதேசம் அடர்ந்த காடாக இருந்த காலத்தில் இங்கே நிறைய பாம்புகள் உலாவினதாம். இந்தக் கோவிலை நிறுவி நாகதம்பிரானை வழிபடத் தொடங்கிய பிறகுதான் பாம்புப் பயம் இல்லாமல் போயிற்றாம். போகிறவர்கள் வருகிறவர்கள் யாரென்றாலும் நாகதம்பிரானை வணங்காமல் கடந்து போனதில்லை.

ஓவசியர், சந்தி கடந்து வயலை நெருங்கினார். தெருவெல்லாம் தண்ணீர் அடித்துக்கொண்டு பாய்ந்தது. தெரு ஓரமாய் வயல் கரையில் காரை நிறுத்திவிட்டு இறங்கிநின்று எதிரே பார்த்தார். தூரத்தில் வயல் மூலையில் மரியக்கண்டு நின்று தண்ணீர் கடத்திக்கொண்டிருப் பது பார்வையில் பட்டது. கவனமாய் வரம்பில் நடந்து அங்கே போனார்.

"வெள்ளத்தை எங்க கடத்தறது. வாய்க்காலே ரொம்பிப்பாயுது."

மரியக்கண்டுவின் குரலில் ஆதங்கம் தெரிந்தது.

மழையில் நனைந்து கொண்டே வேலை செய்திருக்கிறான்.

மடித்துக்கட்டிய சாரமும் உடம்பும் ஈரமாய் இருந்தது.

"நீ ஏதும் சாப்பிட்டியா?"

"எங்க சாப்பிடப்போறது. காலையிலயிருந்து நிற்கிறேங்க, தண்ணி கொஞ்சம் கொஞ்சமாத்தான் வடியுது. விட்டுப்போக கடவான் உடைஞ்சா மறுபடி வாய்க்கால் தண்ணி வயலுக்குள்ள வந்திடும் அதுதான் விலத்த முடியலைங்க."

"இந்தா முதல்ல அந்த வரம்பில இருந்து சாப்பிடு."

மண்வெட்டியை வைத்து விட்டு தலையில் கட்டியிருந்த ஈரத்துவாயை எடுத்து பிழிந்து முகத்தைத் துடைத்துக்கொண்டான். வரம்பில் அமர்ந்து சாப்பிடத் தொடங்கினான். மரியக்கண்டுக்கு நல்ல பசி, அள்ளி அள்ளி அவன் சாப்பிடுவதை பார்த்துக்கொண்டிருந்தார்.

"வட்டக்கச்சிக் காணியும் முரசுமோட்டை காணியும் என்ன பாடோ தெரியேலை. நீ இதைப்பார்த்துக்கொள். நான் முரசு மோட்டைக்கு போயிட்டு வாறன்."

"ராமசாமி அங்க நிற்கி றான். மேற்கால கடவான் வெட்டி தண்ணி பாய விட்டிருக்கு."

"இரணைமடுக்குளத்தில நீர் மட்டம் ஏறுதாம். பலகை திறந்து வான்பாய விட்டபோகினமாம்."

சிவத்துக்கு பகீரென்றது.

''அய்யோ... இருக்கிற தண்ணி காணாதே. குளமும் திறந்தால் வயல் எல்லாம் முழுக வேண்டியது தான்...."

கவலையோடும் கலக்கத்தோடும் பயிரைப் பார்த்தார்.

மழை இத்தோட விட்டுத்தந்தால் பயிர் தப்பிப் பிழைச்சிடும்....

சில நாட்களாக மழை பெய்யவில்லை. கரும் முகில்கள் காணாமல்போக பளிச்சென்று நீல நிறமாய் வானம் பரந்திருந்தது. வெய்யில் நன்றாக எறித்தது. சூரியனின் இதமான சூடு பரவ பயிர்கள் நிமிந்து நின்றன. ரீ.ரீ.எம் உரம் எறிந்தார்கள். சந்து குத்திக்கு குறுனல் போட்டார்கள். கதிர் தள்ளி நெல்மணிகள் முற்றிப்பழுக்கத் தொடங்கின.

இம்முறை வழக்கத்துக்கும் மாறாக வயல்ச்செலவு அதிகரித்து விட்டது. கடைசியாய் ஏற்பட்ட செலவுகளுக்காக பராசத்தியின் நகைகளை வங்கியில் அடைவுவைத்திருந்தார். ஏற்கனவே வேலாயுதத்திற்கு கொஞ்சம் காசு கொடுக்க வேண்டியிருந்தது. போய்க்கேட்டால் இல்லை என்று சொல்ல மாட்டார். போன சிறு போகத்தின்போது கார்த்திகேசுவிடமும் கொஞ்சம் மாறியிருந்தார். அங்கே இங்கே என்று மாறினாலும் நெல் அடித்து விற்றதும் திரும்ப கடனைக்கொடுத்துவிடுவார். ஊர் ஆட்களுக்கு உழுது கொடுத்ததில் வருமதி இருக்கிறது. நெல் அடித்து விற்றுத்தான் காசு தருவார்கள். இடையே கேட்க மனம் வருவதில்லை. முந்திய வருட உழவு காசு சூடடித்த காசு இன்னமும் தராதவர்களும் இருக்கிறார்கள். இம்முறை கையிலும் காசு இருக்கவில்லை. அதிக செலவுகளுக்கு ஈடு கட்ட நகைகளை வைக்கவேண்டிவந்து விட்டது.

நெற்செய்கைக்கு முதலீடு அதிகம். ஆயிரக்கணக்கில் மண்ணுக்குள் போடவேண்டும், நன்றாய் விளைந்தால் லட்சமாய் திரும்பிவரும். நட்டமோ லாபமோ நம்பிக்கையோடு செய்யும் தொழில் இது. நெல் விளைந்து வீடு வந்துசேரும்வரை நெஞ்சுக்குள் பதட்டம்தான். எத்தனையோ வருடங்களாய் பட்டுத் தெளிந்த அனுபவம் இருந்தாலும் ஒவ்வொரு முறையும் புதிதாய் செய்வது போன்ற பதட்டம்தான். இம்முறை கொஞ்சம் கவலையாகத்தான் இருக்கிறது.

கதிர்தள்ளி பழுத்துக் கொண்டு வருகின்ற இந்தநேரத்தில் இரணைமடுக்குளத்தில் முப்பத்தி மூன்று, முப்பத்தி நாலு அடிவரை நீர் நிறைந்திருப்பது பரவலாய் எல்லோரிடத்தும் பதட்டத்தையே ஏற்படுத்தியது. விட்டிருந்த மழை திரும்பவும் பெய்யத்தொடங்கியது. அறுவடை செய்யப்போகும் நேரம்... அறுவடை செய்ய எப்போது ஆட்களுடன் வருவது என்று கேட்டு ஆதம்லெப்பைக் காக்கா கடிதம் எழுதியிருந்தார். இன்னமும் அதிற்குப்பதில் போடவில்லை. முன்பும் சில தடவைகள் வெள்ளத்தினால் ஒருபகுதிக்காணி பயிர்கள் அழிந்திருக்கின்றன. இம்முறை முற்று முழுதாய் அழிந்து விடுமோ என்று பயமாய் இருந்தது. இரணைமடு குளத்து நீர் அணையைமுட்டி மோதி நின்றது. முப்பத்தி நாலு அடிக்கு மேலே நீர் மட்டம் ஏறிவிடாமலிருக்க ஒவ்வொரு பலகையாக திறந்து விடப்பட்டது. இத்தனைமாத உழைப்பும் செலவும் வீணாகப் போய் விடக்கூடுமோ என்ற அதிர்வில் உறக்கம் கூட வரமறுத்தது.

வானம் கறுத்து மறுபடி மழை கொட்டத்தொடங்கியது. கடவுளே என்று நெஞ்சு பதறியது. குளத்தின் அவசரகால கதவுகளைத் திறந்து விடுவதெனத் தீர்மானித்தார்கள். தாழ்வான பகுதிகளில் குடியிருந்த மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு போகுமாறு ஒலிபெருக்கிகள் மூலம் அறிவிக்கப்பட்டது. புகை வண்டி ஓடுவது நிறுத்தப் பட்டது.

கிளிநொச்சி பிரதேசத்தில் உள்ள அத்தனை விவசாயிகளும் மனக்கலக்கத்தோடு பார்த்திருக்க இரணைமடுக்குளத்தின் பதினொரு அவசரகாலக்கதவுகளும் திறந்து விடப்பட்டன. ஓவென்ற இரச்சலுடன் தண்ணீர் புரண்டடித்துக்கொண்டு பாய்ந்தது. நிலம் வயல் எல்லா இடமும் வெள்ளமாய் பரவியது. பரந்தன் சந்தியில் வீதிக்கு மேலே இரண்டடி நீர் பாய்ந்தது. வயலில் வைக்கப்பட்ட சூடுகளை வெள்ளம் அள்ளிக்கொண்டு போனது.

அத்தனைபேரின் பயிர்களும் நெற்கதிர் சுமையுடன் வெள்ளத்துக்குள் அமிழ்ந்தன. ஒரு பிடி நெல் எடுக்க முடியாமல் கிளிநொச்சிப் பிரதேசமே வெள்ளத்துள் மூழ்கியது.

வெள்ளத்துள் மூழ்கிய கதிர்களை நெஞ்சு கனக்க வயிறு எரிய வரம்பில் நின்றபடி பார்த்துக்கொண்டிருந்தார் சிவம்.

(தொடரும்)

காட்டு விலங்குக்குக் கூண்டு போன்றதே, சுயநல மனிதனுக்குச் சட்டம். - ஹெர்பெர்ட் ஸ்பென்ஸர்




# வாழ்வோடு பொருந்தாத அறிவு

சி.மாதுளா

கடும் மழையின் குளிரை விட இரண்டு குருவிக் கூடுகளிலும் உள்ள குஞ்சுகளின் நிலை பற்றிய நினைவுகள் அலை அலையாக முரளியைப் புரட்டி எடுக்க - நித்திரை அவனை விட்டு கலைந்து சென்றுகொண்டிருக்கிறது. அவன் புரண்டு புரண்டு படுக்கிறான்.

“டேய் என்னடா நித்திரை வரல்லையே, சும்மா அந்தக் குருவிக் குஞ்சுகள்..... என்னடா விடிஞ்சா பல்கலைக்கழகம் செல்லப்போகிறாய். இப்பவும் சின்னப்பிள்ளை மாதிரி குருவிக்குஞ்சுகளின்ர நினைவுகளோடு கிடக்கிறாய்.” அவன் தாயின் அதட்டல் நித்திரைபோல் போர்வைக்குள் அவனைக் கிடக்கச் செய்கிறது. இப்படி மழைபெய்து கடும்குளிர் அடித்தாலே விடியக்கூடாது..... விடியக்கூடாது.... என நினைத்துக் கொள்ளும் அவன் மனம் இன்று எப்ப விடியும்.... எப்ப விடியும்.....என அடித்துக்கொள்கிறது.

எங்கோ எழுந்த ஆதவனின் கதிர்கள் இருளை விலக்கிக்கொண்டிருக்க முற்றத்துச் செவ்வரத்தம் மரத்தின் பூவொன்று ஈரத்துடன் சாரத்தினூடே முரளியின் கண்களில் விழுகிறது. கொண்டைக் குருவியினதும், தேன் சிட்டினதும் கீச்சிடல்கள் அவன் காதுகளில் விழுந்து அவனை எழுப்புகிறது. தாயின் நித்திரையைக் கெடுக்காது மெதுவாய் கதவு திறக்கிறான். கதவு திறபடுமுன் தாயின் கண்கள் திறக்கின்றன. சாரத்தைத் தலைக்குமேல் முக்காடாய்ப்போட்டவன் முற்றத்துச் செவ்வரத்தம் மரத்தைப் பார்க்கிறான்.

அழகாய்த் தைத்து உருவாக்கிய தேன்சிட்டின் கூட்டில் இரண்டு குஞ்சுகளும் தொட்டிலில் இருப்பதுபோல் ஒய்யாரமாய் இருந்து வெளியே எட்டிப் பார்க்கின்றன. “மழையோ குளிரோ இதுகளுக்கு ஒன்றுமே செய்யவில்லை. இயற்கையோடு போராட ஈடுகொடுக்கத் தயாராய்த்தான் வாழ்க்கையை அமைத்திருக்கிறியல்” முரளியின் மனம் சொல்லிக்கொண்டு கொண்டைக்குருவியின் கூட்டை நோக்கி அவன் தலையைத் திருப்புகிறது.

அதன் கூடுகலைந்து கிடக்க குஞ்சுகளில் ஒன்று கீழே விழுந்து எறும்புக்கு இரையாகிக் கிடக்கிறது. நேற்று அவன் இரை கொடுக்கக் கொடுக்க நல்லாய்ச் சாப்பிட்ட குஞ்சாய்த்தான் இருக்க வேணும்.... கொடுத்த சூரைப்பழத்தின் கொட்டைகள் மட்டும் எறும்பு சாப்பிடாது இறகுகளுடன் மிஞ்சிக்கிடக்கின்றன. முரளி நுனிக்காலில் நின்று கூட்டைச் சரிசெய்கின்றான். “உன்ர அம்மாவுக்கு ஒழுங்காய்க் கூடுகட்டத் தெரியாது”. பழைய முறையையே கட்டிப்பிடிச்சுக்கொண்டு இருக்கிறதில என்ன நிறைவைக் கண்டாவோ உங்கட அம்மா... அங்கபார் தேன்சிட்டு எவ்வளவு அழகாய் கூடுகட்டியிருக்குது. இரவெல்லாம் அந்தக் குஞ்சுகள் எவ்வளவு சுகத்தோடு உறங்கியிருக்குங்கள்....

“டேய் முரளி என்னடா காலங்காத்தால மரத்தோட கதை பேசிக்கொண்டிருக்கிறாய். என்ன ஆட்ஸ் தானே படிக்கப்போகிறாய்? பிறகேன் ‘பொட்னி’ (தாவரவியல்) படிக்கப்போகிறமாதிரி மரத்தைப் பார்க்கிறாய்?” முரளியின் உறவுக்கார நண்பன் சீலன் - அவனின் உப்பூறிய ஈரத்தேகம் சற்றுமுன்தான் கடலிலிருந்து தரைக்கு ஏறினான் என்பதைப் புலப்படுத்துகின்றது. காற்சட்டையிலிருந்து தண்ணீர் சொட்டச் சொட்ட அந்தக் குளிரிலும் நடுக்கம் ஏதுமின்றி மெல்லிய புன்நகையுடன் முரளியை நோக்குகிறான்.

“இல்லையடா சீலன் இந்தத் தேன் சிட்டைப் பார் எவ்வளவு அழகாய் பாதுகாப்பாய் கூட்டைக் கட்டி தன்ர இனத்தைப் பெருக்குது. இந்தக் கொண்டைக் குருவி மட்டும் வாழ்க்கையை எதிர்கொண்டு வாழ்வோடு ஒட்டி தன்ர அறிவை வளர்க்கத்தெரியாமல் ஒரு குஞ்சை இழந்து நிற்குது. கடைசி இந்தத் தேன்சிட்டின் கூட்டைப் பார்த்தாவது தன்ர கூட்டை வடிவமைத்திருக்கலாம் எப்பதான் தங்கட வாழ்கையை ஒட்டி அறிவை வளர்க்கப் போகுதுகளோ?”

“ஓமெடா ஓம்..... குருவிக்காகக் கவலைப்படும் நீ பல்கலைக் கழகம் சென்று ‘ஆட்ஸ்’ படித்து எங்கள் வாழ்க்கையின் உயர்வுக்கு என்ன செய்யப் போகிறாய்? நீ தேடப் போகிற அறிவு மட்டும் உன்ர வாழ்க்கையோட ஒட்டியதாக இருக்குதா? ·

‘என்ன? நான் உன்னைக் குழப்பிற்றேனா? சரி சரி நீ குழம்பாத. வலை தெரியவேணும் நான் போய்வாறன்’’ முரளியின்பதிலை எதிர்பாராமலேயேசீலன் கடற்கரையை நோக்கி நடக்கிறான். சீலனின் வார்த்தைகள் முரளியின் இதயத்தை பூமாராங் போல் மீண்டும் மீண்டும் குத்திக் குத்திக் குடைகின்றன.

“சீ.... பள்ளிக்கூடத்தில் கடைசி வாங்கில எப்பயாவது ஒருக்கா வந்திருக்கிறவன் - எங்கட ஊரையும் கடலையும் தவிர வேறு ஊர்களை அறியாதவன். என்னைத்தவிர வேறு நண்பர்களோடு கூட கதைக்கக் கூச்சப்படும் சீலனின் வார்த்தைகளுக்குள் இப்படியொரு வீச்சா?’ சீலனின் வார்த்தைகள் தன் எண்ணப்பரப்பில் முட்டிமோதி எதிரொலிப்பதை முரளி உணர்கிறான்.

மன அழுத்தங்களில் இருந்து விடுபட அல்லது கற்பனையில் பிரபஞ்சத்தையே வலம்வர ஏன்? தன் மனப்பாரங்களையே இறக்கிவைக்க உணர்ச்சிகளுக்கு வடிகாலிட அவன் தேர்ந்தெடுத்த இடம் அவன் பரம்பரைக்கே சோறுபோடும் அவன் கிராமத்து கடலின் கரையைத்தான்.

இன்றும் அவன் மனம் ஒப்புதலளிக்க அவனின் இரு கால்களும் அவன் படுத்திருந்து கதை பேசும் மணற்பரப்பை நோக்கி நகர்கின்றன. வழமையாக இருக்கும் மணற்திட்டில் அமருகின்றான். கண்களுக்கெட்டிய தூரத்தில் ஆள் அரவம் இல்லை. இதைத்தான் அவன் எதிர்பார்த்தானோ என்னவோ? வெறும் மணற்திட்டில் கைகளை பிடரிப்பகுதிக்கு தலையணையாக வைத்துப் படுக்கின்றான். இளங்காலைக் கதிர்கள் அவனை இன்னும் மஞ்சலாக்குகின்றன. நீண்ட கால்களில் ஒன்று மணலிற் கிடக்க மற்றையது அதற்கு மேல் ஏறிக்கிடக்கிறது.



தென்னஞ்சோலைக்குள் வளைந்து நிற்கும் ஒரு தென்னை மட்டும் மற்றைய தென்னைகளை விட மிகவும் நளினமாய் வளைந்தாடுகிறது. வளைந்து கொடுத்தாலும் பனைமரமொன்று நிமிர்ந்து நிற்கிறது. கடலின் ஈரக்காற்று அவன் மேனியைத் தழுவிச்சென்றாலும். ஈரக்காற்றினூடும் வெப்பத்தை வெளிச்செலுத்திவிட்டு பெருமூச்சொன்று வெளிச்செல்கிறது.

எழும்பியிருக்கிறான் கடல் மீதில் ஓர் வெறித்த பார்வை “என்ன முரளி ஏன் எழும்புகிறாய்? பல்கலைக் கழகம் செல்லும் உனக்கு என்ன குழப்பம்? சிந்து வெளி நாகரிகத்தை மீண்டும் குழிதோண்டி எடுத்துப்புரட்டிப் படித்து கலைப்பட்டதாரி எனும் பட்டத்தை உன் நியாயத் தராசில் போட்டு உன் மனச்சாட்சியுடன் சமப்படுத்தப்போகிறாய் பிறகேன் போவது உனக்கும் பிடிக்கவில்லையா? என் எதிர்காலத்தில் உன்வாழ்வில்லையா? என்னை வாழ்த்தி விடை தருவதை விட்டு ஏன் பெண்ணே அவநம்பிக்கையுடன் நீயும் என்னைக் குழப்புகின்றாய்..... சொல்லு.... ஏன் அமைதி... ஓ...நீ பதில் தரமாட்டாய் மௌனமாய் என்னை வருத்துவதில் உனக்கு அவ்வளவு விருப்பு அப்படித்தானே? இது எனக்குத் தெரியாதா என்ன? நீயும் என்வாழ்வில் துன்பத்திலும் இன்பத்திலும் சேர்வாய் என எண்ணியிருந்தேன். நீயும் ஒரு சுயநலக்காறி என்பதைக் காட்டி விட்டாய்.

“என்ன என்ன சுயநலக் காறி என்கிறாயா? சற்றுச் சிந்தித்துப்பார், யாரிடம் சுயநலம் இருக்குதெண்டு நீ அறிவாய். வேகமாய் வந்த அலை ஒன்று கரையுடன் முட்டி மோதி இச்சை தீர்த்துவிட்டுச் செல்கிறது. கரையை நோக்கிவரும் ஓடம் அலைகளிற் தத்தளிக்கிறது.”

“ஏன் நான் படிக்கப் போவதில் உனக்கென்ன சுயநலம் குழப்பம்”.

கடலலையொன்று ஆர்பரித்தெழுந்துவந்து முரளியைத் தொட்டுவிட்டு ஓடிச் செல்கிறது. தூரத்தில் புள்ளியாய்த் தெரிந்தது ஓடமாய்த் தெரிகிறது.

‘ஓ...’ நீயா? நீலக்குடை அவள் பின்பகுதிவரை விரிந்து கிடக்க கதிரவனின் கதிர்கள் அவளை நீல நிறமாகவும் பொன்நிறமாகவும் மாற்றி மாற்றி கலர் எடுக்க அவள் 22கரட் தங்கமாய் ஒளிர்கிறாள்.

ஏன்...ஏன் நான் படிக்கப் தெரிகிறதாக்கும்....நான் கலைப் பட்டதாரியாகி மீண்டும் இந்தக் கிராமத்திற்கே திரும்பிவருவேன். நான் வந்ததும் மீன் தெரிந்து கருவாடாகிப்போகும் சிறுவர்களை ஒன்றுகூட்டிப் படிப்பிப்பேன்” பலமான சிரிப்பொலி காற்றலைகளை முறியடித்து வேகமாய் மறைகிறது.

“ஏய் ஏன் இப்படிச் சிரிக்கிறாய்? என் முன்னால் இப்படியும் சிரிக்கமுடிகிறதா?” “உன்னால் இப்படிச் சிந்திக்கமுடியுமாயின் என்னால் இப்படி சிரிக்கவும் முடியும் “ஏய் எதையும் நீ புரியும்படியாய்ச் சொல்... உன் சொல்லை நான் எப்பையாவது தட்டியிருக்கின்றேனா? எனக்குள் கேள்விகள் எழும்போதெல்லாம் நீதானே விடைதருவாய். இன்று மட்டுமேன் ஆர்ப்பரித்தெழுகிறாய். உன் உணர்வுகளையும் உணர்ச்சிகளையும் நான் புரிந்துகொள்ள மாட்டேனா? பேசு பெண்ணே உன் அன்பு மொழியால்ப் பேசு பெண்ணே.”

சுறுண்டு வந்த அலையில் தவறாய்க் கரைக்குவந்த ‘ஏரல்’ ஒன்று மணலைக் கிண்டி தன்னை மறைத்துக் கொள்கிறது. “கொஞ்சம் சிந்தித்துப்பார் முரளி... அதோ அந்தப் பறவையைப்பார் எனக்குத் தெரிந்த காலம் தொட்டு செத்து மிதந்து கரையேறும் மீன்களைத்தான் உணவாக்கிக்கொள்ளும். இன்னும் கூட இறங்கி மீன்பிடிக்கத் தெரியாது. பிடிப்பதற்காய் அது முயற்சிக்கிறதும் இல்லை. ஆனால் அந்த ஆமையைப் பார் தன் முட்டைகளை எங்கோ புதைத்துவிட்டு குஞ்சுகள் மீண்டும் தன்னிடம் வரும் என்ற நம்பிக்கையில் இறங்கிக் கொள்கிறது. ஆனால் நீ மனிதன் இரண்டிலுமிருந்து வேறுபட்டவன், நீயாருக்குச் சொந்தக்காரன். “உனக்கும் தான் அதில் என்ன சந்தேகம்? சந்தேகமா? உனக்கு என் உணர்ச்சிகளுக்கான காரணம் தெரியுமா? உன்பாட்டன் போய்வந்த பாதையில் நேற்று உன் மாமன் படகு பாறையில் மோதியதற்கு விளக்கம் தெரியுமா? ஏன்.... மண்மேட்டின் நகரப்பாதை எந்தக்காலத்தில் எந்த மீன் எந்தப்பாதையால் வருமென்றெல்லாம் உனக்குத் தெரியுமா? உன் பாட்டன் தந்த பார்வை அறிவின் அரைவாசியை விட்டுவிட்டு அரைவாசியுடன் நிற்கும் உனக்கு கலைப்பட்டம் எதைத்தரப்போகிறது.”

“ஏய் நிற்பாட்டு என்னைக் கொஞ்சம் சிந்திக்கவிடு.” “.....” முரளியின் கை மணலைச் சமப்படுத்துகிறது எழுதுகிறான்.... அழிக்கிறான்.... எழுதுகிறான்.....

**வாழ்வோடு பொருந்தாத அறிவு**
**அறிந்தும் அறியாத அறிவு**
**கற்றுத் தந்த கடலே**
**கதைபேசுமென் பெண்ணே - நீ**
**தாழ்வில் இருப்பினும் - என்**
**மன வானில்**
**உயர்வில் இருக்கிறாய்**

அவன் எழுதியதை கடலலை எட்டிப் பார்த்துச் செல்கிறது. கரைதொட விரையும் ஓடத்தை அலையுயர்த்தி வீழ்த்தி அசைக்கிறது. ஓடம் அதற்கு ஒத்துழைத்து தன்னை நிலை நிறுத்துகிறது. அலை ஒன்று ஆர்ப்பரித்து எழுந்து வருகிறது. அந்த அலையையே சாதகமாக்கி ஓடம் கரைசேர்கிறது. கரையேற்றிய ஓடத்துடன் போராடிய களைப்பில் முரளியின் தந்தை சின்னத்தம்பி கன்னத்தில் வழிந்தோடும் வியர்வையை... சீ.... தண்ணீரை.... சீ கண்ணீரை இல்லை மூன்றையுமே கையால் வழித்து விடுகிறார். “என்னப்பா மீன்களைக் காணல்ல’’ இரவு முழுக்க ஒரே காற்று, நீரோட்டமும் ஒருநாளைக்கு ஒரு திசையில ஓடுது என்றவாறே சின்னத்தம்பி தென்னங்குற்றியை எடுத்து ஓடத்தின் கீழே வைக்க ஏறிய ஓடம் கரைசேர்கிறது. ●

# இலக்கியப்பகிர்வு

## உருவ உள்ளடக்க உதாரணங்கள்

கலைக்காக என்ற கோட்பாட்டில் (உருவம் தான் முக்கியம்) முன்னோடிகளில் முக்கியமானவரான க.நா.சு. அவர்களின் கருத்து வருமாறு அமைகிறது.


''நான் ஒரு நூலையோ. சிறுகதையையோ இலக்கியம் என்று ஏற்றுக்கொள்ளும்போது. அதை அதன் விஷயத்தை பொறுத்து இலக்கியம் என்று சொல்வதில்லை. எந்த விமர்சகனுமே அப்படிச் சொல்வதில்லை. ஏனென்றால் விஷயம் என்பது இருக்கிறதே. அது வாழ்வுக்கும் இலக்கியத்துக்கும் பொதுவானதொன்று. வாழ்வு எது இலக்கியம் எது என்று தனியாக பிரித்துப் பார்க்க முடியாது. ஆனால் இலக்கிய விமர்சகனாக நான் இலக்கியத்தை அணுகி அலசிப்பார்க்கும் போது உருவத்துக்குப் பிரதான்யம் தந்தே அலசிப் பார்க்கிறேன். இலக்கிய விமர்சகன் என்பவனால் தவிர்க்க முடியாத ஒரு காரியம் இது''.

க.நா.சு. அவர்களின் மேற்குறித்த கருத்தினை தனது திறனாய்வுப் பிரச்சினைகள் என்ற நூலில் குறிப்பிடும் பேராசிரியர் கைலாசபதி (1980களில்) அக்குறிப்பிற்கு முதல் தன் கருத்தினை பின்வருமாறு தெரிவிக்கின்றார்.

''ஏறத்தாழ பத்துப்பதினைந்து வருடங்களுக்கு முன் ஈழத்திலே தேசிய இலக்கியம் என்ற கோட்பாடு தோன்றி. அதனடியாக நமது எழுத்தாளர்கள் சிருஷ்டி இலக்கியம் பற்றிய பல்வேறு பிரச்சினைகளையும் அம்சங்களையும் சாங்கோ பாங்கமாய் விவாதித்த வேளையில் உருவம். உள்ளடக்கம் என்பனவும் அனுபவ ரீதியாக ஆராயப்பட்டன. நடைமுறையில் நமது எழுத்தாளர்கள் இனப்பிரச்சனையை இனங்கண்டு அது எழுத்தாளனது கலையாக்கத்தின் போது தீர்க்கப்படவேண்டிய முக்கியமான பொறுப்பு ஒன்று என்றும். கருத்துமட்டத்தில் அதுபற்றி வாதங்கள் புரிந்து மல்லாடுவதில் நிலைத்த பயன் ஏற்படப்போவதில்லை என்றும் உணர்ந்துகொண்டனர். இத்தெளிவின் விளைவாகச் சமீப காலங்களில் ஈழத்திலே உருவம்- உள்ளடக்கம் சம்பந்தமான விவாதங்கள் மிகக் குறைந்த அளவிலேயே நடைபெற்றுள்ளன. ஆனால் தமிழ் நாட்டிலோ க.நா.சு.வும் அவர் வழி வரும் விமர்சகர்களும் இவ்விவாதத்தை தொடர்ந்து நடத்தி வருவதில் பெரிதும் அக்கறை காட்டி வந்திருக்கின்றனர். இச்செய்தி ஊன்றி கவனிக்கவேண்டியதொன்றாகும்''.

எங்கள் மண்ணின் முதன்மைப் படைப்பாளிகளில் ஒருவரான மு.பொன்னம்பலம் அவர்கள் கலை கலைக்காகவே என்பதையும் கலை மக்களுக்காக என்பதையும் பின்வருமாறு சித்தரிக்கின்றார்.

உயர்ந்த இலக்கியத்தைப் பற்றி உரைக்க வந்த பல விமர்சகர் ஒருவிதCLOUDY IMPENETRA BILITY ஐ தமது அளவு கோலாகக் கொள்கின்றனர். அதாவது எடுத்த எடுப்பிலேயே துளைத்தறிந்துவிட முடியாத ஓர் வித மூட்டச் செறிவை இலக்கியத்தின் சிறப்பாக கொள்கின்றனர். பிரஞ்சுக் கவிஞர் மலர்மே கூறியது போல் ஒருவித லேசான மர்மமும் அந்த மர்மத்தை விளக்க வாசகனையே திறவுகோல் தேட விடுவதும் உயர்ந்த இலக்கியத்தின் அரிய பண்பாகும் என்பதை யாரும் மறுக்கமுடியாது. சங்க இலக்கியங்கள் அந்த வகையைச் சேர்ந்தவை. பாரதியாரின் ''அக்கினிக்குஞ்சு'' ''குயிற்பாட்டு'' ஆகியவற்றையும் உதாரணமாகக் கொள்ளலாம். வாசகர்களை உசார்படுத்தி ஒவ்வொருவனையும் சிந்தித்து தேடச்செய்பவை. சிருஷ்டிகர்த்தாவாக்குபவை வெறுமனே ஒருவனை வாசிக்கும் யந்திரமாக்காமல் அவனின் சிந்தனையைக் கிளறி வாசகனிடமிருந்தும் சிருஷ்டித் தன்மையை எதிர்பார்க்கின்றன. (மு.த.வின் புதுயுகம் பிறக்கிறது. சிறுகதைகளும் அந்த வகையானவையே) சிந்திக்கத் தொடங்கிய வாசகன் சிருஷ்டிகர்த்தா வாகிறான். ஆக்கப்படுகிறான். செயல் வீரனாகின்றான். சேர்ணிவ்ஸ்கி எழுதிய எதுசெய்யப்பட வேண்டும் என்ற நாவலே ரஷ்யப்புரட்சியின் மூலகர்த்தா என்றால் வியப்படைவதற்கில்லை. அதைப்படித்ததால் லெனின் அடைந்த பாதிப்பு அளப்பரியது. மார்க்ஸீயத்தை நடைமுறையில் செயற்படுத்த லெனினுக்கு வழிவகுத்ததும் அதுவே. லெனின் எழுதிய எதுசெய்யப்பட வேண்டும் என்ற நூலும் இந்த நாவலுக்குத்தான் குருதட்சணை கொடுக்க வேண்டும் "சாத்ரே" எழுதிய "ஈக்கள" என்ற நாடக நூல் நாஸீகளை எதிர்க்கும்படி பிரஞ்சு மக்களை மறைமுகமாக தூண்டிற்று. அப்படிப்பல வாசிப்பவனைச் செயல் வீரனாக்கும் சிருஷ்டி இலக்கியங்களே இன்று இடதுசாரி எழுத்தாளர்களிடமிருந்து அதிகமாகக் கோரப்படுகின்றன.



ஆனால்இத்தகைய "துளைத்தறிய முடியாத மூட்டம்" இலக்கியத்தில் அதிக தூரம் இழுத்துச் செல்லப்படும் போது அது வாசகனைச் சிருஷ்டி கர்த்தாவாக ஆக்குவதற்குப் பதிலாக சாகடித்துவிடுகிறது. கலை கலைக்காகவே கட்சிக்காரரின் சீரழிவே இங்குதான் ஆரம்பிக்கிறது. அவர்கள் தம் ஆரம்பத் தொழிலான கண்டுபிடிப் பிலிருந்து நழுவி தமக்குள் தாமே பல உலகங்களை உண்டாக்கத்தொடங்கினர். உண்டாக்கியவர்களாலேயே உணர்ந்துகொள்ளமுடியாத உலகங்கள். தற்கால மேற்கத்தேய எழுத்தாளர்கள் பலர் அப்படித்தான் இன்றும் எழுதுகின்றனர்.தமிழில் 'லா ச. ரா.' வின் சிலகதைகளை உதாரணங்களாகக் காட்டலாம். இந்த உண்டாக்கப்பட்ட உலகங்கள் கடைசியில் விசுவாமித்திரரின் திரிசங்கு சொர்க்கங்களாகத் தொங்குவதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. இவற்றால் எழுதியவனோ பிறரோ பயனடைந்திலர்.

ஆனால் அதே நேரத்தில் 'மக்களுக்காக எழுதப்பட்டவை' என்னும் போர்வையில் உலவும் இலக்கியப் போலிகளும் வெறுத்து ஒதுக்கப்பட வேண்டியவை. இவற்றைப் படைக்கும் கலைஞனோ படிக்கும் வாசகனோ எந்தவிதச் சிருஷ்டித்தனத்தாலும் ஆளப்படுவதில்லை. சிந்திப்போ செயல் பெருக்கோ அல்லது இவற்றுக்கெல்லாம் அடிநாதமாகக் கோரப்படும் உணர்ச்சிப் பெருக்கோ எதுவும் எள்ளளவும் இருப்பதில்லை. உதாரணமாக ரகுநாதனின் கவியரங்குக் கவிதைகளில் பலவற்றைக் காட்டலாம். அவரது 'யாமறிந்த கம்பன' நல்லதோர் உதாரணம். 'கம்பத்திருநாடா ரொம்பச்சரி நின் வார்த்தை' என்று கூறும்போதே இலக்கியம் கேலிக்கூத் தாக தொய்ந்து விழுகிறது. இன்னும் அவர். 'அன்றெனின் அன்றெனும் இன்றெனில் இன்றெனும் இரண்டும் கெட்ட தத்துவத்தில'என்று விரிக்கும் போதும். கவிதை சாகடிக்கப்படுகிறது.

மக்களுக்காக இலக்கியம் இருக்கலாம். ஆனால் மக்களுக்காக இலக்கியம் சாகடிக்கப்படலாமா? இது இன்று இலக்கியத்தைப் பீடித்துள்ள சாபக்கேடு. மக்களைத் தட்டி எழுப்பவேண்டிய சிருஷ்டிகள் போஷாக்கின்றித் தாமே தலைகுத்தி விழுந்துவிடுகின்றன. வல்லவன் துறை அறிந்து இறக்கும் போது தொட்டதெல்லாம் பொன்போல் பொலிகிறது. இதற்கு ரஸ்ஸியக் கவிஞன் மாயா கோவ்ஸ்கி நல்லதோர் உதாரணம். அவனெழுதிய. தொழிலாளரை ஒன்று கூவியழைக்கும் சுவரொட்டி விளம்பரங்கள் கூட உன்னத கவிதை இலக்கியங்கள் ஏன் நம் நாட்டில் சினிமாவுக்குப் பாடிய பட்டுக்கோட்டையின் பாடல்கள் இத்தகையவைதான். 'பொறுமை ஒருநாள் புலியாகும் - அதற்குப் பொய்யும் புரட்டும் பலியாகும'என்று பாடிய அவரது கவிதை எவ்வளவு அழக்காகக் கவிதைச்செறிவோடு உச்சி யில் ஓங்கி அறைகிறது! துறையறிந்து இறங்கு தல் இன்று இடது சாரிகள் கடைப்பிடிக்க வேண்டிய முக்கிய செயலாகும்.

உள்ளடக்கத்திற்கு முன்னுரிமை கொடுத்த கலை மக்களுக்காக என்ற கருத்தை உடையவர்களும். உருவத்திற்கு முன்னுரிமை தந்த கலை - கலைக்காக என்ற கருத்தை வலியுறுத்தியவர்களும் தத்தமது படைப்புக்களில் அவற்றை வெளிப்படுத்திவிட்டுப் போய் விட்டார்கள்.

போய்விட்டார்கள் என்பது படைக்கும் தொழிலை விட்டு விட்டார்கள் என்பதையும். உலகைவிட்டு மறைந்து விட்டதையும் குறிக்கும்.

எனக்கு ஒரு கதை ஞாபகம் வருகிறது. எழுதியவரின் பெயரை இங்கு குறிப்பிடவில்லை. கதையின் பெயர் எனக்கு ஞாபகம் இல்லை.

உள்ளடக்கத்திற்கு மிகுந்த முன்னுரிமை கொடுத்து வெறும் வரட்டுத்தனமான பிரச்சாரப்பாணியில் எழுதப்பட்ட கதை. இதன் மிகச் சுருக்கமான விடயம் இதுதான்.

**சிதம்பரன்**

" ஒரு முதலாளி - அவர் நோய்வாய்ப்பட்டு ஒப்பிறேசனுக்கு ஆஸ்பத்திரிக்கு போகின்றார். டொக்டர் ஒப்பிறேசன் செய்ய கத்தியினால் வெட்டுகின்றார். அது முதலாளியின் இதயப் பகுதி. கத்தி உள்ளே செல்ல மறுக்கிறது. பிறகு தான் பார்க்கின்றார். முதலாளியின் இதயம் இரும்பினால் செய்யப்பட்டது." அவர் இரும்பு இதயம் கொண்ட ஒரு முதலாளி.


இப்படியாக கதை முடிகின்றது. எந்த விதமான உருவச் செழுமையும் இல்லாத இவ்வகைப் படைப்புக்கள் பலமாக அடிவாங்கின.

உருவத்திற்கு முக்கியத்துவம் கொடுத்த படைப்பாளிகள் இன்று வரையும் உள்ளார்கள். உயர்ந்த இலக்கியப் படைப்புக்கள் என அவை சிலரால் இப்போதும் பேசப்படுகின்றன.

இதற்கு பலவிதமான உதாரணங்களைக் கூற முடியும். உள்ளடக்கத்தின் கேள்விகளை எழுப்பக் கூடிய உருவச் செழுமை கொண்ட பல படைப்புக்கள். இலக்கியச் சிற்றேடுகள். மாற்றுப் பத்திரிகைகள் என்பனவற்றிலும் புலம்பெயர் இலக்கியகாரர்களாலும் (அவர்களின் வெளியீடுகளில்) வெளிவந்தன.

எமது விடுதலைப் போராட்டத்தையே கொச்சப்படுத்திய உள்ளடக்கத்தினைக்கொண்ட இவைகள் அற்புதமான உருவச் செழுமையுடன் காஞ்சிபுரம் கட்டி. கனகாம்பரம் வைத்து வரும் எயிட்ஸ் நோயாளி போல வந்து பெயர் பெற்றன.


## துளிர்ப்பு



எல்லாம் தொலைந்து விட்டதாயும்
எல்லாவற்றையும் - நான்
இழந்து விட்டதாயுமே
நேற்றுவரை எண்ணியிருந்தேன்
இருப்பினும்,
வாழ்தல் பற்றிய
கனவுகளும் நம்பிக்கைகளும் ஏனோ
மெல்லவாய் துளிர்விடுகின்றன
என் வாழ்வு..... என் வீடு
என் ஆலயமெல்லாம் - இனி
எப்படியெப்படி இருக்க
வேண்டுமென்று
எண்ணங்கள் சிறகடிக்கின்றன.
பரபரப்பும் அவதியும் நிறைந்த மன-
உழைச்சலும் ஏக்கமும் மலிந்த
வாழ்க்கைச் சூழலில் இருந்து நான்
பிரிக்கப்படுகையில்
எல்லாம் தொலைந்து விட்டதாயும்
எல்லாவற்றையும் - நான்
இழந்து விட்டதாயுமே
எண்ணியிருந்தேன்
இருப்பினும்.....
வாழ்தல் பற்றிய
நம்பிக்கைகளும்
கனவுகளும் ..... இலக்குகளும் - ஏனோ
இந்த வன்னி மண்ணில்
ஒரு புதிராய் எனக்குள்
துளிர் விடுகின்றன.

கௌசி

## என் பிரகடனத்தை எல்லோரும் புரிந்து கொள்ளுங்கள்!



என் மூலத்திற்கான
எல்லாத் தடையங்களையும்
எடுத்துவைத்துக்கொண்டு
இந்த உலகிற்கு
என்னை நான் பிரகடனம் செய்கின்றேன்.
என் பிரகட்னத்தை
எல்லோரும் புரிந்து கொள்ளுங்கள்
என்னிடம் ஆதாரங்கள் இருக்கின்றன
என் பூட்டியின் முதுகில் குத்தப்பட்ட
சிங்களச் சிறி
ரயர்போட்டு எரிக்கப்பட்ட
என் தந்தையின் காற்செருப்பு
படுகொலை செய்யப்பட்டு வீசப்பட்ட
என் சகோதரனின் புகைப்படம்
பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு
புத்திபேதலித்துப்போன என் சகோதரி
குண்டு வீச்சில் கொல்லப்பட்டு
சிதறிப்போன என் சின்னத்தம்பி
எல்லாவற்றையும் இழந்துவிட்டு
எலும்புக்கூடாய்
இன்னமும் உலாவிவரும் என் தாய்
இனியுமென்ன ஆதாரம் வேண்டும்?
நான் உரத்துச்சொல்லி இந்த உலகிற்கு
என்னை பிரகடனம் செய்கின்றேன்
என் இருத்தலை இங்கு உறுதி
செய்வதற்காக.
நான் இந்த உலகிற்கு உரித்துடையவள்
ஒரு போதும் இவ்வுலகை விட்டகலா
விருப்புடையவள்.
என் பிரகடனத்தை
எல்லோரும் புரிந்து கொள்ளுங்கள்!

ஆதிலட்சுமி சிவகுமார்

# குழந்தைநாதம்

## சிறுவர் கதை

## தொட்டதெல்லாம் பொன்னாகினால்...?

ரவிக்குமா ஓர் அழகான குடும்பத்துடன் சந்தோசமாக வாழ்ந்து வந்தான். ரவிக்குமார் உழைப்பிற்கேற்ப ஊதியம் பெற்றுவந்தான். இதனால் அவனது குடும்பம் சந்தோசமாக வாழ்ந்து வந்தது.

நாட் செல்லச் செல்ல ரவிக்குமாரிற்கு ஆசை கூடிவிட்டது. அது வளர்ந்து வளர்ந்து பேராசையாக மாறியது. அந்த ஊரிலேயே தானே மிகப் பெரிய செல்வந்தனாக இருக்கவேண்டும் என்று ஆசை கொண்டான். அதற்கு இறைவனிடம் வரம் கேட்டான். "நான் தொட்டதெல்லாம் பொன்னாக வேண்டும்" என்பதே அவன் கேட்ட வரம் இறைவனும் அவனது ஆசையை நிறைவேற்றினான்.

இப்போது ரவிக்குமார் தொட்டதெல்லாம் பொன்னாக மாறத்தொடங்கிவிட்டது. ரவிக்குமாருக்கு இப்போது மிகப்பெரும் சந்தோசம். ஆனால் அவ் வரம் அவனது உயிருக்கே ஆபத்தாக மாறும் என்பதை அவன் அப்போது உணரவில்லை.

என்ன ஆச்சரியம் அவனது ஆசை மகனை அணைத்தபோது மகனும் பொன்னாக மாறிவிட்டான். ரவிக்குமார் செய்வதறியாது திகைத்தான். அவனுக்குத் தாகம் எடுத்தால் தண்ணீர் குடிக்கமுடிவதில்லை, பசித்தால் உணவு உண்ண முடிவதில்லை. அவன் அவற்றை தொட்டவுடன் அவை பொன்னாக மாறிவிடும். இப்படியாக இவன் நீர் குடிக்கமுடியாமலும் உணவு உண்ண முடியாமலும் பசியால் துடித்து இறந்துவிட்டான்.

**சி.சுலைக்சன்**

## வாரம் ஒரு குறள்



நாம் தூய்மையான ஆடைகளை அணிவோம். காவியைக் கட்டிக்கொள்வோம். நீளமாக சடாமுடியையும் வளர்த்துக்கொள்வோம். நாம் தூய்மையானவர்கள் என்று வெளியுலகிற்கு காட்டிக்கொள்வோம்.

உண்மையில் தூய்மை என்பது தீய சிந்தனைகள், எண்ணங்கள் அற்ற மனதே ஆகும்.

மனது நிறைய தீமைகள் நிறைந்திருக்கும்போது, உடலுக்கு மட்டும் வண்ணை பூசி தூய்மையானவர் என்று காட்டிக் கொள்வது சிறப்பான செயலன்று. இதனால் தான் தூய்மை என்பது காவியிலோ, நீளமான சடாமுடியிலோ இருப்பதில்லை. மனத்தில் தான் தூய்மை இருக்கவேண்டும். என்பதைத்தான்.

*"மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்*
*பழித்தது ஒழித்து விடின்."*

என்று வள்ளுவப்பெருந்தகை இப்படி அழகாகக் கூறியுள்ளார்.

## சொற்சிலம்பம் - 09

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ம | மு | ய | சு | தீ | ஸ் | றி |
| பு | ப் | மெ | த் | வி | ம | ப |
| செ | ர | மூ | ர் | ஞ் | பு | ர |
| ம | லே | வெ | ய் | க் | கு | ச |
| ஸ | வி | ர | பா | ஸ் | ட | ல் |
| த் | ம | வி | ங் | அ | ஷ் | த |
| கா | ந | ம | அ | வி | ர | டி |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

### சொற்சிலம்பம் - 07 இன் விடைகள்

01. சிவப்பு.
02. நீலம்.
03. பச்சை.

01. மாசி.
02. ஆனி.

### சொற்சிலம்பம் - 07 இன் பரிசுக்குரியவர்

ப.பிரசன்னா,தரம் - 04,
விபுலானந்தாக் கல்லூரி,
வவுனியா.

### சொற்சிலம்பம் - 07 இன் பாராட்டுக்குரியவர்கள்

01) கு.நந்தகோபன், கிளி/இந்துக்கல்லூரி கிளிநொச்சி.

02) ச.வசீகரன், மு/மல்லாவி மத்திய கல்லூரி.

03. தி. சுதர்சினி, கிளி/தருமபுரம்ம.வி தருமபுரம்.

04. இ.சுகந்தினி, கிளி/இராமநாதபுரம் ம.வி,தருமபுரம்.

05. த.நதியா, யா/மகா வித்தியாலயம், ஏழாலை.

06. சிவராஜா பிரதீப், யா/ஏழாலைமகா வித்தியாலயம்

ஐம்புலன்கள் மூன்று?

01) ........................................
02) ........................................
03) ........................................

நிறங்கள் இரண்டு?

01) ........................................
02) ........................................

பெயர் :- ........................................

முகவரி :-........................................

........................................

*சொற்சிலம்பம் -09*
*ஈழநாதம்,*
*யாழ் சாலை,*
*கிளிநொச்சி.*

## விடுகதைகளும் விடைகளும்


01. அந்தியிலே வருவான் அதிகாலையில் மறைவான் அது என்ன?
02. அடிமலர்ந்து நுனிமலராத பூ என்ன பூ
03. அறைகள் அறுநூறு அத்தனையும் ஒரே அளவு அது என்ன?
04. ஆண்டுக்கு ஆண்டு அழகாய் உருமாறிவரும் அது என்ன?
05. இதயம் போல் துடிதுடிக்கும் இரவு பகல் விழித்திருக்கும் அது என்ன?

**விடைகள்**

01. இருள். 04. கலண்டர்.
02. வாழைப்பூ. 05. கடிகாரம்.
03. தேன்கூடு

**கலையழகன். தரம் -06A,**
**மன்/இலுப்பைக்கடவை அ.த.க.பா.**

### நண்பர்கள் மூவரும் ஒன்று சேர வழிகாட்டுங்கள்



## அன்னை வேண்டும்



அன்னையைப் போல் தெய்வம்
அகிலத்தில் எங்குமில்லை
அன்பிற்கோ உன்னிடம்
எப்போதும் குறைவில்லை
நல்ல பண்பினை.
பாசமுடன் எனக்கூட்டி
பாரினுள் உயர்த்தும்
பாசமலர் நீயெனக்கு
என்றும் வேண்டும்.


**து.ஜெயராஜ்**
**புதுக்குடியிருப்பு ம.வி**

## பூக்கள்

பரந்து கிடக்கும் உலகிலே
அழகை தருபவள் நீயே
உலகிலே எத்தனை விதமாக - நீ
உள்ளாய் எத்தனை வகையாக -
உள்ளாய்
உன் பெயர் சொல்லவே அழகென்ற
ஒருசொல் வாயினுள் வருகிறது
நீ இயற்கையை அழகு படுத்தும்
ஒரு இன்பரசி தானே
சாமி கும்பிடும் போதும் கூட
உன்னை தூவியே வழிபடுகின்றோம்
நல்ல நாள் தீய நாள் துக்கநாள்
என்னாள் ஆனாலும் உன்பங்கு
அளப்பெரிது. உனைப்போல்
நானும் வரவேண்டும்.

**மு.ரஜீபன், தரம் - 07**

## நகைச்சுவை



**இயமன் :-**
டேய்! எங்க ஓடுறாய்? "நான் இப்போது எனது எருமை வாகனத்தை விட்டுட்டு தற்போது இவ்வகையான வாகனங்களில் வருகிறேன் இனியாரும் என்னிடமிருந்து தப்ப முடியாது."

**மனிதன் :-**
ஆ!ஐயோ! "இப்ப வாகனத்திலதான் இயமன் என்று நிறையப்பேர் சொல்றது உண்மை தான் ஆ...!"

**பூ.நிறஞ்சன்.**




தனி மனித முனைப்பை அழிப்பதை அடிப்படையாகக் கொண்டதே, சமூக முன்னேற்றம். - வில்ஹெல்ம் ஸ்டெக்கெல்




# பாடசாலை போகவேணும்

-ஆங்கிலத்தில் குவான்ஹுவா-

மீண்டும் புற்களின் சரசரப்புக் கேட்டது. அந்த ஒலி இன்னொரு பெரிய பாறையின்பின்னால் இருந்து எழுவதுபோல் தோன்றியது. அவதானமாக அ ர் அந்தப் பாறையின் பின்னால் சென்றார். அங்கே பற்றைகளுக்கிடையில் இரும்பன் குந்திக் கொண்டிருந்தான். அவனது கூடை வெறுமையாக இருந்தது. பலமாகச் சிரித்து விடாமலிருப்பதற்காக அவன் தன் வாயை இறுகப் பொத்திக்கொண்டிருந்தான்.

“நீ இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?” என்று ஆசிரியர் சாய் பதற்றத்துடன் கேட்டார்.

ஆனால் அவரை நோக்கிப் புன்னகை புரிந்தபடி, “பொத்தகங்களை காவிச் சொல்ல உங்களுக்கு உதவவே நான் வந்தேன்” என்று இரும்பன் பெருமையுடன் பதில் சொன்னான்.

“நீ பகல் சாப்பாட்டுக்குப் போகாவிட்டால் உன்னுடைய தாயார் கவலையடைவார்” என்று கடுமையாக சொன்ன ஆசிரியர் சாய், “நல்ல பிள்ளை போல் வீட்டுக்குத் திரும்பிப் போ” என்றார். குறும்பாகக் கண்களைச் சிமிட்டிய இரும்பன் தான் ஆசிரியர் சாயுடன் வேலை ஒன்றுக்காகச் செல்வதாக தன் தாயிடம் சொல்லும்படி தன்னுடன் வந்த சிறுமியிடம் சொல்லி அனுப்பி விட்டதாகத் தெரிவித்தான்.

அவன் கடந்து வந்திருந்த குன்றையும் அகழியையும் ஆசிரியர் திரும்பிப் பார்த்தார். ஆழமான பெருமூச்சை இழுத்துவிட்ட அவர் “நீ இவ்வளவு தூரம் வந்து விட்டதால் உன்னை தனியே திருப்பி அனுப்ப முடியாது. என்னோடு கூட வா!” என்றார்.

இரும்பன் மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தான். தனது கூடையை தோளில் மாட்டிக் கொண்ட அவன் ஆசிரியர் சாய்க்கு வழிகாட்டியபடி முன்னால் நடந்தான். நண்பகல் அளவிலே அவர்கள் கழுகுக் கூட்டு மலையை அடைந்தனர்.

கழுகுக் கூட்டு மலையின் வட புறச் சரிவிலே இருந்த, ஒரு விசாலமான குகையிலே எட்டாவது வழி இராணுவத்தின் அச்சுக்கூடம் இருந்தது. நல்ல மறைவாக அமைந்திருந்த அந்தக் குகையின் மேலே செடி, கொடிகள் அடர்த்தியாகப் படர்ந்திருந்தன.

தனது ஆசிரியரின் மேலங்கியின் பின் பகுதியைப் பிடித்தபடி நன்கு குனிந்து கொண்டு இரும்பன் அந்த குகையினுள் பிரவேசித்தான். பாறைகளின் இடையே இருந்த ஒரு இடைவெளியினூடாகக் கடந்து, சிறிது தூரம் தட்டுத்தடுமாறிச் சென்றபின் இன்னொரு இடைவெளியினூடாக மெல்லிய வெளிச்சம் வருவதைக் கண்டார்கள். அதனூடாக அவர்கள் உள்ளே போனார்கள். உள்ளே போனதும் “ஓ!” என்று இரும்பன் வியப்புக் குரல் எழுப்பினான். திடீரென மூன்று சிறிய அறைகளின் அளவைக் கொண்ட பெரிய இடமொன்றினுள் தான் இருப்பதை உணர்ந்ததே அதற்குக் காரணமாகும். அந்த இடத்தில் மெழுகுதிரிகள் ஏற்றப்பட்டு நன்கு ஒளியூட்டப்பட்டிருந்தன. பெரிய, ஒப்பரவான, பாறைத்துண்டங்கள் மேசைகளாகப் பயன்பட்டுக் கொண்டிருந்தன. சிறிய பாறைத் துண்டங்கள் வாங்குகளாக பயன்பட்டன. அந்த இடத்தில் சுறுசுறுப்பாக வேலை நடந்துகொண்டிருந்தது. எட்டாவது வழி இராணுவ வீரர்கள் பலர் அங்கே ஏதேதோ எழுதிக்கொண்டிருந்தனர். சிலர் படியெடுப்பு அச்சுகளை கையால் வெட்டிக்கொண்டிருந்தனர். ஒருவர் கையால் இயக்கப்படும் அச்சு இயந்திரத்தில் வேலைசெய்து கொண்டிருந்தார். ஒரு உருளையின் மீது மையைப் பூசி படியெடுப்பு அச்சின் மேலே அதனை உருட்டி அச்சுப் பதித்துக்கொண்டிருந்தார். வேறுசிலர் அச்சிடப்பட்ட பக்கங்களை அளவாக வெட்டி, மடித்து, சேர்த்துக் கட்டிக்கொண்டிருந்தார்கள். ஆசிரியர் சாயையும் இரும்பனையும் அவர்கள் எல்லோருமே அன்போடு வரவேற்றார்கள்.





அங்கே ஆர்வமூட்டுகின்ற பல விடயங்கள் இருந்ததால் எந்தப்பக்கம் பார்ப்பது என்று தெரியாமல் இரும்பன் விழித்துக்கொண்டிருந்தான். அந்த இடம் முழுவதும் வைக்கோலின் இனிமையான மணத்தினால் நிரம்பியிருந்தது. அந்த குகையின் தரையிலே கனமான அடுக்காக வைக்கோல் பரவப்பட்டிருந்தது. இராணுவப் போர்வைகள், முதுகுப்பைகள், மேலங்கிகள், பிஸ்ரல்கள், கையெறிகுண்டுகள் முதலியவை ஆங்காங்கே காணப்பட்டன குகையின் மையத்திலே எரிந்த நெருப்பின் மேலிருந்த பெரிய பானை ஒன்றினுள் ஏதோ தளதளவெனக் கொதித்துக் கொண்டிருந்தது. கோப்பைகளும் உணவை உண்பதற்கான இரட்டைக்கோல்களும் (சீனர்கள் உணவை உண்பதற்கு கரண்டிக்கு பதிலாக இரண்டு கோல்களை பயன்படுத்துவார்கள்) வைக்கப்பட்டிருந்தன,

(தொடரும்...)

தமிழில்
வி.பி.யோசப்

---

# பொருண்மை வாசல்


## எங்கள் மண்ணின் மாண்பு

சிதம்பரதிரு

மாரிகாலம் ஆரம்பமாகிவிட்டது. இது ஒன்றும் புதினமான விடயம் அல்ல. ஒவ்வொரு வருடமும் மாரிகாலம் வரத்தான் செய்கின்றது என்று சொல்லுகின்றீர்களா.

ஒருவருடத்தின் இறுதிப்பகுதியில் வரும் மாரி பொய்த்துப்போனால் என்ன நடக்கும் என்பதை யோசித்துப் பார்ப்போம். தொடர்ச்சியாக மழை பெய்யாதுவிட்டால் எமது சூழலில் என்னென்ன மாற்றங்கள் நடக்கும் என்று கற்பனை செய்துபார்க்க முடியுமா?

வாய்க்கால்களில் தேங்கிநிற்கும் நீர் வற்றியவுடன் என்ன நடக்கின்றது என்பது தெரியும் தானே! நீர்வற்றியவுடன் நிலம் காய்ந்து வெடிப்பது எமது வரண்ட பிரதேசங்களில் காணக்கூடியது ஆகும். அது மட்டுமல்லாது புழுதியாக அனற்காற்றில் மண் அள்ளுண்டு போவதும் வழக்கம்.



எமது பகுதிகளில் இது அதிகம். யாழ் குடாநாட்டில் நெடுந்தீவிலும், வலிகாமம் மேற்குப் பகுதியிலும் இவ்வாறான செயற்பாடுகள் உண்டு.

கோடை காலத்தில் எமது பகுதிகளில் போதுமான மழை பெய்யாமையே இதற்கு முதற்காரணம். தனியே மாரிகாலத்தில் பெய்யும் மழையினால் எமது மண் வளத்தைப் பாதுகாக்க முடியாது.

எனவே இத்தகைய பிரதேசங்களின் மண்வளத்தைப் பாதுகாக்க நாம் செய்யவேண்டிய காரியங்களில் முதன்மையானது இப்பகுதிகளில் தொடர்ச்சியான மர நடுகையை மேற்கொள்வது.

மற்றது மாரிகாலத்தில் பெய்யும் மழையை தேக்கி வைப்பதற்கான நடவடிக்கைகளைச் செய்யவேண்டும்.

இந்த கிரமமான நடவடிக்கைகள் மூலம் எம் மண் வளத்தை நாம் பாதுகாக்க முனையவேண்டும். எமது மண்ணுக்கு ஏற்பட்டுள்ள பல்வேறு அச்சுறுத்தல்களில் இதுவும் ஒன்று என்பதை நாம் உணர வேண்டும்.

## பொருண்மிய மதியுரையகம் (TECH)

பொருண்மிய மதியுரையகமானது 1992ஆம் ஆண்டு அமரர் ஆ.துரைராஜா அவர்களால் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து பல்வேறு பொருளாதாரத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. குறிப்பிட்ட ஒரு திட்டத்தின் சாத்தியப்பாடுகள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்வது, அதற்குப் பயன்படக்கூடிய ஏனைய வளங்கள் பற்றி ஆராய்வது, நிதிக் கணிப்பீடுகளைத் தயாரிப்பது போன்ற செயற்பாடுகளை மேற்கொண்டு அத்திட்டங்களுக்குத் தேவைப்படும் நிதியினை சர்வதேச நிதி நிறுவனங்களிலிருந்து பெறுவதன் மூலமும் தனது நிதியினைக் கொண்டும் நடைமுறைப் படுத்திவருகிறது.

வடக்குக் கிழக்கு மாகாணங்களின் சமூக பொருளாதார அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு கிராமிய வேலைத்திட்டங்கள். வருமானம் தரும் திட்டங்கள் என்பவற்றை செயற்படுத்தி வருகிறது. கிராமிய வேலைத்திட்டங்களாக கிணறுகள் அமைத்தல். திருத்துதல். மலசலகூடம் அமைத்தல். பாடசாலைக்கட்டடம் அமைத்தல். பொதுநோக்கு மண்டபம் அமைத்தல். வீடுகள் வேய்தல். குளக்கட்டு. வாய்க்கால் திருத்துதல். வீதித்திருத்தம். உணவு அல்லாத பொருட்கள் வழங்குதல் போன்றவற்றையும். மக்களின் வருமானத்தை அதிகரிப்பதற்கான திட்டங்களாக நெற்செய்கைத்திட்டம், சிறுதானியச் செய்கைத் திட்டம, பசுமாடு வளர்ப்புத் திட்டம், வீட்டுத்தோட்டம். ஆடுகள். கோழிகள் என்பன வழங்கல் போன்ற திட்டங்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

இதன்மூலம் வறிய மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வடைவதோடு. இடம்பெயர்ந்து மீளக்குடியேறிய மக்களும் புத்துயிர் பெற்றுவருகின்றனர்.

பொருண்மிய மதியுரையகத்தின் விவசாய வேலைத்திட்டங்களாக விவசாயம். விலங்கு வேளாண்மை. காய்கறிச் செய்கை ஆகிய துறைகள் சம்பந்தமாகவும் நீர்ப்பாசனக் குளங்கள் மேம்பாடு செய்தல். புனரமைத்தல். அணைக்கட்டு அமைத்தல் போன்றவற்றிலும் ஈடுபட்டு வருகின்றது. இதன் ஒரு நடவடிக்கையாகவே வட்டக்கச்சியின் ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணை அமைந்துள்ளது. இங்கு விதை நெல் உற்பத்தி. நாற்றுஉற்பத்தி. பழமரக்கன்று உற்பத்தி. மரக்கறி உற்பத்தி இவற்றுடன் நல்லினப் பசுக்கள். நல்லின ஆடுகள். முட்டைக்கோழி. இறைச்சிக்கோழி என்பனவும் வளர்க்கப் படுகின்றன.

விலங்கு வேளாண்மையை விருத்தி செய்வதற்காக கண்டிவீதி கிளிநொச்சியில் செயற்கை முறைச் சினைப்படுத்தல் நிலையம் அமைக்கப் பட்டு செயற்படுத்தப்பட்டுவருகிறது. இங்கு மாதாந்தம் 250 கால்நடைகளுக்கு செயற்கைமுறைச் சினைப் படுத்தல் மேற்கொள்ளப்படுகிறது. இதனைவிட புதுக்குடியிருப்பில் அர்ச்சுனா பால்சாலை. வட்டக்கச்சியில் வன்னி சுரபி பால்சாலை என்பன நிறுவப்பட்டு பால் உற்பத்திப் பொருட்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

உப்பு உற்பத்தி நிறுவனத்தால் ஆனையிறவு. குறிஞ்சாத்தீவு ஆகிய உப்பளங்களில் உப்பு உற்பத்தி நடைபெறுகிறது. ஆனையிறவில் அயடீன் கலந்து பொதி செய்யும் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பொருண்மிய மதியுரையகத்தின் கணனிப்பயிற்சி வழங்கும் திட்டத்தின் மூலம் முல்லைத்தீவில் முள்ளியவளையிலும். கிளிநொச்சியில் வட்டக்கச்சியிலும் கணனிப் பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டு பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்பட்டுவருகின்றன. இதேபோல் பின்தங்கிய கிராம மாணவர்களின் கல்வியைக் கருத்திற்கொண்டு திட்டக் கிராமங்களிலுள்ள முன்பள்ளிகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மாணவர்களின் மாலை நேரக் கல்வியை ஊக்குவிப்பதற்காக முன்பள்ளிகள். கிராமப் பாடசாலைகள் என்பவற்றிற்கு சூரிய மின்கலங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சூழல் பாதுகாப்பினைக் கருத்திற்கொண்டு சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்துதல். மர நடுகையை ஊக்குவித்தல். சூழலைப் பாதுகாப்பதற்கான கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் (பொலித்தீன் பாவனை தடை) போன்றவற்றோடு உயிரியல் பீடைக் கட்டுப்பாடு. இயற்கை உரப்பாவனை போன்றவற்றையும் ஊக்குவித்து வருகிறது.

இவற்றைவிட பொருண்மிய மதியுரையகத்தின் பரீட்சாத்த நடவடிக்கைகளுள் ஒன்றாக காற்றாலை மின் உற்பத்தித் திட்டம் பொருண்மிய மதியுரையக ஜேர்மன் கிளையால் வட்டக்கச்சி ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது ஒரு பரீட்சாத்த முயற்சி என்பதால் எதிர்காலத்தில் மக்களும் பயன்படுத்தக் கூடிய சாத்தியக்கூறுகள் நிறையவே உள்ளன. இவற்றைவிட சூரிய மின் கலத்தின் மூலம் நீர் இறைத்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு குறைந்த நீரைக் கொண்டு விவசாயம் செய்வதற்காக சொட்டு நீர்ப்பாசனத்தை பரீட்சாத்தமாக மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளுடன் மேலும் பல நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

லீ.பாஸ்கரன்.

The Economic Consultancy House
பொருண்மிய மதியுரையகம்
Registered No. L-73401
Head office, Vaddakkachchi, Kilinochchi.
T.No. : 0777 739261
: 0777 748313
008821679004122
+94(0)212223954
Fax : +94(0)212223958
E-Mail : info@ne-tech.org
institute_te@hotmail.com
anavaloga22@hotmail.com




## அவர்களுக்கு நான்

வீசுகின்ற தென்றலே
நீ பேசு.
இவர்களுக்கு.......
ஒரு தடவை உரைத்துவிடு
சுதந்திர காற்றின் சுகத்தை..

## தென்றல்

அதைப்பற்றி நான்
அலட்ட மாட்டேன்
அதன் சுகமறிந்தால்
இவர்கள்
எனை நாடி
இங்கு வரமாட்டார்கள்.

யோ.புரட்சி

## எல்லாம் விந்தையகத்தான்

எங்கிருந்தோ வந்தேன்
எதிர்பாராமல் சந்தித்தேன்
விபரம் தெரியாமல் கதைத்தேன்
விபத்தில் இதயத்தைக் கொடுத்தேன்
விட்டுட்டு போக தவித்தேன்
வீண் வம்பு எதற்கு என்று அலைந்தேன்
வித்தியாசம் காண முடியாமல் இருந்தேன்
விடை பெற்ற வேளை துடித்தேன்
எல்லாம் விந்தையாகத் தான்
இருக்கிறது.

கனவா! நனவா!

வசந்தி

## எதை இழப்பது

போரால் தந்தையை இழந்தேன்
நோயால் தாயை இழந்தேன்
வறுமையால் சொந்தங்களை இழந்தேன்
வீதி விபத்தால் சகோதரனை இழந்தேன் புலம்
பெயர்வால் நண்பனை இழந்தேன்
படை எடுப்பால் படிப்பை இழந்தேன்
இத்தனையும் இழந்த பின்
இனியும் எதை இழப்பது....

## சுமை

கண்களுக்கு கனவுகள் சுமை
நெஞ்சிற்கு நினைவுகள் சுமை
உள்ளத்திற்கு துன்பம் சுமை
வெள்ளத்திற்கு அணைகள் சுமை
ஏழைக்கு எதிர்பார்ப்புகள் சுமை
அநாதைப் பிறவிக்கு - இந்த
அகிலமே சுமை.

க. முருகானந்தன்...

## கலிகாலம்

எருமைக் கடாவில்
ஏறிவந்த எமன் ~ இப்போது
புத்தம் புது வீதி வழி
சத்தம் ஏதுமின்றி
ஏறி வருகின்றான்
நித்தம் ஒரு வாகனத்தில்.

மா.தமிழவன்

## சொல்லவேண்டிவந்த பொய்கள்

1996ஆம் ஆண்டு அது முல்லைத்தளம் புலிகள் கையில் யாழ் குடா பகைவரின் பிடியில் தொடர்ந்து கிளிநகரை ஆக்கிரமிக்கும் நோக்குடன் சத்ஜெய என பெயர் சூட்டப்பட்ட இராணுவ நடவடிக்கை ஒருநாள் அதிகாலை புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் கடும்சமர் நடந்து கொண்டிருந்தது. மக்கள் அல்லோலகல்லோலப்பட்டு உறவுகளை இழந்தும் வீடு வாசல்களை இழந்தும் கையில் அகப்பட்ட பொருட்களுடன் பாதுகாப்பான இடங்களை தேடி ஓடிக்கொண்டிருந்தார்கள். ஓமந்தைப் பக்கமாக செல்லும் ஒருதொகுதி மக்களுடன் எனது குடும்பமும் ஒன்று. நேரம் நள்ளிரவு ஒரு மணியை நெருங்கிக் கொண்டிருந்தது. எல்லோரும் தூக்கத்தின் பிடியில் சிக்கியவாறு மாங்குளத்தை சென்றடைந்தோம். இங்கு தங்கிவிட்டு விடிய பயணத்தை தொடர்வோம் என உத்தேசித்து எல்லா மக்களும் தூங்குவதற்கும் தங்குவதற்கும் சாப்பிடுவதற்குமாக ஆயத்தங்கள் செய்துகொண்டிருந்தார்கள் துயர் சுமந்த குழந்தைகள் முதல் பெரியோர் வரை சாப்பாடில்லாமல் கூட வாடிக் கொண்டிருந்தார்கள். எனது குடும்பமும் இப்படித்தான். எமது இரவு சாப்பாட்டிற்காக ஒரு கடையைத் தேடிப் பிடித்து ஐந்து றாத்தல் பாண் வாங்கினோம். மேலதிகமாக பாண் வாங்க கடையில் பாணும் இல்லை. கையில் காசும் அப்போது இல்லை. பத்துப்பேர் குடும்ப எண்ணிக்கை. பாதையருகிருந்த ஒருமரத்தின் கீழ் பத்துப்பேரும் அமர்ந்திருந்து பாணை துண்டுபோட்டு தன்னை தவிர்த்து எங்கள் ஒன்பது பேருக்குமாக பகிர்ந்து தந்தாள் அம்மா. ஆனாலும் எனக்கு பசி அடங்கவில்லை. இடப்பெயர்வு ஏற்படும் முன்னதாக வீட்டில் மதியம் சாப்பிடுவதற்கு அழைத்த போது நான் விளையாட்டு ருசியில் வரமறுத்ததால் அந்த வாட்டலும் சேர்த்து வாட்டியது. என்னைச் சுற்றும் முற்றும் ஒரே சனக்கூட்டம். ஒருநேர சாப்பாடில்லாமல் வாடும் முகங்களைக்கண்ட போதிலும் எனக்கு மனம் கேட்கவில்லை. இன்னுமொரு இரண்டு றாத்தல் இறுக்கினால்த்தான் பசி கொஞ்சம் தணியும் போல் இருந்தது. எல்லோருக்கும் பாணை பங்கிட்டு கொடுத்துவிட்டு என் தங்கை இரவில் சாப்பாடு கேட்பாள் என்பதால் அம்மா அரை றாத்தல் பாண் வைத்திருந்ததை கண்டு விட்டேன்! பசிக்கொடுமை பெரிதும் வாட்டியதால் அம்மா... அம்மா நீங்கள் எனக்கு பாண் தரயில்ல உண்மையா தரயில்ல என்றேன். சுற்றியிருந்த அனைவரும் என்னை ஒரு முறை பார்த்தார்கள். எனக்கு நெஞ்சில் தண்ணியில்லை. வெட்கத்தால் தலை குனிந்து கொண்டேன். மீண்டும் அருகாக சென்று அ..ம்..மா பாண் நீங்கள் தரயில்லை மெதுவாகச் சொன்னேன். அம்மா கண் பார்வை குன்றியவள் என்பதால் இவனுக்கு கொடுத்தேனோ என்னவோ தெரியேல்ல என்ற சந்தேகம் இல்லாமல் பாணை தூக்கித் தந்தாள். பிறகென்ன ஒரு பிடிபிடித்து விட்டு கிளை பரப்பி நின்ற மரத்தின் கீழே தூங்கலானேன். அன்று தாங்க முடியாத பசிக்கொடுமையால் அம்மாவையே ஏமாற்ற பொய் சொல்லவேண்டி வந்து விட்டது.

ஆனால் எனக்கு அன்று அந்த பொய் சொல்ல வேண்டிய பொய் தான்.

க.ஈழக்குமார்

## ஊக்கமாத்திரை

## "என்னாலும் முடியும்"

காலடி பிசகினால் நெருஞ்சி முள்ளு பதம் பார்க்கும். அசட்டையாகப் போய்க்கொண்டிருந்தால் அருகிலுள்ள கிளைகள் எம்மை சுயநினைவுக்கு கொண்டுவரும். அப்படியான ஒற்றையடிப் பாதையால் தான் இராசுவின் வயலுக்குச் செல்லவேண்டும். அதையும் தாண்டினால் தான் எனக்கு மாமனார் சீதனமாக தரவிருக்கும் வயலிற்குள் நுழைய முடியும்.

என்னையறியாமலே எனது கைகள் சறத்தைப் பற்றுகின்றன. அது முழங்காலிற்கு சற்று மேலாகவே மடிந்து கொள்கின்றது. எதிரே வருபவரை நேருக்கு நேராய் எதிர்கொள்ளும் பார்வை பல அடிகள் நகர்ந்து வளைவால் திரும்பியபோது......

அந்த இனிமையான குரல் என்னை ஒரு தடவை உற்றுக்கேட்கத் தூண்டியது. அந்தக் குரலில் தெளிவு இருந்தது. தன்னம்பிக்கை ஊறியிருந்தது. வாழ முடியும் என்பதைச் சொல்லியிருந்தும், பண்பைக்கூட சொல்லியிருந்தும் அது ஒரு பாடலாகவே என்னை அடைந்தது. இது ஒரு நாட்டுப்பாடலாகவே இருக்குமெனப் புரிந்து கொண்டேன். நான் அதைச்சொல்கின்றேன்.



எரையறையை நீங்கள் உங்களுக்கேற்றவாறு வகுத்துக்கொள்ளலாம்.

"பரவசமாய் ஆடிப்பாடி வேலை செய்யனும்.பாரினிலே நல்லவராய் வாழத் தெரியனும். பணம் பதவியென அலையக்கூடாது.பக்குவமாய் உழைத்து உயரக்கற்றுக் கொள்ளனும்."

இவ் வரிகளுக்கான மெட்டு, இசை எல்லாமே ஒரு விவசாயியின் வாயிலிருந்தே பிறந்திருந்தது. அவன் வேறு யாருமல்ல இராசு என்ற இளைஞன்தான். துரோகிகளை அகற்றுவது போல களைகளை பயிரிடம் இருந்து அகற்றியவாறு பாடிக்கொண்டிருந்தான். என்னைக் கண்டதும் ஒருபுன்னகை அவன் உதட்டில் உதிர்ந்தது. பதிலுக்கு என்னிட மிருந்து ஒன்று."என்ன குமரன் இஞ்சால. வரம்பில பார்த்து நட.. கால் வழுக்கிப் போடும்" என்றபோது அவனது முகத்தில் ஏதோ ஒரு அசைவு ஓடி மறைந்தது. குமரனிற்கு வயல் பக்கம் சென்ற வழக்கம் மிகவும் குறைவு. அதனால் தான் இராசு மறைமுகமாக வெளிப்படுத்தினான்.

"ம்ம்........ இதுக்குத்தானே நான் A/L படிச்சனான். வயல் கொத்திற தெண்டால் நான் எப்பவோ படிப்ப பாதியிலேயே நிப்பாட்டி இருப்பன்."

"நல்லா சொன்ன. நல்ல போடு போட்ட. உறைக்கிற மாதிரிக் கேட்ட. ஆனா என்னக்கேட்ட மாதிரி வேறயாரையும் கேட்டுப்போடாத"

"எண்டா மச்சான்"

"நானும் A/L படிச்சனான் தான். உனக்கும் தெரியும் தானே. நான் எத்தின வேலைக்கு விண்ணப்பம் போட்டனான் உனக்குத் தெரியுமா....? வேலை கிடச்சுதே இல்லத்தானே. படிப்புக்கேற்ற உத்தியோகம் வேணுமெண்டு நானும் இருந்திருந்தா.....! அப்பப்பா நினைச்சுப்பாக்கவே வெறுக்குதடா.நானும் உன்னை மாதிரி வறட்டுக் கௌரவத்தைப் பார்த்திருந்தால் என்ர நிலைமையும் படுகுழிக்குள் தானடா."

"இது எனக்கு சரிவராதடா. நான் வெளிநாடு போகப்போறன். அது தான் நல்ல முடிவாத் தெரியுது."

சொந்த மண்ணில ஒரு ரூபாய் உழைத்தாலும் அது பெறுமதியாய்தான் இருக்கும். டேய் எல்லாருமே சந்தர்ப்பங்களுக்காய் காத்திருக்கின்றோம். நாங்கள் சந்தர்ப்பத்திற்காக காத்திருக்காமல் சந்தர்ப்பங்களை நாங்களே உருவாக்கிக் கொள்ளவேண்டும்."

"சரிமச்சான் போட்டுவாறன்."

"என்னடா கசக்குதா.....? இல்லாட்டி மூளைக்கு விளங்கிட்டுதா...?

"முதலாளி மன்னிக்கோணும். உள்ளே வரலாமா"என்றவாறு கைகளைப் பிசைந்தவாறு சோமு அவர் முன்நின்றான். அப்போது தான் குமரன் தன் பழைய வாழ்க்கைப் புத்தகத்தை மூடிக்கொண்டான். ஆனாலும் இவன் மனக்கண்ணிலே இராசுவின் முகம் மலர்ச்சியுடனேயே தோன்றிமறைந்தது.

இப்போது குமரன் ஒரு பெரிய விவசாயி. அவன் உழைப்பின் வேகம் அவனை உயர்த்தியிருந்தது. அவன்கூட பலருக்கு வேலை கொடுத்திருந்தான். "அன்றைய இராசுவின் பாடலும் அந்த வார்த்தைகளும் என்னை எவ்வளவு மாற்றிவிட்டது. என்னாலும் சாதிக்க முடியும் என்பதை எப்படி எனக்குள் முளைவிடச்செய்தான். இவனைப் போன்ற நல்ல நண்பர்கள் எல்லோருக்கும் இருப்பார்களாயின் இன்று ஒவ்வொருவருடைய வளர்ச்சியும் ஒரு வேகமாக இருந்திருக்கும்." இது அவனது மனவோட்டம்.

நல்ல அறிவுரைகளை ஏற்று சிந்தித்து நடந்தால் எங்களால் எதையும் செய்ய முடியும் அல்லது சாதிக்க முடியும் என்பதை விட என்னாலும் எதையும் சாதிக்க முடியும் என்பதை வேதமாகக் கொண்டு காலத்தின் மணற்பரப்பில் காலடிகளை பதிப்போமானால் எவறெஸ்ரில் கூட இலகுவாக ஏறிவிட முடியும்.

வி.தேவபானு.

## குறுக்கெழுத்துப்போட்டி - 44

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | 06 | 07 |
| 08 | | | | | 13 | |
| 15 | | | | | | |
| 22 | 23 | 24 | | 26 | | |
| | | | 32 | | | |
| | | | | | 41 | |
| | | | | | 48 | |

### இடமிருந்து வலம்

01. கற்ற கலையை சபையோர்முன் காண்பித்தல்.
08. தேவர்களின் தலைவன் ஓர் எழுத்தை இழந்து குழம்பியுள்ளது.
13. கண்ணைக் காப்பது.
15. காணிக்கை.
22. நட்சத்திரம் குழம்பியுள்ளது.
41. மாலைக்கு எதிரானது.
48. தெரு.

### மேலிருந்து கீழ்

01. இரகசியம்.
06. பிறப்புக்கு எதிரானது குழம்பியுள்ளது.
07. விளையாட்டுத் திடல் குழம்பியுள்ளது.
23. குழந்தைகளைத் தூங்கவைக்கும் பாடல்.
24. தினக் கூலி.
26. மனம்.
32. இறைவனை வழிபடும் இடம்.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.42 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

01. ஆபரணம்,
08. சிவனொளிபாதம்.
17. கார்த்திகை.
22. பந்தயம்.
32. ஆசாரம்.
37. கடுகு.
41. ஆனி.
47. கதலி.

**மேலிருந்து கீழ்**

01. ஆசிரியன்.
02. பவளம்.
07. காகம்.
24. தடாகம்.
32 ஆகுதி
42. கனி.

**இளையவர்களே!**
**மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி தங்கள் பெயர் முகவரியை இணைத்து அனுப்புங்கள்.**

குறுக்கெழுத்துப்போட்டி,இல.44
வெள்ளிநாதம்
ஈழநாதம்.
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

**குறுக்கெழுத்துப்போட்டி இல.42 இன் பரிசுக்குரியவர்**

**S. சுவாதி,**
**49,D8 உருத்திரபுரம்,**
**கிளிநொச்சி.**

**குறுக்கெழுத்துப்போட்டி இல.42 இன், பாராட்டுக்குரியவர்கள்.**

சு. பிரபாகர்ன்,
8ம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

தி. சிறிரஜீவன்,
கிளி/இந்துக்கல்லூரி,
கிளிநொச்சி.

க. நடராசா,
செக்கடிப்புலவு
வவுனியா,

விஷ்ணுஜன்,
கொக்குவில்.

சி. சங்கீதா,
சி. சம்பூரணி,
வட்டுக்கோட்டை.

S.சிறியாணி,
வைரவபுளியங்குளம்,
வவுனியா.

## சினிமா

# குறும்படம், விவரணப்படம், முழுநீளப்படம், பிரச்சாரப்படம்

**எந்தப்பொதுவான** விளக்கத்தின் உள்ளே நுழைந்தோமாயினும் சில குறிப்பிட்ட சிறப்புத்தன்மைகளையும் விசேஷமான பிரிவுகளையும் நாம் பார்க்க முடியும்.

அந்தந்தப்பிரிவுகளுக்கென்று சில இலக்கணங்களையும் விஷேச அடையாளங் களையும் இதினின்று நாம் வகுக்க முடியும்.

சினிமாவும் அப்படித்தான். கமெரா வினால் பிடிக்கப்படும் பிம்பங்கள் அனைத்துமே ஒரே தன்மையானவையல்ல. சொல்ல நேரும் பிரச்சினைக்கு ஏற்ப அதன் வடிவங்களும், சொல்லும் முறை களும் வேறுபடுகின்றன.

சினிமாவின் ஒரு சில பிரிவுகளை மட்டும் இப்போது எடுத்து க்கொள்வோம்.

குறும்படம் என்பதையும் முழுநீளப் படம் என்பதையும் இரண்டு விசயங்கள் தீர்மானிக்கின்றன.

01. அதன் கால அளவு அதாவது அது ஓடும் நேரம்.

02. குறும்படம் ஒரு சலனத்தை ஏற்படுத்தும் தன்மை வாய்ந்தது. முழுவாழ்க்கையையும் இது எடுத்துக்கொள்ளாது. வாழ்வின் ஒரு சிறுசம்ப வத்தை அல்லது ஒரு மனிதனின் நிமிடமான ஆவேசத்தை இவ்வகைப்படம் எடுத்துக் கொள்



கிறது. இவ்வகைக்கு உதாரணம் ஜீவனின் எச்சில்போர்வை எடிட்டர் லெனினின் நாக்கவுட்.

குறும்படம் 15 நிமிடங்களுக்குத்தான் பெரும்பாலும் அமைகிறது. இலண்டனில் சனல் நான்கு தொலைக்காட்சி பார்க் லேஸ்வங்கியுடன் இணைந்து இத்தகைய படங்களுக்கென்று போட்டியும் நடத்துகிறது. பாரிஸ் கலை பண் பாட்டுக்கழகம் நடாத்திய போட்டியும் இத்தன்மை யானது தான்.

முழுநீளப்படம் வாழ்க்கை யின் பல் வேறு பரிமாணங்கள் பல்வேறு மனிதர்களின் அனுபவங்களுடன் பதிவு செய்ய முயல்கிறது. ஆங்கிலப்படங்கள் குறைந்த பட்சம் 90 நிமிடங் களாக இருக்க தமிழ்ப்படங்கள் 150 நிமிடங்களி லிருந்து 180 நிமிடங்கள் வரை இருக்கிறது. சில படங்கள் 6 மணி நேரங்களில் கூட இருக் கிறது.

உதாரணம்:இந்திப் படத்தில் மேரா ராம்ஜோக்கர் ஆங்கிலப்படத்தில் : ஹேம்லட்

புலம்பெயர் நாட்டுச்சினி மாவில் முகம்படம் முழுநீளத்திரைப்படத்திற்கான தன்மைகள் கொண்டது. நிதர்சனம் தயாரித்த பெரும்பாலான படங்கள் குறும்பட வகையைச் சேர்ந்தவை.

குறும்படத்தில் குறிப்பிட்ட பிரச்சி னையை உக்கிரப்படுத்து வதாகவே இசை, படத்தொகுப்பு, பிம்பங்கள், இடம் போன்றன அமைய வேண்டும். முழுநீளப்படத்தில் கால அவகாசம் பார்வையாளர்களைத் திசை திருப்பிவிடாதிருக்க, இடைவெளிகளை நிரப்பு மாறு இசைக்காட்சிகள் இயற்கையின் விரிதல் போன்றன இடம் பெற வேண்டும்.



இந்த வரை யறையை மீறிய படங்களும் விதிவிலக்காக உண்டு.

போலாந்து இயக் குநர் கீஸ்லாவ்ஸ்யின் A Short Film about Killing படம் தொலைக்காட்சிக்காக 50 நிமிடம் எடுக்கப்பட்டு பிற்பாடு அதன் கதை யின் தர்க்கம் விரிக்கப்பட்டு 90 நிமிடமாக சினிமாத்தியேட்டர்களில் முழு நீளச்சினிமாவாக வெளியாகியது.

விவரணப்படங்கள் இவைகளில் நின்று வித்தியாச மானது. குறும்படங்களிலும் முழுநீளக்கதைப்படங்களிலும் பாத்திரங்களின் மனோவியல் பரிமாணம் பற்றிய வியாக்கியானங் களும், கற்பனைகளும், கதைகளும் இடம் பெறும். இங்கு யதார்த்தத்தை மீறிய கட்டப்பட்ட யதார்த்தம் இடம் பெறுகிறது.

விவரணப்படம் யதார்த்தத் தின் மீது, கட்டுக்கதைகள் தவிர்த்த நிஜங்களின் மீது கட்டப்பட்டது. பல்வேறு அறிவுத்துறை ஆய் வின் அடிப்படைகளின் மீது விவரணப்படங்கள் அமைகின்றன.


உதாரணமாக அமெரிக்க மானுட வியலாளர் ஒருவரின் நோக்கில் சொல்லப்பட்ட இலங்கைத்தமிழர் வாழ்வில் வன்முறையும் சுயசித்திரவதையும் பற்றிய Dance of Kali என்கிற படத்தை சொல்லலாம்.

மேற்கு நாடுகளின் History Channel அல்லது Travel Channel ல் வரும் படங்களையும், போல் பொட் அல்லது ஸ்டா லின் காலச்சாவுகள் பற்றிய படங்களையும் இவ்வகையில் சொல்லலாம்.

சில படங்கள் இந்த வரையறை யையும் கூடக்கடந்து கதைப்படங்களின் தன்மைகளையும் விவரணப்படத்தன்மை களையும் ஒருங்கே பெற்று படைப்புத் தன்மையை எய்துகின்றன.

உதாரணத்திற்கு : Welcome to Canada என்னும் படம் இதில் விவரணப்படமும் கதையும் ஊசலாடி வருகின்றன. இத்தகைய படங்களைச்செய்ய நிறைந்த வரலாற்று ஞானமும் தத்துவ தரிசனமும் தேவைப்படு கின்றன.

சில படங்கள் பிரச்சாரத்திற் கென்றே எடுக்கப்படுகின்றன. சில குறிப்பிட்ட கால இலக்கு நோக்கி எடுக்கப்படு கின்றவை. இந்திய அரசின் செய்திப்படங்க ளையோ பிரிட்டிஸ் அரசாங்கத்தின் போர்க்காலச்செய்திப் படங்களையோ இந்த நோக்கில் பார்க்கலாம். இந்தியாபிரிட்டனில் தேர்தல் காலத்தில் எடுக்கும் படங்களை இவ்வகையில் சேர்க்கலாம்.



நம்மிடையே சிறுகதை களையும் நாவல்களையும் சில கூர்மையான பிரச்சனை களையும் வைத்து எடுக்கும் படங்கள் குறும் படங்கள் என பார்க்கும் பார்வை ஒன்றுள்ளது.

இப்பிரச்சினையை நாம் மகேந்திரன் படங்களைப்பேசுவதன் மூலம் தீர்க்க முனையலாம்.

சிற்றன்னை எனும் குறுநாவலில் பாதிப்பில் உருவானது உதிரிப்பூக்கள்.

பூட்டாத பூட்டுக்கள் குறுநாவல். கந்தர் வனின் சிறுகதையின் பாதிப்பில் உருவாகி வருவது சாசனம். உமாச்சந்திரனின் நாவல் முள்ளும் மலரும் படமாகியது.

வேறுவேறு இலக்கிய வடிவங்களை ஆதாரமாகக் கொண்டிருந்தாலும் கூட அந்தப் படைப்பின் கருத்துக்களின் தர்க்க நீட்சியாகவே மகேந்திரனின் படங்கள் அமைகின்றன. அதா வது முழுவாழ்வும் தழுவியதாக 2.30 மணியி லிருந்து 3 மணி நேரம் ஓடுவதாக படம் அமை கிறது.

பாலுமகேந்திராவின் வீடு பட்மும் இத்தகையது தான் தமிழகத் தொலைக் காட்சித்தொடர்களில் கையளவு மனசினை முழுநீளப் படத்தன்மை கொண்டதாகவும் சுஹாசினியின் பெண் வகைப்படைப்புக்களை குறும்படங்கள் எனும் அளவிலும் காணலாம்.

குறும்படங்களிலும் தொலைக்காட்சிப் படங்களிலும் மேற்கில் பிரக்ஞை பூர்வமாகச்சில வியங்கள் கையாளப்படுகின்றன. குறும்படங் களில் இடம் பெறும் மனிதர்களும் அவர்களது செயல்களும் குளோஸ்ப் ஸாட்களிலேயே இடம் பெறுகிறார்கள்/ பெறுகின்றன.

நம் சினிமா பற்றிய முயற்சிகளில் இறங்கும் முன்பாக நமது படைப்பின் தன்மைகளை சரியாகத்தீர்மானித்துக்கொள்ள வேண்டும். அது குறும்படமா, முழுநீளப்படமா, விவரணப்படமா என்பதற்கேற்ப முன் கூட்டியே நாம் வேலைகளை செய்துகொள்ள வேண்டி இருக்கிறது.ஸ்கிரிப்ட், கமெரா, கோணம், இசை, மௌன இடைவெளி, ஒளி, ஒலி போன்றன பற்றிய முன் கூட்டிய அவதானங்களை நாம் வடிவமைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

இதற்குப்பின் வரலாற் றாய்வு, உடை, ஒப்பனை, இடம், இயற்கை, காலம், இயற்கை சம்பவங்கள் போன்றவற்றை பொருத்தத்துடன் கையாள வேண்டியிருக்கிறது.

ஆகவே எந்த வகையான சினிமா முயற்ச்சியையும் மேற்கொள்வதற்கு முன் சுய தேர்வும் சுய படிப்பும் வடிவம் சம்பந்தமான தீர்மானமான வரையறைகளும் தேவைப்படு கின்றது. இத்தகைய அறிவு பூர்வமான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு ஒப்பவே படைப்பும் தெளிவாகவும் அழகாகவும் உருவாகும்.

யமுனா ராஜேந்திரன்
நன்றி : புகலிடத்தமிழ் சினிமா




## இது கலைவாணரின் கருத்து

எழுத்தாளர்கள் தங்கள் பேனாவை எப்படியான மையில் தொட்டு எழுதுகிறார்கள்?
சிலர் பெரு'மை'யில் தொட்டும்,
சிலர் பொறா'மை'யில் மூழ்கியும்
சிலர் பொய்'மை'யில் ஆழ்ந்தும்,
இன்னும் பலர் பழ'மை',தய'மை',
அறியா'மை' போன்றவற்றில் ஊறிநின்றும் எழுதுகிறார்கள்.
உண்மையான நல்ல எழுத்தாளன் உரி'மை' பது'மை' உண்'மை' பொறு'மை' வறு'மை' ஆகிய மைகளிலேயே தொட்டு எழுதுகின்றான்.

N.S. கிருஷ்ணன்.

## இது 'தேனுகா'வின் கதை

**நன்றிக்கடன்**

**மண்டபம் நிரம்பியிருந்தது,**
**பேச்சாளர் பேசிக்கொண்டிருந்த விடயத் தலைப்பு நன்றிக்கடன்.**
**மண்டபத்தில் இருந்தோர் அவரது பேச்சில் ஆழ்ந்து லயித்திருந்தனர். தலையையாட்டி ரசித்தனர்.**
**ஒலிப்பதிவு நாடாவில் பதிவுசெய்தனர். கைதட்டிப் பாராட்டினர்.**
**பேச்சு முடிந்ததும் நன்றி கூறல் உரை ஆரம்பமாக இருந்தது.**
**நன்றி தெரிவிக்க ஒருவர் மேடை ஏறினார். அவரது உரையைக்கேட்க பேச்சாளரைத் தவிர மண்டபத்தில் எவரும் இருக்கவில்லை.**

## இது தமிழ்வாணியின் கவிப் பொறி

**உண(ர)வு**

**பசியால் வருந்திய**
**பிச்சைக்காரனின்**
**பயங்கரத் தோற்றம்**
**அடம் பிடித்து உண்ண மறுத்த**
**குழந்தையை அடக்க வந்த**
**பூச்சாண்டியாயிற்று.....**

## இது மார்க்ஸிம் கார்க்கியின் அறிவுரை

"நீ கூறப்போகும் வார்த்தைகள்
மௌனத்தை
விடவும் சிறந்தது என்பதை
உறுதிசெய்யும்வரை
வாயைத்திறக்கவே
திறக்காதே......"

## இது சோக்கிரட்டீஸின் விளக்கம்

**சோக்கிரட்டீஸின் சீடரான கிரீட்டோ**
**தன் குருவிடம்**
**உங்களை எப்படி அடக்கம் செய்ய**
**வேண்டும் என்று கேட்டார்.**
**அதற்கு அவர்- முதலில்**
**உண்மையான என்னை நீ**
**கண்டுபிடித்தாக வேண்டும்.....**
**இப்போது நீ எனது**
**உடலை புதைப்பது பற்றித்தானே**
**கேட்கிறாய். வழ்க்கம்**
**எப்படியோ அதனைப் போலவே செய்**
**என்றார்.**

**பொறுக்கி**

# நெற்செய்கையில் தாவர சிலிக்கனின் முக்கியத்துவம்




**சிலிக்கனானது** புவியோட்டில் 28% மேல் பல்வேறு சிக்கலான கனிப்பொருட்களில் காணப்படுகின்றது. இதன் காரணமாக சிலிக்கன் பற்றாக்குறை வயல் நிலங்களில் பொதுவாக ஏற்படுவதில்லை என நம்பப்படுகிறது. அத்துடன் சிலிக்கனானது நெற்பயிருக்கு அத்தியாவசியமான மூலமாக கொள்ளப்படாவிட்டாலும் நெற்பயிரின் அதிகரித்த விளைச்சலைப் பெறுவதற்கு சிலிக்கன் முக்கியமான ஒரு கனிப்பொருளாகும்.

தொடர்ச்சியாக ஒத்த முகாமைத்துவத்துடன் மேற்கொள்ளப்படும் நெற்செய்கையானது நிலத்திலிருந்து சிலிக்கன் அகற்றலை அதிகரிக்கிறது. பொதுவாக ஹெக்ரயருக்கு 5000Kg நெல் உற்பத்தி செய்யப்படும் போது 230 - 470Kg சிலிக்கனானது வயலிலிருந்து அகற்றப்படுகிறது. பல்வேறு நெல் ஆராய்ச்சியாளர்களால் தாவரத்துக்கு கிடைக்கும் சிலிக்கனின் அளவு குறைவடைந்து நெல்லின் விளைச்சலை பாதிக்கும் என்பது அறியப்பட்டுள்ளது.

நெற்பயிரின் மட்டம் வெடிக்கும் பருவத்திலிருந்து வளர்ச்சிப் பருவம் வரை போதுமான அளவு சிலிக்கன் வளங்கலானது கதிர்களின் எண்ணிக்கை, கதிரிலுள்ள நெல்மணிகளின் எண்ணிக்கை, முதிர்வடையும் செல்மணிகளின் வீதம் ஆகியவற்றை அதிகரிக்கிறது.

சிலிக்கனானது நெற்பூச்சி பீடைகளின் தாக்கம் அதாவது தண்டு துளைப்பான், தாவரதத்திகள், பங்கசு நோய்களான எரிபந்தம், கபிலபுள்ளி, இலை வெளிறல், நெல்மணிகளின் நிறமாற்றம் ஆகிய தாக்கங்களை குறைப்பதாகவும் அறியப்பட்டுள்ளது. அமில மண்களில் சிலிக்கனின் பிரயோகமானது அலுமினியம், இரும்பு, மங்கனஸ் ஆகியவற்றின் நஞ்சாக்கத்தை குறைக்கிறது. அத்துடன் தாழ்நில நெற்செய்கையில் மிகையான நைதரசன் பிரயோகத்தால் நெற்பயிர் முறிவடைவதை தடுக்கிறது.

நீர்ப்பாசனம் மூலம் மேற்கொள்ளப்படும் நெற்செய்கையிலிருந்து நிலையான விளைச்சலைப் பெறுவதற்கு சிலிக்கன் வளமாக்கிப் பிரயோகம் அத்தியாவசியமாகும். இப் பிரயோகமானது மண்ணின் நைதரசன் சமநிலையைப் பேணுவதுடன் பொசுபரசு, பொட்டாசியம் ஆகியன தாவரத்தினால் சிறப்பாக பயன்படுத்தப்பட உதவுகிறது.



நெற்பயிரின் வைக்கோல், உமி ஆகியவை ஏனைய பாகங்களிலும் கூடியளவில் சிலிக்கனை கொண்டதாகும். வைக்கோலானது 1.7 தொடக்கம் 9.3 வீதம் சிலிக்கனைக் கொண்டுள்ளது. இப் பெறுமதியானது மண், நீர்ப்பாசனத்திற்குப் பயன்படுத்தப்படும் நீரின் தரம், வழங்கப்படும் நீரின் அளவு, நெல்லின் பேதங்கள், காலநிலை என்பவற்றில் தங்கியுள்ளது. உமியானது மண்ணின் வளமாக்கியாகப் பயன்படுத்தப்படுகிறது. அத்துடன் வைக்கோலானது மண்ணிற்கு நைதரசன் அல்லது சேதன காபன் வளங்கியாகவும் மண்ணின் பௌதீக கட்டமைப்பை மேம்படுத்தவும் பயன்படுத்தப்படுகின்றதாயினும் சிலிக்கனை மண்ணுக்கு வழங்கும் தேவைக்காக சேர்க்கப்படுவதில்லை.

பொதுவாக தென்னாசிய, தென்கிழக்காசிய நாடுகளில் நெல் அறுவடை மனித வளத்தைப் பயன்படுத்தியே மேற்கொள்ளப்படுகிறது. இதன்போது சிறு அளவான நெல்லின் தண்டு, வேர்ப்பகுதியே மண்ணில் மிகுதியாக விடப்படுகிறது. இதனால் அதிகளவு சிலிக்கன் இழக்கப்படுகிறது. அறுவடையின் பின் வைக்கோலை வயல் நிலத்தில் எரிப்பதன் மூலம் அதிகளவான சிலிக்கனை பயிர்களுக்குவழங்க முடியும்.

பொதுவாக நெல் குற்றும் ஆலைகளில் எரி பொருளாக உமி பயன்படுத்தப்படுகிறது. இதன்போது பெறப்படும் சாம்பலானது, பயிரால் பயன்படுத்தக்கூடிய சிலிக்கனைக் கொண்டது.

இலங்கையில் செய்யப்பட்ட ஆய்வில் IR 8 நெல்லினமானது, ஒரு ஹெக்ரயருக்கு 0.74 தொன் உமிச் சாம்பலுடன் சிபார்சு செய்யப்பட்ட அளவில் நைதரசன், பொசுபரசு, பொட்டாசியம் இடப்படும் போது, 1 - 1.4 தொன் அதிக விளைச்சளைக் கொடுத்துள்ளது. ஆயினும், மேலும் அதிகமாக இடப்படும்போது, விளைச்சல் குறைவடைவது அவதானிக்கப்பட்டுள்ளது.

நெல் நாற்று உற்பத்தியில் - ஒரு சதுர மீற்றருக்கு 0.5-1.0Kg உமிச்சாம்பல் இடுவதன் மூலம் வளமான நாற்றுக்களைப் பெற்றுக்கொள்ளமுடியும். நாற்றுமேடைக்கு உமிச்சாம்பல் இடுவதன் மூலம், பொசுபரசு, பொட்டாசியம், சிலிக்கன் என்பவற்றின் அளவு அதிகரிப்பதால், நெல்நாற்றில் ஏற்படும் எரிபந்தத்தின் தாக்கத்தைக குறைப்பதுடன், நாற்று நடுகையின் பின் தண்டு துளைப்பானின் தாக்கத்தையும் குறைக்கிறது. எனவே, உமிச்சாம்பலை நெல்வயல்களுக்கு இட்டு நெற்பயிரின் விளைச்சளைக் கூட்டுவோம்.

**V. ஜெயச்சந்திரன்**


வெள்ளிநாதத்தை இலங்கை எங்கிலும் பெற
வெள்ளிநாதத்தின்சந்தாதாரராகுங்கள்
ஆண்டுச்சந்தா 750/=
அரையாண்டுச்சந்தா 400/=
தபால் மூலம் எல்லா இடங்களிற்கும் அனுப்பி வைக்கப்படும்

சகல விதமான
அச்சுப்பதிப்புகளுக்கும் நாடவேண்டிய இடம்
அழகன் பதிப்பகம்
யாழ் சாலை, கிளிநொச்சி.

வெள்ளிநாதம் விளம்பரக் கட்டணம்


| | கறுப்பு வெள்ளை | வர்ணம் |
|---|---|---|
| 1பக்கம் | 12000/= | 20000/= |
| அரைப்பக்கம் | 6000/= | 10000/= |
| காற் பக்கம் | 3000/= | 5000/= |
| ஒரு கொலம் 1cm | 60/= | 100/= |

3 வது பிறந்தநாள் வாழ்த்து

புங்குடுதீவு 3ம் வட்டாரத்தை சொந்த இடமாகவும் தற்போது மல்லாவியில் வசித்து வரும் வரததாசன் விவேகானந்தி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரன் பிரதாபன் (பானு) 8-11-2003 நாளை தனது மூன்றாவது பிறந்த நாளை மல்லாவியில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமர்சையாகக்கொண்டாடுகின்றார்.
இவரை அம்மா, அப்பா, அப்பம்மா, அம்மம்மா, மாமாமார், அத்தைமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், குட்டிச்சித்தப்பா, (போராளிஅறிவு) சித்திமார் மற்றும் மச்சான்மார், விஜிக்குட்டி, சானுக்குட்டி, சரன்குட்டி, அருண்குட்டி, கிருபாக்குட்டி, பிரவின்குட்டி, மச்சாள்மார்களான லுகிகுட்டி, பகிகுட்டி, கீதாக்குட்டி, அண்ணைமார், புவிதாசன், சிவபாலன், மிதுசன், தம்பிமார் கோகிலன்குட்டி, சாகித்திக்குட்டி மற்றும் உற்றார் உறவினர்கள் பிரதாபனை பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் மல்லாவி பால முருகன் துணையோடு அருள் பெற்று வாழவாழ்த்துகிறார்கள்.

08-11-2003

வரதன் ஆனந்தி,
குடும்பத்தினர்,
சிவன் பழக்கடை,
இன்பமகன் ம.பொ. வாணிபம்,
மல்லாவி.



வ. பிரதாபன் (பானு)

(3146)

# இரண்டாம் ஆண்டு நினைவு நாள்


## கப்டன் பருதியப்பன்

தாய்மடி முத்தாக 17.04.1974 — தாய்மண் வித்தாக 11.11.2001

### (செல்லப்பா சிவகுமார்)



பள்ளிப் பருவங்களில் துள்ளித் திரிந்த சூரப் புலியே
நீ தாயை நேசித்ததால் தாய் நாட்டையும் நேசித்தாய்
அதற்காக உழைத்து இன்று வீர
மறவனாம் கல்லறையில் உறங்கிக் கொண்டிருக்கின்றாய்
நீ வித்தாகி இரண்டு ஆண்டுகள் சென்றாலும்
உன் நினைவுகள் என்றும் எம்
நெஞ்சை விட்டகலாது.



பலாலி கிழக்கு,
பலாலி.


உன் நினைவுடன்,
குடும்பத்தினர்.

இவருடன் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட லெப்.கேணல் சிவனேசன்,
கப்டன் தூயோன்,கப்டன் ரூபன் ஆகியோரையும் இன் நாளில் நினைவு கூருகின்றோம்.

(3147)

# சலுகை விலையில் மண் வளம் பெருக்கி ஜிப்சைற்- 60 பிளஸ்

துரித செயற்பாடுடைய
மண் வளம் பெருக்கி




ஜிப்சைற் –60 பிளஸ்

### அதிக விளைச்சலுக்கு எல்லா ஊட்டச்சத்துக்கள் 12ம் தேவை

அதிக விளைச்சலைப் பெற என்.பி.கே (N.P.K) மட்டும் போதாது. கல்சியம்(ca) மக்னீசியம்(Mg) கந்தகம்(S) உடன் 6 சுவட்டு மூலகங்களும் போரான்(B) செம்பு(Cu) இரும்பு(Ni) பெரஸ்(Fe) மங்கனிஸ் (Mn) சிங்க்(Zn) ஆகியவை கட்டாயமாகத் தேவையென இந்திய தொழில் நுட்ப நிபுணர்கள் தெரிவிக்கின்றார்கள்.

30%-45% வரை

### மண்வளம் குன்றியுள்ளது:-

1970-1975 காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது இப்பொழுது 30%-45% மண்வளம் மிகவும் குன்றியுள்ளது.

இதற்குக் காரணம்.

1. போதிய அளவு இயற்கை உரங்கள் (தாவர உரம்,எருவகை, கூட்டெரு) போன்றவற்றைப் பாவிக்கத் தவறியமை.
2. செயற்கை இரசாயன உரங்கள் (யூரியா,அமோனியா ,பொஸ்பேட்) போன்றவற்றை அளவுக்கு அதிகமாகப் பாவித்தமை மற்றய காரணம்.

### உவர் அமிலம்-1970ல் உப்பள ஜிப்சம்

திரு.P.மாணிக்கவாசகர் D.A.E.O ஆக 1970 இல் யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்த போது, Solten "Gypsum" உப்பள "ஜிப்சம்" உவர் அமிலத் தன்மையைமண்ணில் இருந்து நீக்குவதற்காகப் பாவிக்கும்படி சிபாரிசு செய்திருந்தார். பல விவசாயிகளும் "ஜிப்சம்" பாவித்து நல்ல பலனைப் பெற்றனர்.

# Agricol's

### 1988 ஆம் ஆண்டு மண் பரிசோதனை மக்னீசியப் பற்றாக்குறை

1988 ஆம் ஆண்டு கிளிநொச்சி,மன்னார் ஆகிய வயல் நிலங்களில் மண் பரிசோதனை செய்த போது மண்ணில் உவர்த்தன்மை,அமிலத் தன்மையுடன் மக்னீசியப் பற்றாக்குறையும் அநேகமான வயல் நிலங்களில் காணப்பட்டன.

### மக்னீசியம் சேர்க்கப்பட்ட உரக் கலவைகள் பாவித்ததால் அதிக விளைச்சல்

இலங்கை உரக் கூட்டுஸ்தாபனம் 1988,1989 ஆம் ஆண்டுகளில் வடமாகாண விவசாயிகளுக்கு(அனுராதபுரத்தில்) மக்னீசியம் சேர்க்கப்பட்ட ஜிப்சம் மண் வளமாக்கி 1. Gypsate (soil Conditioner) 2. Mg.S.யூரியா 3. Mgs. T.D.M ஆகிய உரக் கலவைகள் அதிக அளவு தயாரித்து அக்றி கோலஸ் மூலம் சந்தைப்படுத்தினார்கள். கிளிநொச்சி, பரந்தன், விஸ்வமடு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் விவசாயிகள் இவற்றைப் பாவித்துச் சிறந்த விளைச்சலைப் பெற்றனர்.

### மீண்டும் மண் பரிசோதனையில் இரும்புச் சத்துச் செறிவு

2002 ஆம் ஆண்டு கிளிநொச்சி , மன்னார் ஆகிய இடங்களில் மண் பரிசோதனையில் மக்னீசியப் பற்றாக்குறையுடன் இரும்புச் சத்துச் செறிவு (iron-Toxide) அநேகமான மண்ணில் காணப்பட்டன. மண் ஆய்வு நிபுணர் மண் வளம் பெருக்கி அக்றிகோலாஸ்,ஜிப்சைற்-60 பிளஸ் ஐ பாவிப்பதற்குச் சிபாரிசு செய்துள்ளார்

### இந்தியாவிலிருந்து தூய ஜிப்சம் இறக்குமதி

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உயர்தர தூய ஜிப்சம் (98.6%) Minaral Gypsum உடன் மக்னீசியம் (கொழும்பு கொமேர்சல் கொம்பனியால்) சேர்ந்து தயாரிக்கப்பட்ட
மண்வளம் பெருக்கி
Gypsate-60 plus
(Ca-19%,Mg-7%, S-27%+9T.E)

**13 ஆண்டுகளுக்குப் பின் வடமாகாணத்தில் சலுகை விலையில் இப்போது கிடைக்கிறது -ஜிப்சைற் –60 பிளஸ்**

முக்கிய கவனிப்பு :- மண்வளம் பெருக்கி ஜிப்சைற் பாவிக்கும் போது (1) 1 அடி உரம் (2) 1வது மேல் உரம் (3) 2வது மேல் உரம் குறைவாகவே பயிருக்குத் தேவைப்படும் இக்கலவை உரங்கள் குறைவாகவே பாவிக்கவும்.

### ஜிப்சைற் -60 பிளஸ் சிபாரிசுகள்

1. நெல் வயலில்:- 2ஆம் உளவில் அல்லது கடைசி உளவில் 1 1/2 அந்தர் பாவிக்கவும்.(1 ஏக்கருக்கு)
2. மேட்டு நிலப் பயிர்களுக்கு:- 2ஆம் உளவில் அல்லது கடைசி உளவில் 1அந்தர் வீதம் பாவிக்கவும்(1 ஏக்கருக்கு)

**சிறந்த விளைச்சலுக்குக் கலவை உரங்களுடன் ஜிப்சைற்-60 பிளஸ் சேர்ந்து பாவிக்கலாம்.**

சலுகை விலையில் வன்னியில்
ஜிப்சைற்-60 பிளஸ்
50Kg-600/= 25Kg -315/=

கிளிநொச்சி,முல்லை,கையிருப்பாளர்கள்:-
பசுமை வேளாண் சேவை

**கிளிநொச்சியில்**
கிளிநகர், கந்தபுரம்
முழங்காவில், முரசுமோட்டை ,வட்டக்கச்சி,
உருத்திரபுரம்.

**முல்லைத்தீவில்**
புதுக்குடியிருப்பு, முள்ளியவளை,
கற்சிலைமடு, விஸ்வமடு,முத்தயன்கட்டு,
துணுக்காய்

**வவுனியாவில்**
கனகராயன்குளம், நெடுங்கேணி
மற்றும் விற்பனையாளர்கள்
திண்ணன் வேளாண்பொருள் வாணிபம்
(சுபாஜினி ரேடர்ஸ்)
யாழ் வீதி,
கிளிநொச்சி. கந்தபுரம் சந்தி,
கந்தபுரம்.

**யாழ்ப்பாணத்தில் கையிருப்பாளர்:-**
பவானி ஸ்ரேரர்ஸ்
கரந்தன்,
நீர்வேலி.

**வவுனியாவில் கையிருப்பாளர்:-**
ஈசன்
27,பசார் வீதி,
வவுனியா.

**வடமராட்சியில் விற்பனையாளர்:-**
T.துரைராஜா,
அக்றிகோலஸ் ஏஜென்சி,
மயிலியதனை, தொண்டமானாறு.

உங்கள் வியாபாரிகளிடம் பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம்.

**இறக்குமதியாளர்:-**
**அக்றிகோலஸ்**
46, பழைய சோனகத் தெரு, கொழும்பு-12
Tel-2325577, 0777624580

(சி-8684)

படைப்பாளிகளிடமிருந்து வெள்ளிநாதத்திற்கு ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகிறது.

- சிறுகதை
- பயண அனுபவங்கள்
- கவிதை
- கள அனுபவங்கள்
- கட்டுரை

என உங்களால் வெள்ளிநாதத்தை அலங்கரிக்க கூடிய வகையில் எழுதப்படும் ஆக்கங்களை எமக்கு அனுப்பி வையுங்கள்.

நீங்கள் ஆக்கங்களை அனுப்பவேண்டிய முகவரி:
ஆசிரியர்,
வெள்ளிநாதம்,
யாழ்சாலை, கிளிநொச்சி.


## நேர்முகத்தேர்வுக்கான அழைப்பு

ஈழநாதம் செய்தித்தாளில் வெளியிடப்பட்ட விளம்பர எண்: 600க்கு அமைவாக பணிநிலைகளுக்கு வேண்டுகைகள் செலுத்தியோருக்கான, நேர்முகத்தேர்வு கீழ்வரும் விரிப்புப்படி நடைபெறும்.

நாள்: 10-11-2003
நேரம்: மு.ப. 10.00 மணி
இடம்: பாண்டியன்வாணிபக் கட்டடத்தொகுதி, கரடிப்போக்குச்சந்தி.

குறிப்பு: தனிப்பட்ட அழைப்புக்கள் அனுப்பி வைக்கப்படமாட்டாது.

ஆளுகை,
பாண்டியன் வாணிபம்.

(சி-8801)


## சண்முகபாலன் நினைவில்...

### 45ம் நாள்

### தியாகர் சண்முகபாலன்

(41/5அம்பலவாணர் வீதி, அத்தியடி,யாழ்ப்பாணம்)

பிறப்பு
29-12-1979

வாழும் வயது உனக்கிருக்க
வாழாமல் எங்கு போனாய்
வாசங்கள் வீசவேண்டிய - உன்
வாழ்வில் புயல்வீசிப்போனதோ...?


இறப்பு
28-09-2003



பணிப்பாளர்,
பணியாளர்கள்,
ஈழநாதம்.

SM Graphics (இ)

## 45ம் நாள் நினைவஞ்சலி



### சண்முகநாதன் செந்தில்நாதன்

(செந்தில்)

மண்ணில்
1979-11-04

விண்ணில்
2003-09-28

மாம்பழத்திநுள்ளே வண்டு — சென்றதை
யார் சொல்வார் கண்டு.
இன்னல்கள் கண்டும் இதயம் சோராது!
கடமையில் கண்ணாயிருந்தவுன்னை
பாரினில் வாழாது பாதியில் பறித்த காலனுக்கு
கண்ணுமில்லை எங்கள் கண்களில் இனி
கண்ணீருமில்லை நண்பா!

கடந்த 28-09-2003 அன்று கிளிநொச்சியில் அகால மரணமடைந்த அமரர் சண்முகநாதன் செந்தில்நாதன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 09-11-2003 ஞாயிற்றுக்கிழமை முகத்துவாரத்திலும் சபிண்டீகரண வீட்டுக்கிரியைகள் 11-11-2003 செவ்வாய்க்கிழமை அன்னாரின் நீர்கொழும்பு இல்லத்திலும் நடைபெறும்.

துயர் பகிர்வோர்

**தும்பிக்கையான் களஞ்சியம்**
உரிமையாளர்களும், ஊழியர்களும்
இல :- 117, யாழ்சாலை, கிளிநொச்சி.

**ரூபா பன்முக வர்த்தகம்,**
இல104A, ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம்.

**சிறி விக்னேஸ்வரா களஞ்சியம்,**
இல 150, கண்டி வீதி,சாவகச்சேரி.

(சி-8802) SM Graphics

● **அனுமாரே வணக்கம்! கிளிநொச்சிக்கு கயசில் வந்த சிங்கள இளைஞர்களின் ஆயுத 'ஒப்படைப்புப்' பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

இரா.மாலா,
இளங்கோபுரம், றெட்பானா.


சண்டைக்காலத்தில் தான் புலிகளுக்கு ஆயுத வழங்கல் செய்கிறார்கள் என்றால் சமாதான காலத்திலுமா...?

● **அறிவுரை கூறிடும் அனுமாரே! ஆக்கங்களை எழுதி அனுப்பிவிட்டு பேப்பரில் பிரசுரமாகும்; வானொலியில் ஒலிபரப்பாகும் என எதிர்பார்த்து ஏமாந்து சோர்ந்து போகும் நேயர்களுக்கு நீர் ஓர் அறிவுரை கூறிவிடும்.**

செ.கானப்பிரியா,
மல்லாவி.

கண்ணதாசனின் சுய சரிதம் படிக்கக் கடவது.

● **அனுமாரே! காதலிக்கத் தொடங்கி கண்ணீருடன் இடறி கானல்**



# அனுமார் பதில்கள்

**ஆனது என் காதல் மட்டும் தான் என வேதனையுடன் புலம்புகின்றவர்களிற்கு தாங்கள் கூறுவது என்ன?**

பாலசிங்கம் - பவி,
ஆனைவிழுந்தான்.

சொஞ்சநாளில் சரி வந்துவிடும் மற்றவர்களைப் போல.

● **அனுமாரே! ஒரு பெண்ணைப் பார்த்தால் தூங்க முடியாது. அது ஏன் சொல்லுங்கள் பார்ப்போம்?**

த.பரன்,
முல்லைத்தீவு.

உமக்கு இப்பொழுது வயது பதினாறு என்று எல்லோருக்கும் காட்டிக் கொடுக்கிறீரே.

● **அன்பின் அனுமாரே! இன்றைய கவிஞர்கள் "மாத்தி யோசி மாத்தி யோசி" எனப் பாடல் இயற்றி குழப்புவதேன்?**

எஸ். வசந்தி,
வட்டக்கச்சி.

நாங்களும் அதைத்தான் இந்த சினிமாக்காரர்களிடம் கேட்கிறோம். அரைத்த மாவையே அரைத்து எங்கள் தலையில் தப்பாமல் 'மாத்தி யோசி, மாத்தி யோசி.'

● **ஒரு இரவுக்குள் சந்திரிகாவுக்கு என்ன நடந்தது?**

ராஜ்குமார்,
ஜெயந்திநகர்.

அனுமாரிடம் கேட்பதை விட கதிர்காமரிடம் கேட்டால் தான் கன விடயம் தெரியவரும்.

● **அனுமாரே! தான் ஆடா விட்டாலும் தன் தசை ஆடும் என்கிறார்களே. உண்மையா?**

ரவிசங்கர்,
வவுனியா.

அப்படி நம்பித்தான் ஆனந்த சங்கரியார் ரவிராச்சிடம் வந்தார், கணக்கேட்டில் லாபம் இல்லையென்றால் தசைவேறு தான்வேறு தான்.

● **ஒரு ஆண் தன் காதலியிடம் எதைச் சொல்லக் கூடாது?**

ஊர்மிலா,
ஊரெழு.

'நான் உன்னைக் காதலிக்கிறேன்' என்று.

● **மட்டக்களப்பு, அம்பாறைத் தீர்மானங்களை கண்டிக்குமாறு யாழ்ப்பாணத்தில் சங்கரியார் வேண்டிக் கொண்டாராமே?**

சிவகுரு,
நல்லூர்.

தொண்டர்கள் தலைவர்கள் பின்னால் திரிவார்கள். தலைவர்கள் தொண்டர்கள் பின்னால் திரியலாமோ. கலிகாலம்.. கலிகாலம்.

● **இப்பொழுது அதிக குஷியாக இருக்கும் அரசியல்வாதி யார்?**

மோகன்,
சங்கானை மேற்கு.

நீர் கேள்வி எழுதும்போது யாரோ நான் பதில் எழுதும் போது (சந்திரிகாவின் அறிவிப்பின் பின்) தேவானந்தா.

● **இந்தியத் தலைவர்கள் ஏன் சால்வையை மிக நீளமாகப் போடுகிறார்கள்.**

சுந்தர்,
கொட்டாஞ்சேனை.

சட்டசபையில் வேட்டியை யாரும் உரிந்து விட்டால் மாற்றிக் கட்ட வசதியாக இருக்கும்.

● **எல்லா தமிழ்க்கட்சிகளையும் அரவணைத்த புலிகள் ஏன் E.P.D.P.ஐ அரவணைக்க வில்லை?**

செந்தாமரை,
செட்டிகுளம்.

கைக்குட்டையை கச்சையாகப் பாவிக்கலாம். கச்சையைக் கைக்குட்டையாகப் பாவிக்கலாமோ?


● **அனுமாரே! நல்ல கிண்டல் ஒன்று தாருங்களேன்?**

க.சங்கீதன்,
இணுவில்,


யாரையும் கிண்டலடித்துப் பேசும் பெர்னார்ட்ஷோவை கேலிசெய்ய நினைத்த ஒருவர் தன்னுடைய நாடக அரங்கேற்று தினத்துக்கான இரு ரிக்கற்றுக்களை இணைத்து ஷாவுக்கு ஒரு கடிதம் எழுதினார். அக்கடிதத்தினையும் நுளைவுச் சீட்டினையும் பெற்ற ஷா பதில்க் கடிதம் எழுதினார்.

நாடக ஆசிரியர்: என் நாடகத்தை ஞாயிறு அன்று தயவு செய்து பாருங்கள் இத்துடன் அனுமதிச் சீட்டுக்கள் இணைத்துள்ளேன். ஒன்று உங்களுக்கு, மற்றது உங்கள் நண்பருக்கு. அவ்வாறு ஒருவர் இருந்தால்.

ஷா: உங்களது கடிதமும் நுளைவுச் சீட்டுக்களும் கிடைக்கப் பெற்றேன்.நன்றி. உங்களின் நாடகத்தை ஞாயிறு அன்று பார்க்க இயலாத நிலையில் உள்ளேன். திங்களன்று அதைப்பார்ப்பேன். அதுவரையும் நாடகம் நடந்தால். ●




## படத்திற்கு மெருகூட்டுங்கள் –42



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழுங்கப்படும்.

### படத்திற்கு மெருகூட்டுங்கள் –42

........................................................................

........................................................................

........................................................................

........................................................................

பெயர் : ..........................................................

முகவரி : ..........................................................

..........................................................

**ஈழநாதம்**
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –41



**எஸ்.கோகிலா,
இல.56,
ஆனந்தபுரம்,
கிளிநொச்சி.**

## பரிசுக்குரிய வரிகள்

களை பிடுங்கி கதிர் சுமந்து களைப்புற்றாலும்
கதிரவனுக்கு அடுத்தபடி நீதான் ஐயா
அயராது வியர்வை சிந்தி நீ பெற்ற ஒவ்வொரு மணியும் தான்
அகதி முதல் அரசனையும் வாழவைக்கிறதே உழவா!

## பாராட்டுக்குரிய வரிகள்

*சுதந்திர தமிழீழம் காணாத சுமையோடு
புலி மறவர்கள் மடிந்த மண்ணில்
தன்னிறைவு தரும் நெல் சுமையை
தாங்கிநிற்கும் மனிதா அது சுமையல்ல.*

க.சத்தியசீலன்,
வட்டக்கச்சி.

*சூட்டுக்களத்தில் நிற்கும் - நீ
தீர்வுப்பொதியை நம்பி - எம்
போர்க்களத்தை மறக்காதே
விரைவில் எம் கண்ணில் மண் போடுவான் எதிரி!*

க.வேந்தன்,
கரிப்பட்டமுறிப்பு.

*பொறக்கதிரை சுமந்து நடக்கின்ற புதல்வன் அவன்
சுமை தூக்கி செல்கிறான் சமூகம் மிளிரவென்று
அதைப்பார்க்கின்ற இந்த தனிப் பனையும் அறியும்
நன்றாய், இவன் தாயகத்து புதல்வன் என்று.*

ம.அருள்யோண்சன்,
த.போ.க.

*விவசாயத்தொழிலாளியே வீரத்தமிழ் மகனே
போர் என்றால் புலிக்களம் நீ
போர் புயல் நின்றால் வயல் களம் நீ - உன்னை
நெல்லுக்கட்ட விடாது மல்லுக்கட்ட அழைக்கிறது சிகலஉறுமய*

சு.பால்ராஜ்,
புதுக்குடியிருப்பு.

*வாழ்வின் கனத்த சுமையை - உந்தன்
முதுகுச்சுமை தெளிவாகக் காட்டுகிறது.
பள்ளி சென்று கல்வி கற்கும் பருவ வயதிலே அள்ளி
வைக்கோல் கற்றயை சுமக்குமிவன் ஓ... ஒரு தமிழ்மகன்.*

ந. பவித்திரா,
கிளிநொச்சி.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை **அருச்சுனா புகைப்படக் கலையகம்** வழங்குகின்றது.
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.

தன்னையே சார்ந்திருப்பதை விட, உறுதியாக ஆதரிக்கும் சார்பு, வேறெதுவும் இல்லை. - ஜான் கே

07-11-2003 அன்று
தனது நாலாவது அகவையில்
காலடி எடுத்துவைக்கும்......

# R.V பந்தல் சேவை

யாழ்முகவரி:-
விநாயகர் வீதி,
மயிலிட்டி.

இ.வி.பந்தல் பணி

வன்னி முகவரி:-
369/6 பரந்தன் வீதி,
தருமபுரம்.

உங்கள் இல்லங்களில் நடைபெறும்
திருமண வைபவங்களா?
பூப்புனித நீராட்டு விழாவா?
உடனே நீங்கள்
நாடவேண்டிய இடம்

R.V. காட்சியறை
R.V. பந்தல் சேவை
தர்மபுரம்

* உங்கள் வசதிக்கேற்ற பந்தல் ஒழுங்குகள்.
* ஒளி, ஒலி, ஜெனரேற்றர் மற்றும் மின் விசிறி, குளியல்த்தொட்டி வசதிகள்.
* வீடியோ, போட்டோ சேவை.
* சகல வகையான தளபாடப்பொருட்கள்.
* உங்களுக்கேற்ற உணவு வகைகள்.
* வாகன, பூசகர், தவில்க்கச்சேரி ஒழுங்குகள்.
* மலர் மாலைகள், அலங்காரம் செய்யும் வசதிகள். (மேக்கப்)
* கேக் ஐஸ்சிங்

R.V பந்தல் சேவை

இவை அனைத்துக்கும்



SM Graphics (சி-8600)

## முதலாம் ஆண்டு தணியாத நினைவு வரிகள்

### இறைஅன்பன் விக்கி ஐயா!



# அமரர் அமிர்தலிங்கம் விக்கினராஜா

பாரினில் வரவேற்பின் படி
20-04-1979

பரமன் அழைப்பின் படி
11-11-2002

பாரெங்கும் புகழ்பரப்பி
பக்குவமாய் உன்வாழ்வில்
பண்புதனை சொரிந்து நின்ற
பண்புருவே விக்கி சென்றதெங்கே?

பெற்றவர் சோதரர் எமக்கெல்லாம்
பெருமைகள் பலவும் தேடிச்சேர்த்து
உண்மையை உண்மையென்றே வாதிடும்
உயர்ந்த உன் கொள்கையும் கூட!

கருவினிலேயே கர்வமுடன்
கரணவாய் தனிலே பிறந்து
கர்வத்துடனேயே உன் வாழ்நாளும்
காரணம்! இது உன் தனிவழி.

ஐயகோ அங்கீகரிக்க முடியவில்லை
மரணம் என்பது இயற்கை என்பதை
சோதனையின் சாதனையோ
நிம்மதியில்லை இங்கெமக்கு.

விழிகள் கரைகின்றன வேதனை முடியுதே இல்லை
நேச நெஞ்சே உம் பாசஉறவுகளை தவிக்க விட்டு
தனிவழிதான் சென்ற காரணம் என்ன?
கண்ணீருக்கும் விலை இல்லை என்பது உம்
கடைசி நாளில் தான் தெரிகிறது...!

கல்லடுக்கி திருப்பணி செய் கோயிலுள்ளே
கடவுளை நாம் காணவில்லை! கண்ட தெய்வம்
நல்லொழுக்கம் அன்புருவாம் எம் சோதரனே
நாளுமுமை மனதிருத்தி போற்றுவோமே.

கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

சிவஸ்ரீ. அ. சிவலோகநாதக்குருக்கள்
நாகதம்பிரான் கோவில்
புளியம்பொக்கணை.

(சி-8599)

SM Graphics

இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு நவம்பர் மாதம் 07 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.